
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஒக்டோபர் 20 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 249 | October 20, Tuesday, 2020 | 20 பக்கங்கள் | 30/-

UNLIMITED YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம்
ரூ.249+வரிகள்
அழையுங்கள் #170#
4G
Sri Lanka Telecom Mobitel


உலக கொரோனா தொற்று 40 மில். ஆக அதிகரிப்பு 02


கொரோனாவைவிட ஆபத்தானதாக மாறும் போதைவஸ்து 05


சம்மாந்துறை அம்பாள் ஆலயம் தீ மிதிப்பு 09


சிட்டுக் குருவிகள் வருகையில் வீழ்ச்சி: 19

## தெஹிவளை வீடொன்றில் மறைந்திருந்த வேளை

# நேற்று அதிகாலை ரிஷாட் கைது



**அக்.27 வரை விளக்கமறியல்**

**ஷம்ஸ் பாஹிம்**

தெஹிவளை பகுதியிலுள்ள தொடர்மாடி வீடொன்றில் தலைமறைவாகியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதோடு அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பொதுமக்களின் பணத்தை தவறான முறையில் பயன்படுத்தல் மற்றும் தேர்தல் சட்ட திட்டங்களை மீறி கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களிப்பதற்காக இடம்பெயர்ந்தோரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தின் ஊடாக அழைத்து சென்ற குற்றச்சாட்டு தொடர்பில் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மாஅதிபர் 06

## தலைமறைவாக உதவிய 7 பேர் இதுவரை கைது



சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு உதவிய மருத்துவர் உட்பட 7 பேர் இதுவரை கைது 06

## தேசிய பட்டியல் வழங்காவிடின்

**அரசியலிலிருந்து ஓய்வு**



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை என்றால் அரசியலிலிருந்து ஓய்வு பெற முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க 06




டெங்கு ஒழிப்பு தொடர்பில் மக்களை அறிவூட்டும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் நிகழ்வு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியின் தலைமையில் இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

### அமர்வுகளை ஒத்திவைக்க எதிரணி கோரிக்கை;

## திட்டமிட்டவாறு பாராளுமன்றம் இன்று கூடும், 20ஆம் திருத்தம் நாளை

**ஷம்ஸ் பாஹிம்**



கொரோனா தொற்று பரவல் காரணமாக பாராளுமன்ற அமர்வுகளை பிற்போடுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எழுத்துமூலம் சபாநாயகரை கோரியுள்ள போதும் திட்டமிட்டவாறு இன்று பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் என குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் ராமநாதன் தினகரனுக்கு தெரிவித்தார். இவ்வாரம் திட்டமிட்டவாறு பாராளுமன்ற அமர்வுகளை தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு உட்பட்டதாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறிய அவர், 20 ஆவது திருத்தம் 06

### தனிமைப்படுத்தல்


## ஊரடங்கை மீறிய 302 பேர் கைது

ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 37 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஐந்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் 19 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு மீள் அறிவித்தல் வரை தொடர்ந்தும் 06

### பிரதமர் மஹிந்த தலைமையில்

## அலரி மாளிகையில் இன்று விசேட நவராத்திரி பூசை



நவராத்திரி பூசை கொண்டாட்டங்களில் நான்காவது நாளான இன்று 20 அலரி மாளிகையில் விசேட கொலு வைத்து பூசை வழிபாடுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் வைபவத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவார். மத விவகாரங்களுக்கான அமைச்சரவை அமைச்சராக இருக்கின்ற மஹிந்த ராஜபக்ஷ சகல 06

### அரை மணி நேரம் பொது விடயங்களில்

## விக்கினேஸ்வரன் – மாவை சந்தித்து பேச்சுவார்த்தை



தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சி.வி. விக்கினேஸ்வரனை அவரது நல்லூரிலுள்ள வாசஸ்தலத்தில் நேற்று முன்தினமிரவு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. 06

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## 3 சிறுவர்கள் ஆற்றில் மூழ்கி பரிதாப மரணம்

**சோகத்தில் மூழ்கியது ரங்வெடியாவ கிராமம்**

**தம்புள்ள தினகரன் ,மாத்தளை சுழற்சி நிருபர்கள்**

பாதுகாப்பற்ற விவசாயக் கிணறு ஒன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் நீரில் மூழ்கி உயிரிழந்த பரிதாப சம்பவம் ஒன்று நேற்று கலேவெல, ரங்வெடியாவ என்ற கிராமத்தில் 06

## இந்திய பிரதமர் – கூட்டமைப்பு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இடையிலான கலந்துரையாடலுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய பிரதமருடனான பேச்சுவார்த்தைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 06

### ரிஷாட் கைது விடயம்;

## மக்களை திசை திருப்பும் செயல் என்கிறார் வேலு



மக்களை திசை திருப்புவதற்காகவே ரிஷாட் பதியுதீனுக்கு எதிரான கைது வேட்டையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வேலுகுமார் நேற்றைய தினம் 06



கொரோனா தொற்று காரணமாக நீதி அமைச்சின் பொதுமக்கள் தினம் நேற்று ஒன்லைன் (online) ஊடாக இடம்பெற்றது. அமைச்சர் அலி சப்ரி மற்றும் அதிகாரிகள் ஒன்லைன் ஊடாக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதை காணலாம்.

## "800" திரைப்படத்திலிருந்து விலகிக்கொள்ளுங்கள்

### விஜய் சேதுபதிக்கு முரளிதரன் கடிதம்





'800' திரைப்படத்திலிருந்து விலகிக்கொள்ளுங்கள் என தனக்கு இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அனுப்பியுள்ள கடிதத்தை நடிகர் விஜய் சேதுபதி டுவிட்டரில் 06



**இனிமேல் நிகழ்வுகளுக்கு பொன்னாடை, மலர்மாலை வேண்டாம், அதற்காக செலவாகும் பணத்தை பிள்ளைகளின் கல்விக்கு பயன் படுத்துங்கள்– ஜீ வன் ..... விமர்சிக்க வார்த்தைகளே இல்லை...!! இந்தத் தம்பி பத்து வருஷத்துக்கு முதலிலே வந்திருந்தா....**

## பிள்ளையானுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

### கொரோனா காரணமாக நவம்பரில் விசாரணை



பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு கொரோனா 06


### கொரோனா தொற்றியவர்களில்

## பெரும்பாலானவர்களுக்கு அறிகுறிகள் காட்டவில்லை

பிரண்டிக்ஸ் கொத்தணி கொரோனா தொற்று உறுதியான 2100 பேரில் பெரும்பாலானவர்களுக்கு எந்தவித அறிகுறியும் காட்டவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே, 06

### நடிகர் விஜய் சேதுபதிக்கு

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கை



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் வாழ்க்கை வரலாற்று திரைப்படமான '800' இல் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கும் தென்னிந்திய நடிகர் விஜய் சேதுபதி குறித்த படத்தில் இருந்து விலகிக்கொள்ள 06

# சர்வதேச செய்திகள்

## உலக கொரோனா தொற்று 40 மில்லியனாக அதிகரிப்பு

### நோய் பரவல் வேகம் நாளுக்கு நாள் உயர்வு



உலகெங்கும் கொரோனா தொற்று சம்பவங்களின் எண்ணிக்கை நேற்று 40 மில்லியனைத் தொட்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் புள்ளிவிபரம் காட்டுகிறது. பூமியின் வடக்கு பகுதியில் குளிர்காலம் ஆரம்பித்திருக்கும் நிலையில் அங்கு வைரஸ் பரவலும் வேகமடைந்துள்ளது.

தனிப்பட்ட நாடுகளின் உத்தியோகபூர்வ அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே ரோய்ட்டர்ஸின் எண்ணிக்கை வெளியாகியுள்ளது. எனினும் நோய்த் தொற்றுச் சம்பவங்கள் மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை உத்தியோகபூர்வ எண்ணிக்கைகளை விடவும் பல மடங்கு அதிகமாக இருப்பதாக நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

சில நாடுகள் குறைவான சோதனை மற்றும் எண்ணிக்கையை குறைத்து அறிவிக்கின்றன என்று குற்றம்சாட்டப்படுகிறது.

எனினும் ரோய்ட்டர்ஸ் புள்ளிவிபரத்தின் படி கொரோனா தொற்று வேகம் தொடர்ந்து அதிகரித்து வருவது தெரிகிறது. உலக கொரோனா தொற்று 30 மில்லியனில் இருந்து 40 மில்லியனைத் தொட 32 நாட்கள் எடுத்துள்ளது. அது 20 மில்லியனில் இருந்து 30 மில்லியனைத் தொடுவதற்கு 38 நாட்களும் 10 மில்லியனில் இருந்து 20 மில்லியனைத் தொட 44 நாட்களும் எடுத்துக் கொண்டுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த ஜனவரி ஆரம்பத்தில் முதல் கொரோனா சம்பவம் அறிவிக்கப்பட்டு அது 10 மில்லியனை எட்டுவதற்கு மூன்று மாதங்கள் சென்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு நாளில் அதிகபட்ச நோய்த் தொற்று எண்ணிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பதிவாகி இருந்தது. அப்போது முதல் முறை புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் 400,000 ஐ தாண்டியது.

கடந்த வாரத்தில் உலகெங்கும் சராசரியாக ஒரு நாளைக்கு சுமார் 347,000 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருந்தன. இதுவே ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் நாளைக்கு 292,000 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அமெரிக்கா, இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய மூன்று நாடுகளும் தொடர்ந்து மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளாக உள்ளன. உலக நோய்த் தொற்று சம்பவங்களில் 47.27 வீதமானது வடக்கும், மத்திய மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்களிலேயே பதிவாகியுள்ளன.

அமெரிக்காவில் 10,000 பேருக்கு சுமார் 247 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இந்தியா மற்றும் பிரேசிலில் அந்த எண்ணிக்கை 10,000 பேருக்கு முறையே 55 மற்றும் 248 சம்பவங்களாகும்.

மறுபுறம் ஐரோப்பாவில் புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் நாளுக்கு 150,000க்கும் மேல் அதிகரித்துள்ளது. இத்தாலி, நெதர்லாந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா, போலந்து, உக்ரைன், சைப்ரஸ் மற்றும் செக் குடியரசு உட்பட பல நாடுகளிலும் நாளாந்த புதிய தொற்று சம்பவங்கள் முன்னர் இல்லாத அளவு அதிகரித்துள்ளன.

உலக தொற்றுச் சம்பவங்களில் ஐரோப்பாவில் 17 வீதமானது பதிவாகி இருப்பதோடு உயிரிழப்பில் அது 22 வீதமாக உள்ளது.

வைரஸை கட்டுப்படுத்த பிரிட்டனில் முக்கிய பகுதிகளில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பிரான்சில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பதோடு ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பாடசாலைகள் மூடப்பட்டு அறுவைச்சிகிச்சைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. மத்திய கிழக்கில் கொரோனா தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இருக்கும் ஈரானில் உயிரிழப்பு 30,000க்கு மேல் அதிகரித்திருப்பதோடு தலைநகர் டெஹ்ரான் மூன்றாவது வாரமாகவும் மூடப்பட்டுள்ளது.

இந்தப் பெருந்தொற்று ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 1.1 மில்லியன் பேர் உலகெங்கும் உயிரிழந்துள்ளனர். இது மொத்த நோய்த் தொற்று சம்பவங்களில் 2.8 உயிரிழப்பு வீதமாகும்.

பரந்த அளவில் தடுப்பு மருந்து ஒன்று பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் உயிரிழப்பு எண்ணிக்கை 2 மில்லியன் என இரட்டிப்பாகக் கூடும் என்றும் பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அகதிகரிக்கக் கூடும் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

## இன்று விண்கல்லில் இறங்கும் விண்கலம்



பென்னு என்ற விண்கல்லை இன்று செவ்வாய்க்கிழமை தொடுவதற்கு எதிர்பார்த்திருக்கும் நாசா, அதில் விண்வெளிப் பாறைகளின் மாதிரிகளை 2023 ஆம் ஆண்டு பூமிக்கு எடுத்துவர திட்டமிட்டுள்ளது.

இதன்படி ஓசிரிஸ்–ரெக்ஸ் என்ற விண்கலம் மிகக் கவனமாக திட்டமிடப்பட்டு 4.5 மணி நேரங்களில் கீழிறங்கி பென்னு விண்கல்லை சிறிது வினாடிகள் தொடவுள்ளது.

இதன்போது இந்த விண் கல்லின் வட துருவத்தில் ஒரு வேன் வண்டியின் அளவு கொண்ட விண்கலம் அதன் மேற்பரப்பில் மாதிரிகளை சேகரித்து சேமித்து பூமிக்கு திரும்பவுள்ளது. பூமிக்கான அதன் பயணத்திற்கு மூன்று ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பூமி மற்றும் செவ்வாய்க் கிரகத்திற்கு இடையே இருக்கும் பென்னு விண்கல் எமது பூமியில் இருந்து சுமார் 207 மில்லியன் மைல்கள் தொலைவில் காணப்படுகிறது.

இந்த விண்கல்லில் இருந்து பெறப்படும் மாதிரிகளைக் கொண்டு கிரகங்கள் மற்றும் உயிர்களின் தோற்றம் பற்றி புரிதலை பெற முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

## கொவிட்–19: இத்தாலியில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பு



கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் இத்தாலியில் கட்டுப்பாடுகளை இறுக்கும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முகக்கவசம் அணிந்த நிலையில் இந்த அறிவிப்பை வெளியிட்ட அந்நாட்டு பிரதமர் குயிசெப்பே கொண்ட்டே, புதிய முடக்க நிலையை தவிர்ப்பதற்கு இந்தக் கட்டுப்பாடுகள் அவசியம் என்று தெரிவித்தார்.

இதன்படி இரவு ஒன்பது மணிக்கு பின்னர் பொது இடங்களை மூடும் அதிகாரம் மற்றும் உணவு விடுதிகள் திறப்பது மற்றும் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் அதிகாரம் நகர மேயர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் கடந்த சனிக்கிழமை 10,925 நோய்த் தொற்றுச் சம்பவங்கள் பதிவான நிலையில் அதனை விஞ்சும் வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 11,705 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய்த் தொற்றின் ஆரம்பத்தில் உலகில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இத்தாலி இருந்தது. அங்கு உறுதி செய்யப்பட்ட மொத்த நோய்த் தொற்று சம்பவங்கள் 414,000 ஆகவும் உயிரிழப்பு 36,500 ஆகவும் அதிகரித்துள்ளது.

## வடக்கு சைப்ரஸ் தேர்தலில் துருக்கி ஆதரவாளர் வெற்றி




துருக்கி கட்டுப்பாட்டு வடக்கு சைப்ரஸ் ஜனாதிபதி தேர்தலில் வலதுசாரி தேசியவாதியான எர்சின் டாடர் வெற்றிபெற்றுள்ளார்.

துருக்கி ஆதரவுடையவரான டாடர் மத்தியதரைக்கடல் தீவான சைப்ரஸை இரண்டு நாடுகளாக பிரிக்க விரும்புபவராவார். அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் 52 வீத வாக்குகளை பெற்று எதிர்பாராத வெற்றி ஒன்றை பதிவு செய்துள்ளார். அவரது போட்டியாளரான பதவியில் உள்ள ஜனாதிபதி முஸ்தபா அகின்சி, அந்தத் தீவின் கிரேக்கப் பகுதியுடன் ஒன்றிணைவதற்கு ஆதரவானவராவார்.

சைப்பரஸில் கிரேக்கத்தின் ஆதரவில் இராணுவ சதிப்புரட்சி ஒன்று இடம்பெற்றதை அடுத்து துருக்கி அதன் வடக்கு பகுதியை ஆக்கிரமித்த 1974 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த நாடு இரண்டாக பிளவுபட்டு காணப்படுகிறது.

அந்த தீவின் வடக்கில் துருக்கிய சைப்ரஸ் அரசு ஒன்று ஆட்சியில் இருப்பதோடு தெற்கின் மூன்றில் இரண்டு பகுதி கீரேக்க சைப்ரஸ் தலைமையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசின் நிர்வாகத்தில் உள்ளது. இதில் சுமார் 300,000 மக்கள் தொகை கொண்ட வடக்கு வைப்ரஸ் துருக்கி குடியரசை துருக்கி மாத்திமே ஒரு சுதந்திரம் பெற்ற நாடாக அங்கீகரிப்பதோடு ஏனைய உலக நாடுகள் அதனை சைப்ரஸின் ஓர் அங்கமாகவே கருதுகிறது.

## பிரான்சில் தலை துண்டிக்கப்பட்ட ஆசிரியருக்கு ஆதரவாக பேரணி



பிரான்ஸில் தலை துண்டித்துக் கொல்லப்பட்ட ஆசிரியருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆயிரக்கணக்கானோர் பேரணிகளை நடத்தியுள்ளனர்.

ஆசிரியர்களுக்கு ஆதரவாக நாட்டின் பல நகரங்களில் திரண்ட கூட்டத்தினர் மௌன அஞ்சலி செலுத்தியதுடன் கைதட்டவும் தேசிய கீதத்தைப் பாடவும் செய்தனர்.

நாட்டை உலுக்கிய கொலைச் சம்பவத்தைக் கண்டித்து நடத்தப்பட்ட பேரணியில் பிரதமர், கல்வியமைச்சர் இருவரும் கலந்துகொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

47 வயது வரலாற்று ஆசிரியர் சாமுவேல் பெட்டி 18 வயது இளைஞரால் பாடசாலைக்கு வெளியில் கொல்லப்பட்டார்.

பேச்சு சுதந்திரம் பற்றிய வகுப்பில் நபிகள் நாயகத்தின் கேலிச்சித்திரத்தை அவர் காட்டியதால், சில இஸ்லாமியப் பெற்றோர் கோபமடைந்ததாகக் கூறபட்டது.

ரஷ்யாவில் பிறந்த செச்னியப் பூர்விகத்தைக் கொண்ட இளைஞர், சம்பவத்திற்குப் பின்னர் பொலிஸ் அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலையின் தொடர்பில் 11 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணிந்து ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் நாட்டின் சுதந்திரம், சமத்துவம், ஒற்றுமையைத் தற்காப்பதாகக் கூறினர்.

கொலைச் சம்பவத்திற்கு முன் சமூக ஊடகத்தில் பெட்டிக்கு எதிராகப் பல பதிவுகள் இடம்பெற்றிருந்தன. ஆசிரியர்களை மிரட்டல்களில் இருந்து பாதுகாப்பதற்கான உத்தியை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிவிய ஜனாதிபதி தேர்தல்: மொராலஸின் கூட்டாளி வெற்றி



பொலிவிய ஜனாதிபதி தேர்தலில் சோசலிச வேட்பாளர் லுவிஸ் ஆர்ஸ் வெற்றியீட்டி இருப்பதாக ஆரம்பக் கட்ட முடிவுகள் மூலம் தெரியவருகிறது.

பதவி கவிழ்க்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் முன்னாள் ஜனாதிபதி எவோ மொராலஸின் கூட்டாளியான ஆர்ஸ், இரண்டாவது சுற்று தேர்தலை தவிர்க்க போதுமான அளவு வாக்குகளை வென்றிருப்பதாக இந்த முடிவுகள் காட்டுகின்றன.

தேசிய ஐக்கிய அரசு ஒன்றை தாம் அமைக்கப்போவதாக ஆர்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக மொராலஸ் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தது பொலிவியாவில் பெரும் அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பை தவிர்த்து வெற்றி பெறுவதற்கு குறைந்தது 40 வீத வாக்குகளையும் நெருங்கிய போட்டியாளரை விடவும் 10 வீதத்திற்கு மேலும் பெறுதல் வேண்டும்.

ஆர்ஸ் ஏற்கனவே தாம் வெற்றி பெற்றதாக அறிவித்திருக்கும் நிலையில் பொலிவியாவில் ஜனநாயகம் மீட்சி பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஆர்ஸ் முன்னர் மொராலஸ் அரசில் பொருளாதார அமைச்சராக இருந்தவராவார்.

## கொரோனாவில் இருந்து சீனாவின் பொருளாதாரம் தொடர்ந்தும் மீட்சி



கொவிட்–19 வைரஸ் தொற்றில் இருந்து சீன பொருளாதாரம் தொடர்ச்சியாக மீட்சி பெற்று வருவது அந்நாட்டின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரம் மூலம் உறுதியாகியுள்ளது.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமான சீனாவில் இதே கடந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஜூலை மற்றும் செப்டெம்பர் வரையான காலாண்டில் 4.9 வீத பொருளாதார வளர்ச்சியை கண்டுள்ளது. எனினும் இது பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்த்த 5.2 வீதத்தை விடவும் குறைவாகவே உள்ளது.

சீனாவின் அண்மைய மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவு அடிப்படையில் பொருளாதார மீட்சியில் உலகில் அந்த நாடு முன்னிலையில் உள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்தில் கொரோனா வைரஸ் தீவிரம் அடைந்த நிலையில் சீன பொருளாதாரம் 6.8 வீத அளவு குறைந்தது. நாடு முழுவதும் தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி ஆலைகளும் மூடப்பட்டிருந்தன.

1992ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சியை சீனா பதிவு செய்ய ஆரம்பித்ததில் இருந்து முதன்முறையாக சீன பொருளாதாரம் அப்போதுதான் பெரும் சரிவைச் சந்தித்திருந்தது.

## 1500 ஆண்டுகளுக்கு முந்தைய இராட்சத ஓவியம் கண்டுபிடிப்பு



பெரு நஸ்கா பாலைவனத்தில் ஓய்வெடுக்கும் பூனை ஒன்றின் பிரமாண்ட காட்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்டதாக நம்பப்படும் பிரமாண்ட ஓவியங்கள் யுனெஸ்கோ மரபுரிமை சொத்துகளாக உள்ளன. இதில் இந்த பூனையின் ஓவியம் தற்போதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செங்குத்தான சரிவு ஒன்றில் இருப்பதால் பார்ப்பதற்கு பயங்கரமாக உள்ள இந்தக் காட்சி இத்தனை காலமும் தென்படாமல் இருந்ததாக பெரு கலாசார அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. 37 மீற்றர் (120 அடி) நீளமான இந்த ஓவியம் கடந்த வாரம் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டதாகவும் அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

பெரு நாட்டின் தென்பகுதியில் பாலைவன பீடபூமியில் வரையப்பட்டிருக்கும் இந்த பிரமாண்ட ஓவியங்கள் நாஸ்கா இந்தியர்களால் 1500 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டதாகும். கி.பி. 400 இலிருந்து கி.பி. 650 வரையுள்ள காலகட்டத்தில் வரையப் பட்டதென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2020 ஒக்டோபர் 20 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்



இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் ஐப்பசி 04
ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7. 30 - 9.00வரை
யோகம்: சித்தயோகம்
நட்சத்திரம்: திருவாதிரை பகல் 1.33
திதி: சதுர்த்தி

தொழுகை நேரம்
17 முதல் 22 வரை

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.41 |
| லுஹர் | - | 11.57 |
| அஸர் | - | 03.16 |
| மஃரிப் | - | 05.55 |
| இஷா | - | 07.05 |

# நியூசிலாந்து பிரதமருக்கு ஜனாதிபதி வாழ்த்து



நியூசிலாந்து பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றிப் பெற்று பிரதமராக தெரிவான ஜெசிந்தா ஆர்டனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டரில் நேற்று பதிவிட்டுள்ள ஜனாதிபதி, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் அவரின் தலைமைத்துவம் முன்மாதிரியாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தற்போதைய பிரதமரான ஜெசிந்தா ஆர்டனின் ஆளும் தொழிலாளர் கட்சி 49 வீத வாக்குகளைப் பெற்று அபார வெற்றி பெற்றது. பிரதான எதிர்க்கட்சியான தேசியக் கட்சி 27 வீத வாக்குகளை மட்டுமே பெற்றது. இந்நிலையில், பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 120 இடங்களில் 64 இடங்களை ஜெசிந்தாவின் ஆளும் கட்சி கைப்பற்றியுள்ளது.



இதேவேளை, நியூசிலாந்தின் பிரதமராக இரண்டாவது முறையாகப் பதவியேற்கவுள்ள ஜெசிந்தாவுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று பரவல் இந்த வாரம் மிக முக்கியமானது

## இராணுவ தளபதி எச்சரிக்கை

கொரோனா தொற்றினை எதிர்த்துப் போராடுவதற்கும் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கும் இந்த வாரம் முக்கியமானதாக இருக்கும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேறும்போதெல்லாம் அரசாங்கம் அறிமுகப்படுத்திய சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கேகாலையில் கொரோனா தொற்று உறுதியாகிய மாணவி ஒருவர் உயர்தர பரீட்சை எழுதச் சென்றதாக வெளியாகும் செய்தியையும் அவர் மறுத்துள்ளார்.

மேலும் 47 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்த 4 பேர் மற்றும் மினுவாங்கொடை ஆடை கைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்பில் இருந்த 43 பேரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தவிர இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்தவர்களில் மேலும் 37 பேர் நேற்று பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3,440 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக தனிமைப் படுத்தப்பட்டிருந்த 205பேர், தங்களது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து, நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

முப்படையினரால் நடத்தப்படும் 4 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 205 பேரே இவ்வாறு வெளியேறியுள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 585 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில் தொற்றுக்கு உள்ளான 2169 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மேலும் இந்தத் தொற்றில் இருந்து இதுவரையில் 3 ஆயிரத்து 403 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என்பதுடன், இந்த வைரஸ் காரணமாக இலங்கையில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

# A/L எழுதும் மாணவர்களுக்கான புதிய அவசர இலக்கம் 1988

## தேவையேற்படின் அழைக்க வேண்டுகோள்



உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு ஏதேனும் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் தொடர்பு கொள்ளுமாறு கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தர பரீட்சையில் தோற்றும் உயர்தர மாணவர்களுக்குச் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் 1988 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# கோப், கோபா குழு கூட்டம் ஒத்திவைப்பு

இந்த வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா பரவல் நிலையை கருத்திற்கொண்டு கோப் குழு தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் மற்றும் கோபா குழு தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன ஆகியோர் இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 20 முதல் 23 வரை நடத்த திட்டமிடப்பட்ட கோபா மற்றும் கோப் குழு அமர்வுகள் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவை போன்று டெங்கு பரவலை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை



கொவிட் 19ஐ போன்று டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றுசுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவை மையமாகக் கொண்டு சுகாதார அமைச்சர் தலைமையில் டெங்கு ஒழிப்பு மற்றும் பொது மக்களை அறிவூட்டும் திட்டமொன்றும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, கொவிட் – 19 நிலைமையை கட்டுப்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகளைப் போன்று மனித வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ள டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தவும் திட்டமொன்று செயல்படுத்தப்படுகின்றது. கொவிட் – 19 காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளை விட அதிகளவு உயிரிழப்புகள் டெங்கு நோய் காரணமாக ஏற்பட்டுள்ளன. இவ்வருடம் 34 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதாகவும் இங்கு சுட்டிக்காட்டினார்.

எமது சுற்றாடலை துப்புரவு செய்து மக்கள் அரசுமேற்கொள்ளும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

2020ம் ஆண்டு இரண்டாவது காலாண்டுப் பகுதியில் இலங்கை பூராவும் 4311 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதோடு கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவு நோயாளர்கள் காணப்பட்டார்கள்.

கண்டி மாவட்டத்தில் 715 டெங்கு நோயாளிகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 668 டெங்கு நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டார்கள். இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிலேயே அதிகளவு அதாவது 169 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டார்கள்.

06

# ஜீவன் தொண்டமானின் ஆலோசகராக பி.பி. தேவராஜ்



தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசகராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் சிபாரிசின் பேரில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நியமன கடிதத்தை அமைச்சர் ஜீவன் தொண்டமான் பி.பி. தேவராஜுக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

20 ஆவது திருத்தம் குறித்து

# ஜனாதிபதி, பிரதமர் ஆளும் தரப்பு எம்.பிக்களுடன் ஆராய்வு

20ஆவது திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கடந்த இருதினங்களில் கலந்துரையாடியதாக அறிய வருகிறது.

21 மற்றும் 22 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தப்படவுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (18) இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது. விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோக பூர்வ வீட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆளும் தரப்பு கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். இது தவிர நேற்று மாலை 6.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் ஜானாதிபதிக்கும் ஆளும் தரப்பு எம்.பிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, திட்டமிட்டவாறு 21ஆம் திகதி முதல் இருநாட்கள் 20 குறித்த விவாதம் நடைபெறும். 22ஆம் திகதி திருத்தங்களுடன் இதனை நிறைவேற்ற இருக்கிறோம். ஏற்கெனவே பிரதமருக்கு திருத்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற வியாக்கியானமும் சபாநாயகருக்கு வழங்கப்பட இருக்கிறது என்றார்.

இதே வேளை அமைச்சரவை கூட்டத்திலும் 20 குறித்து ஆராயப்பட்டதாக அறிய வருகிறது.

# உள்நாட்டில் உற்பத்தி செய்த இரண்டாவது மருந்து சந்தைக்கு

மர்லின் மரிக்கார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக 'புதிய நாட்டுக்கு புதிய மருந்து' என்ற தொனிப்பொருளுக்கு ஏற்ப நாட்டுக்கு தேவையான மருந்து பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனம் அதன் இரண்டாவது மருந்தை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

'க்லோபிடொக்ரல் யுஎஸ்பி 75 மி.கி' என்ற பெயர் கொண்ட இம்மருந்தின் முதல் தொகுதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடப் பேராசிரியர் விஷேட மருத்துவ நிபுணர் சரோஜ் ஜயசிங்கவிடம் மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவினால் கையளிக்கப்பட்டது.



இதய நோய்கள் தொடர்பான நோயாளர்களுக்காகப் பயன்படுத்தப்படும் இம்மருந்தை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கம் 317 மில்லியன் ரூபாவையும்

06

# பேராயருக்கு எதிராக கருத்து வெளியிட்ட பெண் நேற்று கைது



கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் ஒன்றுமையின்மையை உருவாக்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பத்தரமுல்லயில் கைதுசெய்யப்பட்டுள்ள பெண், நீதவான் முன்னிலையில் இன்று ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

குறிப்பிட்ட பெண் கர்தினால் மல்கம் ரஞ்சித்திற்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வீடியோவொன்றை வெளியிட்டுள்ளார் என கத்தோலிக்க திருச்சபை

06



பாத் பைண்டர் மன்றம் ஏற்பாடு செய்த "கொவிட்19" தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான தமிழ் மொழிபெயர்ப்பு வழிகாட்டி கைநூல் வெளியீட்டுவிழா 19.10.2020 மாலை கொழும்பு ஹெவ்லொக் சிட்டி ஓச்சாட் அரங்கில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினரான மக்கள்சீனக் குடியரசின் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் பிரதம அலுவலர் லுஹோ சொங்கிடமிருந்து நூலின் முதல் பிரதியை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட நூலை தமிழில் மொழிபெயர்த்த பேராசிரியர் தை.தனராஜ் டாக்டர் முரளிவள்ளிபுரநாதன் மன்றத் தலைவர் பேர்னார்ட் குணதிலக மற்றும் கே.பாலசுந்தரம் ஆகியோரையும் இங்கே காணலாம்.

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முதன்முறையாக நேற்று மாலை ஆஜரானார்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது. ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமையவே, இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இதேவேளை, கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் விமானப் படைத் தளபதி ரொஷான் குணதிலக்க மற்றும் முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க மற்றும்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ர.அவ்வல் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

செல்வம் இருந்தும் வறுமையாய் வாழ்வது விருந்தினரைப் பேணாமல் வாழும் மடைமையே. இது மூடரிடம் மட்டுமே இருக்கும்.

## மலையக தோட்டத் தொழிலாளர்களின் இன்னல்கள் களையப்பட வேண்டும்

மலையகப் பெருந்தோட்ட மக்களில் பெரும் பகுதியினர் சமூக, பொருளாதார ரீதியில் பல மட்டங்களிலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். அவர்கள் இந்நாட்டின் ஏனைய சமூகங்களை விடவும் பின்னடைந்துள்ளனர்.

இந்த நாடு சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்து விட்டபோதிலும் அந்த மக்களில் பெரும் பகுதியினர் தொடர்ந்தும் லயன் அறைகளிலேயே வாழ்கின்றனர். அது ஒரு தொடர்கதையாகவே நீடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த லயன் அறைகள் அடிப்படை வசதிகள் அற்றவையாக மாத்திரமல்லாமல் குறைபாடுகள் நிறைந்தவையாகவும் காணப்படுகின்றன. இந்த லயன்களில் பெரும்பாலானவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகளும் போதிய பாதுகாப்பு வசதியைக் கொண்டவையாக இல்லை.

ஆனால், இந்த மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை நல்கி வரும் பெருந்தோட்டத் துறையில் ஒரு அங்கமாக விளங்குகின்றனர். அவர்கள் இத்துறையின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் மாத்திரமல்லாமல் நாட்டுக்கு அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்காகவும் அயராது உழைத்து வருகின்றனர். தினமும் காலை முதல் மாலை வரையும் வியர்வை சிந்தி உழைக்கும் இம்மக்கள் இந்த மண்ணோடு பின்னிப்பிணைந்த சமூகமாக உள்ளனர். அவர்கள் இம்மண்ணுக்காக உழைத்து உரமாகிச் செல்கின்றனர். இருந்தபோதிலும் அவர்களுக்கு நாளுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாத நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது.

மேலும் இந்நாட்டுக்காக அயராது உழைக்கும் இவர்கள் சிறுத்தைகளின் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்தவர்களாக உள்ளனர். மாதத்திற்கு ஒருவராவது இச்சிறுத்தைகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். காடுகள் அழிக்கப்படுவதால் அவை உணவு தேடி வருவதன் விளைவாகவே மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை இந்நாட்டில் குளவிக் கொட்டுக்கு அதிகம் முகம் கொடுப்பவர்களாகவும் பெருந்தோட்ட தொழிலாளர்களே உள்ளனர். இதன் விளைவாகக் கடந்த காலங்களில் சிலர் உயிரிழந்தும் உள்ளனர். காடுகள் அழிக்கப்படுவதால் பெருந்தோட்ட மக்கள் முகம் கொடுக்கும் மற்றொரு பிரச்சினையே இதுவாகும். காட்டு மரங்கள் அழிக்கப்படுவதால் குளவிகள் தேயிலை மரங்களில் கூடு கட்டுவதன் விளைவாகவே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அத்தோடு பெருந்தோட்ட மக்கள் முகம் கொடுக்கும் மற்றொரு பிரச்சினையாக அட்டைக் கடி உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அன்றாடம் முகம் கொடுத்தவர்களாக பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த அச்சுறுத்தல்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், இந்த மக்களின் லயன் அறை வாழ்வுக்கு தீர்வு வழங்கும் வகையில் 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் முதற் கட்டமாக 4000 வீடுகளை வழங்கியது. ஆனால் அவ்வீட்டுத் திட்டத்தில் 669 வீடுகள் மாத்திரமே கடந்த நான்காண்டு காலப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகள் அனைத்தும் இன்னும் அமைக்கப்படாத நிலையே நீடிக்கின்றது.இவ்வாறான தாமதங்கள் பெருந்தோட்ட மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் தடையாகவே இருக்கும்.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுத்தவர்களாக வாழும் மலையக பெருந்தோட்ட மக்கள் நாட்டில் ஏனைய சமூகங்களுக்கு சமமான மக்களாக கட்டியெழுப்பப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் இந்த மக்களின் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தோடு பெருந்தோட்ட மக்களுக்கான வீடுகளை அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே அமைத்துக் கொடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

அத்தோடு இந்த மக்களுக்கான சுகாதார சேவையை மேம்படுத்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பெருந்தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து, அந்த வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் இவை பெருந்தோட்ட மக்களுக்கு நம்பிக்கை தரும் நடவடிக்கைகளாகும். அவர்களது வாழ்வில் சுபீட்சமும் விமோசனமும் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய மக்களது வாழ்க்கைத் தரத்துக்கு சமமானதாக மேம்பட இவை பெரிதும் உதவும்.

ஆகவே பெருந்தோட்ட மக்கள் அன்றாடம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களது வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும்.அதன் நிமித்தம் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலக வாழ்க்கையின் முழுமையான பேறுகளை உணர்த்தும் நவராத்திரி



## இலட்சுமி வழிபாடு இன்று ஆரம்பம்

நவராத்திரி ஆரம்பமாகி நான்காவது தினம் இன்றாகும். முதல் மூன்று நாட்களும் துர்க்கையம்மனுக்கான வழிபாடு ஆகும். இன்று முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இலட்சுமிக்கான வழிபாடு ஆகும்.

செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை நான்காவது நாளில் இருந்து ஆறாவது நாள் வரை பூஜிக்கின்றனர். இந்த ஆறு நாட்களும் முடிந்த பிறகு ஏழாவது நாள் தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு கல்வி, கலைகள், வித்தைக்கு அதிபதியான சரஸ்வதியை வணங்க வேண்டும்.

ஏழாவது நாளில் நாதஸ்வரூபமாக எழுந்தருளும் கலைவாணி நமக்கு வினயத்தைத் தந்தருளுகிறாள். எட்டாவது நாளில் வாழ்க்கையில் எட்டாததையும் எட்டச் செய்து நமக்கு ஏற்றத்தை அளிக்கிறாள் அன்னை. ஒன்பதாவது நாளில் அழியாத தன்மையைத் தருகிறாள். செல்வம் அழிந்தாலும் கற்ற வித்தை அழியாது என்பதை உணர்த்துகிறாள் தேவி சரஸ்வதி. பத்தாவது நாள் விஜயதசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின் போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்ற இம் மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம் பெறும் வகையில் வெற்றி கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

நவராத்திரி விழா கொண்டாடுவதற்கும் பல கொள்கைகள் இருக்கின்றன. ஒரு விதத்தில் நவராத்திரி விழா கொண்டாடுவதால் நம் ஆன்மீக ஆற்றல்கள் வெளிப்படுகின்றன. நம் ஆன்மிக பயணத்தில் துர்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி ஆகிய மூவரின் கோட்பாடுகளை நாம் கடந்து செல்கிறோம்.அதாவது கல்வி,செல்வம்,வீரம் இவை மூன்றும் அனைவரின் வாழ்விலும் மிக முக்கியமான விஷயமாகும்.

துர்கா,லட்சுமி,சரஸ்வதி ஆகிய மூவரையும் இவ்வுலகில் வழிபடக் காரணம், அனைத்து எதிர்மறை எண்ணங்களை அழித்து நேர்மறை குணங்களை வளர்க்கும் பண்புகளும், நற்குணங்களும் இம்மூவரிடம் இருக்கின்றன.

நம் முற்பிறவி கர்மாக்கள் நம்மை பின்தொடரும்,அந்த கர்மாக்கள் நமக்கு நன்மையும் கொடுக்கும், தீமையையும் கொடுக்கும். இது அவரவர் வினைகளை பொறுத்தது. எனவே, நாம் அவற்றை நேர்மறையான குணங்களுடன் மாற்ற வேண்டும்.

பகவத் கீதையில் இந்த குணங்களை தெய்வீக செல்வம் என்று கூறப்பட்டுள்ளது. நம் வாழ்க்கையில் தைரியம் எவ்வளவு முக்கியமோ அதே போன்றுதான் செல்வமும். அதற்காக அடுத்த மூன்று நாட்களில் லட்சுமியை நாம் வணங்குகிறோம். லட்சுமி என்பது மொத்த செல்வம், மற்றும் செழிப்பின் அடையாளம் ஆவாள்.

நவராத்திரி வழிபாட்டின் ஒவ்வொரு கட்டத்தின் முக்கியத்துவமும் தெளிவான விளக்கத்தை தருகின்றன. முதலாவதாக எதிர்மறை எண்ணங்களை கட்டுப்படுத்த வேண்டும்; இரண்டாவதாக நல்லொழுக்கங்கள் வேரூன்ற வேண்டும்; தேவையான மனத் தூய்மையைப் பெற்ற பிறகு மூன்றாவதாக ஆன்மிக அறிவைப் பெற வேண்டும். மேலும் அறிவைப் பெறுவதற்காக சரஸ்வதியை வணங்க வேண்டும். இந்த மூன்றும் ஒரு முழுமையான உலக வாழ்க்கைக்கு அவசியமானவை. உண்மையில், நாம் இவ்வாறு வணங்கும் போது நமக்குள் இருக்கும் சக்தி தூண்டப்படுகிறது.துர்கா, லட்சுமி மற்றும் சரஸ்வதி வெவ்வேறு தெய்வங்கள் அல்ல, அவர்கள் ஒருமை தெய்வீகத்தின் வெவ்வேறு அம்சங்களாக திகழ்பவர்கள்.

# 'அமெரிக்காவில் இருந்து ஆறாய் பாய்ந்த அன்பு வெள்ளம்'

## தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் எழுதிய தமிழ், ஆங்கில நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு

அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பேராசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் புகழ்பூத்த வைத்தியர்களினால்தான் ஆங்கில புலமையில் முதன்மையான இடமாக யாழ்.மாவட்டம் மட்டுமன்றி வடக்கின் ஏனைய பிரதேசங்களும் மிளிர்ந்த வண்ணமிருக்கின்றன என்று தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜேபனேசன் அடிகளார் தெரிவித்தார்.

பேராயர் கலாநிதி எஸ். ஜேபனேசன் எழுதிய 'அமெரிக்காவில் இருந்து ஆறாய் பாய்ந்த அன்பு வெள்ளம்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் பங்குத் தந்தை வண. ஏ.எஸ். தேவகுணானந்தன் தலைமையில் நடைபெற்றது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட இந்நூலின் முதற் பிரதியை வண. எஸ்.யோசுவாவும், ஆங்கில முதற் பிரதியை சட்டத்தரணி க.சுகாஷும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் ஏற்புரை வழங்கிய பேராயர் எஸ். ஜேபனேசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகச் சிறந்த கல்விமான்களும், பக்தர்களும், போராசிரியர்களும், சமுதாயத்தின் உயர் மட்டங்களில் இருந்தவர்களும் அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து பெரும் பணியாற்றினார்கள். அவர்கள் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றியமையால் அவர்களுடைய சாதனைகளை உலகம் அறிந்து கொள்ளவில்லை.

மிகச் சிறந்த பேராசிரியர்கள், பெண் நோயியல் நிபுணர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், அச்சக வித்தகர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் என பல நூற்றுக் கணக்கானவர்கள் மகத்தான சேவை புரிந்திருக்கின்றனர். அவர்களோடு பழகியவர்கள், அவர்களிடம் படித்தவர்கள் எல்லாருமே மறைந்து விட்டார்கள். சிலர் வேறுநாடுகளுக்குச் சென்று விட்டனர். இன்றைய காலத்தில் அமெரிக்காவில் இருந்து வந்த தொண்டர்களைப் பற்றி அறிந்தவர்கள், அவர்களிடம் படித்தவர்கள், பழகியவர்கள் இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஞாபக மூட்டாது இருப்பது மிகப் பெருந் தவறாகும்.

அமெரிக்க மிசன் தொண்டர்கள் இப்பொழுது நம்மோடு இல்லை ஆனால் அவர்கள் உருவாக்கிய நிறுவனங்களையும், அவர்கள் உருவாக்கிய கல்விச்சாலைகளையும், அச்சக நிறுவனங்களையும் வார்த்தைகளால் விபரிக்க முடியாது.



அவர்கள் உருவாக்கிய ஒவ்வொன்றையும் நினைவுச் சின்னங்களாக காப்பாற்றுவது இன்றைய பொறுப்பு வாய்ந்த நிறுவனத் தலைவர்களினதும், சமுதாயத்தினதும் பெருங் கடமையாகும். இந்திய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு காலத்தில் ஆங்கிலேயரின் சிலைகளை ஒரு குழுவினர் உடைத்துத் தள்ள முற்பட்ட போது அவர் "வரலாற்றுச் சின்னங்களை அழிக்காதீர்கள்! வரலாற்றை மாற்றுவது வரலாற்றை மாற்ற முயற்சிப்பது அபத்தம்" என்றார். இன்று நாம் அமெரிக்க சின்னங்களை ஏற்படுத்திய தொண்டர்களை ஞாபகமூட்டுவதோடு அவர்களை காலத்துக்கு காலம் ஞாபக மூட்ட வேண்டும்." இவ்வாறு கலாநிதி எஸ். ஜேபனேசன் அவர்கள் தனதுரையின் போது தெரிவித்தார். இந்நிகழ்வில் தமிழ்ப் பதிப்பை பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவும், ஆங்கிலப் பதிப்பை யாழ் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி ம.திருவரங்கனும் வழங்கினர்.

> 'யாழ்ப்பாணத்தில் பெரும் பணியாற்றிய கல்விமான்கள் நினைவு கூரப்பட வேண்டும்'

யாழ்.தினகரன் விசேட நிருபர்

# தமிழகத்தை குறி வைத்து பா.ஜ.க வகுக்கும் வியூகம்



## குஷ்புவை வளைத்தெடுத்தது போன்று மேலும் பல பிரபலங்களுக்கு வலைவீச்சு

தமிழகத்தில் சட்டசபைத் தேர்தலை தனித்தே சந்திக்க பா.ஜ.க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இதை அக்கட்சியின் தமிழக மேற்பார்வையாளரான கர்நாடகத்தின் சிடி ரவி சூசகமாக உணர்த்தியுள்ளார். தமிழகத்தைப் பொறுத்தவரை தேசிய கட்சிகளின் ஆதிக்கம் முடிந்து போய் பல காலமாகி விட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸும் சரி, பா.ஜ.கவும் சரி என்னென்னவோ செய்து பார்த்தும் கூட மேலெழுந்து வர முடியவில்லை. ஆதிக்கத்தை மீண்டும் பெறும் முயற்சிகளை காங்கிரஸ் கைவிட்டு பல காலமாகி விட்டது.

ஆனால் பா.ஜ.க அப்படி இல்லை. தமிழகத்தில்ஆட்சியைப் பிடித்து புதிய அதிர்ச்சியைத் தரும் முயற்சிகளில் அது சில ஆண்டுகளாகவே தீவிரமாக இறங்கியுள்ளது. இதற்காக என்னென்னவோ செய்து பார்க்கிறது. அந்த அடிப்படையில்தான் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலை இதுவரை இல்லாத அளவுக்கு படு பலமாக எதிர்கொள்ள எத்தனித்து நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

முதல் கட்டமாக கட்சியில் பிரபலமானவர்கள் பலரை சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் சேர்ந்த குஷ்பு அதற்கு முக்கிய உதாரணம். இன்னும் பலருக்கும் வலை வீசியுள்ளனர். பல்வேறு கட்சிப் பிரபலங்கள், திரைத் துறைப் பிரபலங்கள், பிற துறைப் பிரபலங்கள் என யார் கிடைத்தாலும் உள்ளே இழுக்கிறார்கள். பலமான மீனுக்காக (ரஜினிகாந்த்) அவர்கள் போட்டு வைத்த வலை அப்படியேதான் உள்ளது. ஆனால் அவரைத் தவிர மற்றவர்கள்தான் அதிகம் சிக்கி வருகிறார்கள்.

இந்த நிலையில் இந்தத் தேர்தலை எப்படி சந்திப்பது என்ற திட்டமிடல்களில் தற்போது பா.ஜ.க தீவிரமாகியுள்ளது. கடந்த லோக்சபா தேர்தலை அ.தி.மு.க, பா.ம.க, தே.மு.தி.க உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி வைத்து சந்தித்தது பாஜக. முடிவு படு தோல்விதான். ஆனாலும் மனம் தளராமல் கூட்டணியை தொடர்ந்து வருகிறது. இருப்பினும் வருகிற சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி இருக்குமா என்று தெரியவில்லை. காரணம், பா.ஜ.கவுடன் கை கோர்த்து மக்களை சந்திக்க அ.தி.மு.க தயாராக இல்லை.

அ.தி.மு.க இப்படி உதறி விடுவதால் அக்கட்சியிடம் கெஞ்சிக் கொண்டிருக்க பா.ஜ.கவும் விரும்பவில்லை. தனித்து நின்று போட்டியிட்டால் கூட எளிதாக 60 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று மாநிலத் தலைவர் எல். முருகன் ஏற்கனவே கூறியுள்ளார். எந்த அடிப்படையில் அவர் அப்படிக் கூறினார் என்று தெரியவில்லை. இது தொடர்பாக ஏதேனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்றும் தெரியவில்லை. இந்த நிலையில் மொத்தமாகவே தனித்துப் போட்டியிட்டால் என்ன என்ற எண்ணத்திற்கு பா.ஜ.க வந்திருப்பதாக தெரிகிறது.

இதுதொடர்பாக சென்னையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடந்துள்ளது. சிடி ரவி தலைமையில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பா.ஜ.க மாநிலத் தலைவர் எல். முருகன், முன்னாள் தலைவர் இல.கணேசன், எச். ராஜா, பொன் ராதாகிருஷ்ணன், சிபி ராதாகிருஷ்ணன், தி.மு.கவிலிருந்து விலகி வந்த வி.பி. துரைசாமி, ஐ.பி.எஸ் பதவியை உதறி வந்த அண்ணாமலை, கேசவ விநாயகம், நாகராஜன், கேடி ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவது எப்படி, கூட்டணி எப்படி அமைக்கலாம், கூட்டணி தேவையா இல்லையா என்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தனித்துப் போட்டியிடுவது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக ஊகிக்கப்படுகிறது. கூட்டத்தில் பேசிய பல தலைவர்களும் தனித்துப் போட்டியிடலாம் என்று வலியுறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் இக்கூட்டத்திற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய சிடி ரவி கூறுகையில், தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடும் அளவுக்கு பா.ஜ.க வலிமையுடன் உள்ளது என்று கூறியிருந்தார்.

# கொரோனாவை விட ஆபத்தானதாக மாறி வரும் போதைவஸ்து பாவனை

கொரோனா எனும் அச்சத்தால் உறைந்து போயுள்ள உலகம் அதனை விட கொடிய அரக்கனான போதைப்பொருள் குறித்தும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியுள்ளது.

போதைவஸ்து என்னும் கொடிய அரக்கனோ வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தினையே இலக்கு வைப்பதால் இது பற்றி அலட்சியமாக இருந்து விட முடியாது. கொரோனாவின் தாக்கத்தினை ஓரளவுக்கேனும் நாம் எதிர்கொண்டு வாழ கற்றுக் கொள்ள முடியும். ஆனால் போதைப்பொருளை வெற்றி கொள்வதென்பது எமது சக்திக்கப் பாற்றப்பட்ட மிகவும் சவாலான விடயமாக உருவெடுத்துள்ளது.

உலகிலே கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை போதைப்பொருள் பாவனை காரணமாக சமுதாயத்தின் எதிர்கால தூண்கள் என வர்ணிக்கப்படும் இளம் சந்ததியினரின் வாழ்வு அடியோடு அழிக்கப்படுகின்றது என்பதை நம்மில் எத்தனை பேர் சிந்தித்து பார்க்கின்றோம்?இதன் மூலம் ஒரு சமூகமே இல்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளதை ஏன் நாம் மறந்து செயற்படுகின்றோம்? ஆகவே நமது வீட்டில், நமது வீட்டிற்கு அருகில், நமது அயல் வீட்டில், நமது சமூகத்தில் என்ன நடக்கின்றது என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம். தவறுகள் நடைபெறுமாயின் சுட்டிக் காட்டுவோம். அடுத்தவர் வீடுதானே என அலட்சியமாக இருந்தால் நாளை உங்கள் வீட்டை போதைப்பொருள் பாவனை முற்றுகையிடும் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்வோம்.

நமது அரசாங்கம் போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை நாட்டில் மேற்கொண்டு வருகின்றது. அதற்காக இச்சந்தர்ப்பத்தில் நாம் அரசை பாராட்டியாக வேண்டும். ஆனாலும் அச்செயற்பாட்டிற்கு மக்களாகிய நாம் வழங்கும் ஒத்துழைப்பே கேள்வியாகவுள்ளது.



## அம்பாறை மாவட்டத்தில் சமீப காலமாக அதிகரிக்கும் போதைப் பொருள் குற்றங்கள்

இது இவ்வாறிருக்க, அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் போதைப்பொருள் அதிகளவாக கைப்பற்றப்பட்டு வருவதுடன் பலர் கைது செய்யப்பட்டும் வருகின்றனர். இதன் காரணமாக இம்மாவட்டத்தில் போதைப்பொருள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதுடன் சிலர் வைத்திய சிகிச்சையினையும் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு மனளைச்சலுக்குள்ளானவர்களில் அதிகமானவர்கள் மாணவர்களும் இளம் சமூகமுமே என்பதுடன் பாடசாலை பெண் பிள்ளைகளும் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பாடசாலை மாணவர்களையே அதிகமாக குறிவைக்கும் போதைப்பொருள் வியாபாரிகள் முதலில் சில மாணவர்களுடன் நட்புடன் பழகுகின்றனர். பின்னர் போதைப்பொருளை இலவசமாக வழங்குகின்றனர். சில நாட்கள் இவ்வாறு வழங்கி விட்டு இடை நிறுத்துகின்றனர். ஆனாலும் பழக்கப்பட்டு விட்ட மாணவனுக்கு அப்பொருள் தொடர்ச்சியாக தேவைப்படுகின்றது. இந்நிலையில் பெருந்தொகை பணத்தை கொடுத்து அப்பொருளை பெற மாணவர்கள் முயற்சிக்கின்றனர். தீக்குச்சி ஒன்றின் நுனியால் தொடப்பட்டு கைகளில் வைக்கப்படும் சிறுதுளிக்காக 2000 ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்வதாக போதைப்பொருள் பாவனை தொடர்பான தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. பணம் கிடைக்காத நிலையில் களவு, கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு அம்மாணவர்களின் மனநிலை மாற்றமடைகின்றது.

## பெற்றோர் தங்களது பிள்ளைகள் விடயத்தில் எப்போதும் அவதானம் கொள்வது அவசியம்

ஆகவே இவர்களை காப்பாற்ற வேண்டிய முழுப்பொறுப்பும் பாடசாலைகளை விட பெற்றோர்களையே சாருகின்றது. தங்களது பிள்ளைகளின் அன்றாட செயற்பாடுகளில் மாற்றம் உள்ளதா என்பதை கண்காணியுங்கள். புதியவர்களின் தொடர்பு ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானியுங்கள். தேவையற்ற நேரத்தில் வீட்டை விட்டு அவன் வெளியேறுகின்றானா? நேரத்திற்கு உணவு அருந்துகின்றானா? நேரத்திற்கு உறங்குகின்றானா? அணிந்துள்ள ஆடை மற்றும் பாடசாலை பைகளுக்குள் சந்தேகமான பொருட்கள் உள்ளதா? போன்ற விடயங்களை கண்காணியுங்கள்.

இதில் மாற்றம் ஏற்பட்டால் உடன் மருத்துவர்களை நாடி ஆலோசனையை பெற்றுக் கொள்ளுங்கள். புதியவர்களின் தொடர்பை துண்டித்து விடுங்கள். இவற்றின் மூலம் உங்களது பிள்ளைகளின் வாழ்க்கையில் உருவாகும் இருளை அகற்றி, ஒளிமயமான எதிர்கால வாழ்க்கையினை உருவாக்கி சுபீட்சமிகு பாதையில் அழைத்துச் செல்லுங்கள்.

கண்முன்னே தெரியும் கொரோனா எனும் வைரசை விட மறைந்திருந்து தாக்கும் 'போதைப் பொருள்' எனும் மகா கொடியவன் பலமானவன். ஆகவே அவனையும் எதிர்கொள்ளவும் அழிப்பதற்கும் அனைவரும் ஒன்றிணைவோம்.

**சுகிர்தகுமார்...**
(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

# கோணாவத்தை ஆற்றங்கரை பிரதேசத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கும் கும்பல்!



அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள கோணாவத்தை ஆற்றையும், அதன் கரைகளை அண்டிய பகுதிகளையும் சட்டவிரோதமாக அபகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் தைக்கா நகர் பகுதியில் கோணாவத்தை ஆற்றை அண்மித்த இடமொன்றை நபரொருவர் மணலிட்டு நிரப்பி, வேலியடைத்துள்ளதாக தெரியவந்ததை அடுத்து அந்த இடத்துக்கு அரச அதிகாரிகள் வருகை தந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்,

## அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு சட்ட நடவடிக்கை

பிரதேச சபை தவிசாளர், உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பல்வேறு தரப்பினரும் சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட அந்த இடத்துக்கு வருகை தந்திருந்தனர். இதன் போது குறித்த இடத்தை சட்டவிரோதமாக நிரப்பியவர் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் என விசாரணைகளின் போது தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும் கரையோர பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களின் அதிகாரிகள் தீர்மானித்தனர்.



இதேவேளை அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வேலி மற்றும் அங்கு கொட்டப்பட்டுள்ள மண் ஆகியவற்றை அங்கிருந்து அகற்றவுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் இதன் போது கூறினார்.

அட்டாளைச்சேனை கோணவத்தை ஆற்றையும், அதன் கரைகளையும் நூற்றுக்கணக்கானோர் சட்டவிரோதமாக அபகரித்துள்ளனர். இதற்கு எதிராக அண்மைக் காலமாக ஊடகவியலாளர்கள் குழுவொன்று செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்...**

# பொதுஅறிவுடன் மொழிவளத்தையும் வளர்ப்பது வாசிப்புப் பழக்கம்

வாசிப்பின் ஊடாகவே ஒருவன் பூரண மனிதனாகலாம். வாசிப்பின் ஊடாகவே அறிவுடைய சமூகத்தை உருவாக்கலாம். வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகத்தைப் புரிந்து, அதனோடு சேர்ந்து போகலாம். தற்கால இலக்கியப் போக்குகளை அறிந்து ரசிக்கவும், சிறந்த நவீன இலக்கியங்களைப் படைக்கவும் வாசிப்பு மிகவும் அவசியம்.

பண்டைக் காலத்தில் தமிழையும் தமிழ் இலக்கியங்களையும் சங்கம் வளர்த்து பாதுகாத்தவர்கள் தமிழர்கள். இலங்கையில் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்ப் பணியை எம்மவர்கள் திறம்படச் செய்து கொண்டிருக்கின்றனர். தமிழ்மொழியைப் பொறுத்தவரை நிறைய நூல்கள் வெளிவருகின்றன. அவையெல்லாம் தரமானவையா அது இலக்கிய உலகில் அதிர்வையும் மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது தாங்கள் எழுதுகின்ற கவிதைகள் எல்லாம் கவிதைகள்தானா, கதைகள் எல்லாம் கதைகள் தானா என்று தெரியாமல் பணம் இருந்தால் நூல் வெளியிடலாம் என்னும் நிலைமை இன்று இருக்கின்றது. எல்லோரும் நூல் வெளியிடலாம். முதலில்

## தேசிய வாசிப்பு மாதம்


என்றகேள்வி எழுகின்றது.

காலத்தைக் கடந்த இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். அது எமது நாட்டு எழுத்தாளர்களினாலும் எதிர்கால சமுதாயத்தாலும் நிச்சயம் முடியும். இப்பொழுது ஊடகங்களும் எழுதுபவர்களும் தமிழ்மொழியை சரியாக எழுதவோ உச்சரிக்கவோ தெரியாதவர்களாக இருக்கின்றனர். சரியென்று எண்ணிக் கொண்டு தவறான சொற்பிரயோகங்களை பிரயோகிக்கின்றனர். இதற்குக் காரணம் தமிழ்மொழிப் பயிற்ச்சி மக்களிடையே மிகக் குறைவாக இருப்பதும் ஆங்கில மொழியின் மோகமாகவும் இருக்கலாம்.

எல்லோரும் நூல் வெளியிடுவது போல் நாமும் வெளியிட வேண்டும் என நினைக்கக் கூடாது. தரமான நூல்களைப் படைக்க வேண்டும். ஒரு நூலை வெளியிட்டாலும் அவர்கள் தமிழ்மொழியில் பயிற்சி பெற வேண்டும். மொழிப் பயிற்சி மிக முக்கியமானது. தமிழ்மொழியில் சரிவர எழுத வேண்டும். மூத்தமொழியை, வளமான மொழியை தாய்மொழியாகக் கொண்டிருக்கும் தமிழர்கள் அம்மொழியை மேலும் வளர்ப்பதற்கு தங்களாலான முயற்சியைச் செய்ய வேண்டும்.

முன்பு இலங்கைத் தமிழ் அறிஞர்கள் இந்தியாவிற்குச் சென்று இந்திய அறிஞர்களுக்குக் கூட தமிழ் கற்பித்திருக்கின்றார்கள். அவர்களில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர். தாய்மொழியின் பெருமையை ஒவ்வொருவரும் கட்டிக் காக்க வேண்டும்.

இளம் சந்ததியைப் பொறுத்தவரை வாசிப்புப் பழக்கம் வெகுவாக இப்போது குறைந்து விட்டது. அவர்களிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் குறைந்து விட்டது.



முன்பு இலங்கைத் தமிழ் அறிஞர்கள் இந்தியாவிற்குச் சென்று இந்திய அறிஞர்களுக்குக் கூட தமிழ் கற்பித்திருக்கின்றார்கள். அவர்களில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்.

தமிழ் மொழியை பல்கலைக்கழகம் சென்றுதான் கற்க வேண்டிய அவசியமில்லை. நல்ல நூல்களை வாசிக்கப் பழகிக் கொண்டால் தமிழ்மொழி கைவரப் பெறும். எவ்வளவுக்கு வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு மொழியின் வளம் பெருகும். பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை பெற்றோர் தூண்ட வேண்டும்.

தரமான படைப்புகள் மக்கள் மத்தியில் என்றும் பேசப்படும். சமூகத்தோடு ஒன்றித்து எழுத வேண்டும். இன்று நவீன சாதனங்களின் வருகையினால் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது. குறிப்பாக இளம் பிள்ளைகளின் நேரத்தை கைத்தொலைபேசிகள் ஆக்கிரமித்துள்ளன. இதில் தேவையில்லாத விடயங்களை தேடி தமது எதிர்காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். பிள்ளைகள் கெட்டுப் போவதற்கு மறைமுகமாக பெற்றோர்களே காரணமாக இருக்கின்றனர். பிள்ளை வளர்ப்பு என்பது அடுத்த சந்ததிக்கு ஒரு சவாலாக இருக்கப் போகிறது.தமிழ் எழுத்தாளர்கள் சத்தமில்லாது பல சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்களது எழுத்துப் பணிகள், இலக்கியப் பணிகள் ஊடகங்களில் அதிகமாக வெளிவருவது குறைவாகவேயுள்ளது. சிலர் பேரளவில் நூல் ஒன்றை வெளியிட்டு ஒரு கடை முதலாளிக்கு அல்லது அரசியல்வாதிக்கு முதற்பிரதியை வழங்குகின்றனர். வாசிப்போடு, எழுத்தோடு தொடர்பில்லாத ஒருவருக்கு நூல் ஒன்றை வழங்குவதால் எவ்வித பிரயோசனமுமில்லை. எழுதப்படுகின்ற எமது நூலகள் வாசிக்கப்படவேண்டும். அதுவே ஒரு எழுத்தாளனுக்கு ஆத்ம திருப்தியைக்கொடுக்கும்.

**செ.துஜியந்தன்...**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# தேசிய மருந்து உற்பத்தியாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கொடுக்க கைத்தொழில் அமைச்சரால் குழு

தேசிய மருந்து உற்பத்தியாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்து உள்ளூர் மற்றும் வெளியூர்களில் சந்தைவாய்ப்பை பெற தேவையான வழிகாட்டல், தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் கைத்தொழில் அமைச்சினதும் இலங்கை தொழிற்துறை அபிவிருத்தி சபையின் அதிகாரிகளையும் கொண்ட குழுவொன்றை அமைக்க கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்று (19) கொழும்பில் அமைந்துள்ள கைத்தொழில் அமைச்சில் சுதேச மருத்துவ ஊக்குவிப்பு, கிராம ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார ராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக சுதேச வைத்திய முறைகளில் மக்கள் அக்கறை காட்டுவதால் சுதேச வைத்திய முறையை பிரபலப்படுத்த அதன் மூலம் வழியேற்பட்டுள்ளது. அதனால் அதனை ஊக்குவிக்கும் முகமாக இக் கலந்துரையாடல் நடைபெறுவதாக ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.



சுதேச மருந்து உற்பதியாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினை என்னவென்றால் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வது மற்றும் அவற்றை இறக்குமதி செய்வதுமேயாகுமென அவர் தெரிவித்தார். உள்ளூர் கண்டுபிடிக்கப்படும் மூலப்பொருட்களை தேவையான தரத்திற்கு தயாரிக்க தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொடுக்க தலையிடுமாறு ராஜாங்க அமைச்சர் கைததொழில் அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்ததோடு இலங்கை தொழில் அபிவிருத்தி சபைக்கு தனது ஒத்துழைப்பை அதற்காக வழங்க முடியுமெனவும் அங்கு வருகை தந்திருந்த இலங்கை தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் உபசேன திஸாநாயக்க கூறினார். சுற்றுலா துறையை இலக்காகக்கொண்டு உல்லாசப்பயண ஹோட்டல்களில் சுதேச வைத்திய முறைகளை பிரபலப்படுத்த உள்ள சந்தர்ப்பம் குறித்தும் இங்கு உரையாடப்பட்டது. சுதேச மருந்து உற்பத்தியாளர்களுக்கு தேவையான பொதியிடும் உபகரணங்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யக்கூடிய வழிவகைகளை ஆராய்ந்து வெகுவிரைவில் அதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்கும்படியும், எதிர்காலத்தில் முழுமையான அதிகாரமுள்ள குழுவொன்றை நியமித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் சுதேச வைத்திய ஊக்குவிப்பு, கிராம ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார ராஜாங்க அமைச்சின் செயலாளர் குமாரி விரசேகர, மருந்து உற்பத்தி ஆலோசகர் சபையின் தலைவர் சாலுக்க அதாவுத, இலங்கை தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் உபசேன திஸாநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டார்கள்.

## தேசிய பட்டியல் வழங்காவிடின்...

தயாராகி வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலில் தோல்வியடைந்தவர்களைத் தேசியப் பட்டியல் ஊடாக நியமிப்பதில்லை என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் சம்பிரதாயம் என்று ஜோன் அமரதுங்க, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவூட்டியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் ஜோன் அமரதுங்கவின் பெயரே முதலில் இடம்பெற்றுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி மாத்திரமே கிடைத்தது. பொதுத் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்தக் கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவைப் போல் ஜோன் அமரதுங்கவும் கடந்த 1977ஆம் ஆண்டு முதலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்.

43 ஆண்டுகள் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காணாமலாக்கப்பட்ட கோரிக்கை...

வேண்டுமென வடக்கு , கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் ஊடக சந்திப்பு நேற்றையதினம் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்றது. குறித்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா இவ்வாறு தெரிவித்துள்ளர்.

## திட்டமிட்டவாறு பாராளுமன்றம் இன்று...

மீதான விவாதமும் நடத்தப்பட இருப்பதாக கூறினார்.

இதே வேளை இவ்வாரம் நடைபெறவுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்குமாறு கோரி எதிர்கட்சியின் பிரதம கொரொடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கொரோனா தொற்றாளர் பல்வேறு பகுதிகளில் இருந்து இனங்காணப்பட்டு வருவதாகவும் கொரோனாவை கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் அடிப்படையில் பாராளுமன்ற கூட்டங்களை நடத்த முடியாது எனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை கூட்டுவது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு முரணானது எனவும் எம்.பிகளுக்கான ஆசன ஒதுக்கீடும் இதற்கு மாற்றமாகவே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் திட்டமிட்டவாறு இன்று (20) காலை 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடுகிறது.இன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. நாளையும் நாளை மறுதினமும் 20 ஆவது திருத்தம் மீதான விவாதம் நடைபெற இருப்பதோடு வெள்ளியன்று மூன்று முன்னாள் எம்.பிகள் அனுதாபப் பிரேரணை விவாதம் இடம்பெறுகிறது.

இதே வேளை இன்று பாராளுமன்ற அ மர்வின் ஆரம்பத்தில் 20 ஆவது திருத்தம் தொடர்பான உச்ச நீதிமன்ற வியாக்கியானம் தொடர்பான சபாநாயகர் அறிவிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.(பா)

## பிள்ளையானுக்கு எதிரான வழக்கு...

காரணத்தால் சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் சமுகம் அளிக்காததால் எதிர்வரும் நவம்பர் மாதம் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்றைய தினம் இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றத்திற்கு சந்திரகாந்தன் உட்பட ஆறு பேரும் அழைத்துவரப்பட்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் நவம்பர் 2ம் , 10ம்,16ம் திகதிவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015 ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## மக்களை திசை திருப்பும்...

விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அரசியல் பழிவாங்களை அடிப்படையாகக்கொண்ட அரச கட்டமைப்பின் இந்த அணுகுமுறைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டை மீட்டெடுக்கப்போவதாகவும், புது யுகத்தை நோக்கி பயணிப்பதற்கான அபிவிருத்தி புரட்சியை ஏற்படுத்தப்போவதாகவும் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம், பல மாதங்கள் கடந்தும் பெரிதாக ஒன்றையும் செய்யவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தமது தோல்விகளை மூடிமறைத்து, பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை தக்க வைத்துக்கொள்வதற்காக அரசாங்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனை குறிவைத்துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பல தடவைகள் முன்னிலையாகி ரிஷாட் பதியுதீன் சாட்சியமளித்துள்ளார். அவர் எங்கும் ஓடி ஒளியவில்லை. சட்டரீதியாக முன்னெடுக்கப்படும் முழு நடவடிக்கைகளுக்கும் அவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தேர்தல் காலத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவரை கைது செய்து, 21/4 தாக்குதலுக்காகவே இந்த கைது என்பதை மக்கள் மத்தியில் காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ரிஷாட்டை கைது செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையானது அரசியல் பழிவாங்கலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

## உள்நாட்டில் உற்பத்தி... 03ஆம் பக்கத் தொடர்

தனியார் துறையினர் 400 மில்லியன் ரூபாவையும் தற்போது வருடாந்தம் செலவிடுகின்றது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது மருந்து பொருள் இரு வாரங்களுக்கு முன்னர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டமை தெரிந்ததே.

## அரசியல் பழிவாங்கல்... 03ஆம் பக்கத் தொடர்

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோரும் குறித்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சாட்சி வழங்குவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளார்.

இவரிடம் பல மணி நேரம் சாட்சியம் பெறப்பட்டது.

## பேராயருக்கு எதிராக... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட பெண் தெரிவித்துள்ள விடயங்கள் பாரபட்சமானவை, தவறானவை என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட பெண்ணிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பேராயர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கொரோனாவை போன்று... 03ஆம் பக்கத் தொடர்

அதனால் சுகாதார அமைச்சரின் ஆலோசனைப்படி குருவிட்ட நகரில் டெங்கு ஒழிப்பு திட்டதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வருடத்தில் கடந்த மாதங்களில் மாத்திரம் 27,870 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதோடு தற்போதுள்ள மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு பரவும் அவதானம் உள்ளது. சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி "இது தேசிய டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரமாகும். சுகாதார அமைச்சு என்ற வகையில் கொவிட்19 ஐ மாத்திம் முதன்மையாக கொண்டு நாம் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை. அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதோடு டெங்கு போன்ற ஏனைய நோய்களையும் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனால் டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரத்த நாடுபூராவும் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம்.

கடந்த 10 வருடங்களை நோக்கும் போது மிகக்குறைந்தளவு நோயாளர்கள் இந்த வருடமே அடையாளம் காணப்பட்டார்கள். 2018ம் ஆண்டு 51,000 நொயாளிகளும், 2019ம் ஆண்டு 105,049 நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டார்கள். 2019ம் ஆண்டு டெங்கு காய்ச்சல் காரணமாக 158 மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் கூறினார்.

## விக்கினேஸ்வரன் – மாவை...

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பொதுவான அரசியல் விடயங்களே பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலில் கடந்த காலத்தில் எதிரும் புதிருமாக இருந்த இருவரும் சந்தித்து – மனந்திறந்து பேசியிருப்பது தமிழ் அரசியல் பரப்பில் உருவாகிவரும் மாற்றம் ஒன்றைப் பிரதிபலிப்பதாகவே கருதப்படுகின்றது.

## அலரி மாளிகையில் இன்று...

சமயங்களையும் சமத்துவமாக வழிநடத்தும் வகையில் இந்த பூசை ஏற்பாடுகளை செய்துள்ளதாக அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. கொரோனா அச்சுறுத்தல் காணப்படும் இக்காலகட்டத்தில் இந்த நவராத்திரி பூஜையை கடந்த காலங்களில் நடத்தியது போல் விமரிசையாக நடத்தாமல் சமய அனுஷ்டானங்களை கருத்திற் கொண்டு நடத்துவதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ச தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது . அதற்கமைய மிகவும் முக்கியமான சிலருடன் சிவாச்சாரியார்கள் சகிதம் இந்த பூசை வழிபாடுகள் இன்று (20) மாலை அலரி மாளிகையில் நடைபெறும்.

## ஊரடங்கை மீறிய 302 பேர் கைது...

அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று மீண்டும் வர்த்தக நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்படாது என்று தெரிவித்துள்ள பொலிஸார், கொரோனா வைரஸ் மேலும் பரவாது தடுக்க பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். இதேவேளை ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 37 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஐந்து வாகனங்களும்பறிமுதல்செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து, ஒக்டோபர் 04 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறியக் குற்றச்சாட்டில் 302 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 53 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## இந்திய பிரதமர் – கூட்டமைப்பு...

கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இந்திய பிரதமரால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இரா. சம்பந்தன் கூறினார். எவ்வாறாயினும், தற்போது பயணம் மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இந்திய பிரதமரை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், விரைவில் இருதரப்பு கலந்துரையாடலை எவ்வாறு நடாத்துவது என்பது குறித்து ஆராயப்படவுள்ளது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையில் கடந்த செப்டெம்பர் 26 ஆம் திகதி காணொளி கலந்துரையாடல் இடம்பெற்றது தெரிந்ததே.

## 3 சிறுவர்கள் ஆற்றில்...

முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். கலேவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ரங்வெடியாவ கிராமத்தை சேர்ந்த மூத்த சகோதரி மர்சூக் மர்வா (15),அவரது தங்கை மர்சூக் பாத்திமா மன்ஹா (12),மற்றும் இவர்களது இளைய சகோதரர் மர்சூக் அப்துர் ரஹ்மான் (07) ஆகிய ஒன்று விட்ட சகோதரர்கள் மூவரே இவ்வாறு 'பெலிகமுவ எல' என்றழைக்கப் படும் ஆற்றில் மூழ்கி உயிரிழுந்தவர்கள் ஆவர்.

மூவரையும் நீண்ட நேரம் காணாததால் பெற்றோர் அவர்களை தேடியுள்ளனர்.இந்த நிலையில் விவசாயக் கிணற்றுக்கு அருகில் இவர்களின் ஆடைகள் மற்றும் பாதணி என்பன காணப்பட்டுள்ளன.

இவர்களது வீட்டிற்கு மிகவும் அண்மையிலுள்ள இவ் ஆற்றில் இவர்கள் வழமையாக நீராடச் செல்வதாகவும், நேற்றைய தினம் சற்று தொலைவில் உள்ள பாதுகாப்பற்ற விவசாயக் கிணற்றுக்கு நீராடச் சென்றதாகவும் ஒருவர் பின் ஒருவராக மூவரும் நீருள் மூழ்கியிருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இவர்கள் கெப்படிபொல முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 10,07 மற்றும் இரண்டாம் வகுப்புகளில் கற்பதாகவும் அறிய வருகிறது.

மரண விசாரணைக்காக மூன்று சடலங்களும் கலேவெல பிரதேச வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.இறுதிக் கிரியை இன்று நடைபெறும்.

## பெரும்பாலானவர்களுக்கு அறிகுறிகள்...

இலங்கையில் கொரோனா தொற்றின் முதல் அலைகளை விட தற்போதைய நிலைமை மிகவும் மோசமானது என்று குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று உறுதியாகிய நோயாளிகளை அறிகுறியற்ற நோயாளிகள், சிறிய அறிகுறிகளுடன் கூடிய நோயாளிகள் மற்றும் சுகாதார பிரச்சினைகள் உள்ள நோயாளிகள் என வகைப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கண்ட மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டால், அதிகாரிகள் மூன்று நிலை சிகிச்சையை மட்டுமே நிர்வகிக்க வேண்டியிருக்கும் என்றும் வைத்தியசாலை இடவசதிகள் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் டொக்டர் ஹரித அலுத்கே குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் கடுமையாக செயற்பட்டதாலே நிலைமையை கட்டுப்படுத்த முடிந்ததாகவும் தற்பொழுது மேசமாக கொரோனா பரவினாலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது போதுமானதாக இல்லை எனவும் அவர் கூறினார்.

## தலைமறைவாக உதவிய 7 பேர் இதுவரை...

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சி.ஐ.டி அதிகாரிகளால் நேற்று அதிகாலை தெஹிவளையில் உள்ள வீடொன்றில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவர் மறைந்திருந்த வீட்டில் வசிக்கும் மருத்துவரும் அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மருத்துவரின் மனைவி, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நெருங்கிய நண்பர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. தெஹிவளைக்கு வருவதற்கு முன்னர், ரிஷாத் பதியுதீன் தஞ்சம் கோரிய மற்ற இடங்கள் குறித்த விவரங்களைப் பெற பொலிஸார் சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் அவருக்கு அடைக்களம் கொடுத்த குற்றச்சாட்டில் இதுவரை 07 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் நேற்று மாலை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 27ஆந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## நேற்று அதிகாலை ரிஷாட் கைது...

அறிவுறுத்தல் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 6 தினங்களான தலைமறைவாகியிருந்த அவரை நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சி.ஐ.டி குழுவினர்கைது செய்துள்ளனர்.

இவர் சி.ஐ.டியினரால் தடுத்து வைத்து விசாரணை நடத்தப்பட்டதோடு நேற்று பிற்பகல் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.இவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பிரியந்த லியனகே நேற்று மாலை உத்தரவிட்டார்.

இந்த நிலையில் விசேட பாதுகாப்புடன் அவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கை தொடர்பாக தெளிவுபடுத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன,

2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல போக்குவரத்து வசதி அளிக்க புனர்வாழ்வு அமைச்சினூடாக 95 இலட்சத்து 29060 ரூபா பணம் வழங்கிய சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி விசாரணை நடத்தியது.விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது.இந்த நிலையில் ரிசாத் பதியுதீன் மற்றும் கணக்காளர் மனோரஞ்சன் மற்றும் மொஹமட் யாசீன் ஆகியோரை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் கடந்த 13 ஆம் திகதி பணிப்புரை வழங்கினார்.

இந்த நிலையில் சந்தேகபர்களை தப்புவதற்கு உதவிய இரு சாரிகளும் கான்ஸ்டபிள் ஒருவரும் கைதானதோடு சாரதிகள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள். கணக்காளர் மனோரஞ்சனும் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேகநபர்கள் கைதாவதில் உள்ள தாமதம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சந்தேகநபர்கள் தலைமறைவாக இருப்பதால் அவர்களை கைது செய்ய காலம் எடு'க்கிறது. சந்தேகபர்கள் தலைமறைவாக உதவிய 7 பேர் கைதாகியுள்ளனர்.இதில் இருவர் வெள்ளம்பிட்டியில் கைதானார்கள்.இவர்களிடம் இருந்த கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் மறைந்துள்ள இடம் தொடர்பில் தகவல் கிடைத்தது. அவர் களுபோவில,கொஹுவல பகுதியில் இருநாட்கள் தங்கியிருந்த பின்னர் கடந்த 15 ஆம் திகதி தெஹிவளை வீட்டிற்கு வந்துள்ளார்.

இவர் தலைமறைவாக இருக்க உதவிய பெண்மருத்துவர் ஒருவரும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டார்கள்.தலைமறைவாக இருந்த முதலாம் வீட்டில் இருந்து அடுத்த வீட்டுக்கு சென்ற அட்டாளைச்சேனையைச் சேர்ந்த வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கொஹுவலையில் இருந்த தெஹிவளை வர பயன்படுத்திய காரும் கைப்பற்றப்பட்டுள்ளது.முன்னாள் அமைச்சரின் செயலாளர் ஒருவரும் தெஹிவளை வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர்களுக்கு உதவிய மேலும் பலர் உள்ளதோடு அவர்களை கைது செய்ய விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் பெயரிட்ட மூன்று சந்தேகநபர்களில் இருவர் கைதாகியுள்ளதோடு யாசீனை கைது செய்ய விசாரணை இடம்பெறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## "800" திரைப்படத்திலிருந்து...

பதிவிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் முரளிதரன் மேலும் தெரிவித்துள்ளதாவது;என் மீதுள்ள தவறான புரிதலால் '800' படத்திலிருந்து விலக வேண்டும் என நடிகர் விஜய் சேதுபதிக்கு சிலர் தரப்பில் இருந்து கடுமையான அழுத்தம் தருவதை நான் அறிகிறேன்.

எனவே என்னால் தமிழ் நாட்டின் ஒரு தலைசிறந்த கலைஞன் பாதிப்படைவதை நான் விரும்பவில்லை.

அது மட்டுமல்லாது விஜய் சேதுபதியின் கலைப் பயணத் தில் வருங்காலங்களில் தேவையற்ற தடைகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு திரைப்படத்தில் இருந்து விலகிக் கொள்ளுமாறு அவரை கேட்டுக்கொள்கிறேன்

ஒவ்வொரு முறை எனக்கு ஏற்படும் தடைகளால் ஒருபோதும் நான் சோர்ந்து விடவில்லை. அவை அனைத்தையும் எதிர்கொண்டு வென்றே இந்த நிலையை என்னால் எட்ட முடிந்தது.

திரைப்படம் எதிர்கால தலைமுறையினருக்கும் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கும் ஓர் உத்வேகத்தையும் மன உறுதியையும் அளிக்கும் என எண்ணியே எனது சுயசரிதையை திரைப்படமாக்க சம்மதித்தேன்.

அதற்கும் இப்போது தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. நிச்சயமாக இந்தத் தடைகளையும் கடந்து இந்தப் படைப்பை அவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பார்கள் என நம்புகிறேன்.

இதற்கான அறிவிப்பு விரைவில் வரும் என தயாரிப்பு நிறுவனம் என்னிடம் உறுதி அளித்துள்ள நிலையில் அவர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என முரளிதரன் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கு டுவிட்டரில் பதிலளித்துள்ள விஜய் சேதுபதி, முரளி தரனின் அறிக்கையைக் குறிப்பிட்டு நன்றி வணக்கம் எனப் பதிவிட்டுள்ளார்.

# அயல்நாட்டு செய்திகள்



## லடாக் எல்லைக்குள் நுழைந்த

# சீன இராணுவ வீரரை திருப்பி ஒப்படைக்க இந்தியா முடிவு

லடாக் எல்லைக்குள் கவனக்குறைவாக நுழைந்த சீன இராணுவ வீரரை அந்நாட்டு படையினரிடம் திருப்ப ஒப்படைக்க இந்திய இராணுவம் முடிவு செய்துள்ளது.

லடாக் எல்லையான கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய, சீன வீரர்களிடையே கடந்த ஜூன் 15 ஆம் திகதி மோதல் ஏற்பட்டது. இதில் 20 இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு அதிகரித்தது. இரு நாடுகளும் எல்லை முழுவதும் படைகளை குவித்துள்ளன. போர் பதற்றத்தை தணிக்கும் விதமாக பாதுகாப்பு மந்திரிகள் மட்டம் உள்பட பல்வேறு மட்டங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையிலும் இரு நாடுகளும் எல்லையில் படைகளை குவித்து வைத்துள்ளதால் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், லடாக் எல்லையில் உள்ள சுமர்டெம்சோக் செக்டார் பகுதியில் இந்திய பாதுகாப்பு படையினர் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது இந்திய எல்லைக்குள் நுழைந்த சீன இராணுவ வீரரை இந்திய இராணுவத்தினர் அதிரடியாக பிடித்துள்ளனர்.

பிடிபட்ட சீன வீரரிடம் நடத்திய விசாரணையில் அவர் கவனக்குறைவாக இந்திய எல்லைக்குள் நுழைந்தது தெரியவந்தது.

மேலும், பிடிபட்ட சீன இராணுவ வீரரின் பெயர் வாங் யா என இந்திய ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய எல்லைக்குள் கவனக்குறைவாக நுழைந்த வாங் யா தற்போது தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், மோசமான வானிலையில் இருந்து காத்துக்கொள்ள அவருக்கு தேவையான மருத்துவம், உணவு, உடைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்திய இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிடிபட்ட சீன வீரர் வாங் யாவை உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சீன இராணுவத்திடமே மீண்டும் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்திய எல்லைக்குள் கவனக்குறைவாக நுழைந்த சீன வீரரை இந்திய படையினர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ள சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பிக்பொஸ்ஸிலிருந்து வெளியேறிய பின் ரேகா வெளியிட்ட கண்ணீர் பதிவு



தமிழில் பிக்பொஸ் 4வது சீசன் கடந்த 4ம் திகதியில் இருந்து ஒளிபரப்பாகி வருகிறது. நடிகர் ஆரி, பாடகர் வேல்முருகன், சனம் ஷெட்டி, ரேகா, கேப்ரியலா, ஆஜித், சம்யுக்தா, சோம் சேகர், சுரேஷ் சக்கரவர்த்தி, ஷிவானி, ஜித்தன் ரமேஷ், ரியோ உள்ளிட்ட 16 போட்டியாளர்களுடன் 17வதாக விஜே அர்ச்சனா இணைந்திருக்கிறார்.

முதல் வாரத்தில் யாரும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்று பிக்பொஸ் அறிவிக்க போட்டியாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் 2வது வாரம் ஒருவர் வெளியேற்றப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டு ரேகா, சனம் ஷெட்டி, ரம்யா, ஷிவானி, சம்யுக்தா, கேப்ரியலா உள்ளிட்டோர் எலிமினேஷன் லிஸ்டில் இடம்பெற்றனர். இவர்களில் நடிகை ரேகா நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டார்.

ரேகா வீட்டை விட்டு வெளியேறப்போகும் செய்தி அறிந்து ரியோ, பாலாஜி, ஷிவானி உள்ளிட்டோர் கண்ணீர்விட்டனர். மற்ற போட்டியாளர்களும் சோகமாகினர். வீட்டில் இருந்து செல்லும் முன்னர் பிக்பொஸ் கட்டளையின்படி செடி ஒன்றை ரியோவுக்கு கொடுத்த ரேகா, அவருக்கான உண்டியலை ஷிவானிக்கு கொடுத்து அங்கிருந்து விடைபெற்றார்.

நிகழ்ச்சியிலிருந்து வெளியேறிய பின்னர் நடிகை ரேகா தனது இன்ஸ்டாகிராமில் எழுதியுள்ள முதல் பதிவில், "தான் மிகவும் மிஸ் செய்வது ஷிவானி மற்றும் பாலாஜியைத் தான்" என்று கூறியுள்ளார்.

ரேகாவின் இந்த பதிவுக்கு ரசிகர்கள் பலரும் கொமெண்ட் பதிவிட்டு வருகின்றனர். ஒரு சிலர் மீண்டும் வைல்ட் கார்ட் என்ட்ரியாக உள்ளே செல்லுங்கள் என ரேகாவிடம் கூறியுள்ளனர்.

# தடையை மீறி சந்தனக் கடத்தல் வீரப்பன் சமாதியில் அஞ்சலி

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே உள்ள மூலக்காட்டில் உள்ள சந்தனக் கடத்தல் வீரப்பனின் சமாதியில் கூட்டம் கூட விதித்திருந்த தடையை மீறி, அஞ்சலி செலுத்திச் சென்ற வீரப்பனின் மனைவி, மகள்கள் உட்பட 100 பேர் மீது கொளத்தூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



தமிழக, கர்நாடக வனப்பகுதியில் சந்தனக் கடத்தல் வீரப்பன் பதுங்கி, யானைத் தந்தம், சந்தன மரங்களை வெட்டி, கடத்தி அதிரடிப் படை வீரர்களுக்குச் சவாலாக விளங்கி வந்தார். இந்நிலையில் கடந்த 2004ம் ஆண்டு ஒக்டோபர் 18ம் திகதி தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே தமிழக அதிரடிப் படையால் சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## வீரப்பன் மனைவி, மகள்கள் உட்பட 100 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு

சேலம் மாவட்டம், கொளத்தூர் அருகே உள்ள மூலக்காட்டில் சந்தன கடத்தல் வீரப்பனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதனையடுத்து ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 18ம் திகதி சந்தனக் கடத்தல் வீரப்பனின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நினைவு நாள் அனுசரித்து, அவரது சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தி வருவது வழக்கம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மூலக்காட்டில் உள்ள வீரப்பனின் சமாதியில் கூட்டம் கூடப் பொலிஸார் தடை விதித்திருந்தனர். மேலும், கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்தத் தடையை மீறி மூலக்காட்டில் சந்தன கடத்தல் வீரப்பனின் சமாதிக்குப் பலரும் வந்து, தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிக்காமல், அஞ்சலி செலுத்திச் சென்றதாக கிராம நிர்வாக அதிகாரி மோகனுக்குத் தகவல் கிடைத்தது. தடையை மீறிச் சந்தனக் கடத்தல் வீரப்பன் சமாதியில் கூட்டம் கூட்டியதாக வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி, அவரது மூத்த மகளும், பாஜக இளைஞரணி நிர்வாகியுமான வித்யா ராணி உட்பட 100 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# ஜோதிகா வழங்கிய நிதி உதவியால் புத்துயிர் பெற்ற அரச மருத்துவமனை

ஜோதிகா கொடுத்த நிதியின் மூலம் தஞ்சையில் உள்ள அரசு ராசா மிராசுதார் மருத்துவமனை சீரமைக்கப்பட்டு புதிய வடிவம் பெற்றுள்ளது.



நடிகை ஜோதிகா சில மாதங்களுக்கு முன்பு படப்பிடிப்புக்காக தஞ்சாவூர் சென்றிருந்த போது அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையை பார்வையிட்டார். பின்னர் அதுகுறித்து ஒரு விருது விழாவில் பேசிய ஜோதிகா, "கோவிலை பராமரிப்பதை போல், மருத்துவமனைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை. இங்குள்ள ஒரு மருத்துவமனையை பார்த்த போது அதிர்ச்சியாக இருந்தது.

நான் பார்த்ததை வாயால் சொல்ல முடியாது. கோவிலுக்கு அவ்வளவு செலவு செய்கிறார்கள், பராமரிக்கிறார்கள். அதற்கு தரும் கவனம், உண்டியலில் போடும் பணத்தை போல் பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டடத்திற்கும் கொடுங்கள். அந்த மருத்துவமனையை பார்த்து விட்டு என்னால் கோவிலுக்கு செல்ல முடியவில்லை" என கூறினார். ஜோதிகாவின் இந்த பேச்சு பெரும் சர்ச்சையானது.

பின்னர், அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையை சீரமைக்க தன் பங்களிப்பாக 25 லட்சம் ரூபாய் நிதி உதவியை ஜோதிகா வழங்கி இருந்தார்.

இந்நிலையில், ஜோதிகா கொடுத்த நிதியின் மூலம் மருத்துவமனை சீரமைக்கப்பட்டு புதிய வடிவம் பெற்றுள்ளது. இதுகுறித்து புகைப்படங்களை டுவிட்டரில் பதிவிட்டுள்ள இயக்குனர் இரா.சரவணன், "எங்கள் படப்பிடிப்புக்காக தஞ்சை ராசா மிராசுதார் அரசு மருத்துவமனைக்கு வந்தார் ஜோதிகா. மனம் கசிந்தவராக தன்னால் முடிந்த உதவியைச் செய்து மருத்துவமனையை எப்படி மாற்றி இருக்கிறார் பாருங்கள்.

''அன்பில், அக்கறையில் வியக்க வைக்கும் எங்கள் மாதங்கி வாழ்க பல்லாண்டு" என பதிவிட்டுள்ளார்.


www.nlb.lk

**18.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 515,907**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 23,345,490.00**

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 23

NLB NATIONAL LOTTERIES

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2574 சீட்டிழுப்பு திகதி 18.10.2020

ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 47 48 56 74

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 133 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 307 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 7432 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 4929 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 122927 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 22320 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 158,054

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,918,300.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,877,394.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள் **செவண** உங்களுக்கு வீடு - கைகளில் காசு

திகதி 2020/10/18 சீட்டிழுப்பு இலக்கம் 305

ஆங்கில எழுத்து T வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 18 66 67

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- | வீதம் | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- | வீதம் | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- | வீதம் | 65 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- | வீதம் | 121 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- | வீதம் | 2,931 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- | வீதம் | 1,655 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- | வீதம் | 40,971 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- | வீதம் | 6,356 |

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 14,000,000/- இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,711,590/-

ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல.32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. இலங்கை தொ.பே.: 011 460 7000, 011 460 7000, தொ.நகல்: 011 4669416 www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4279 உத்தியோகபூர்வ முடிவுகள் **மஹஜன சம்பத**

திகதி: 18-10-2020

வெற்றி எழுத்து W வெற்றி இலக்கங்கள் 8 8 8 6 4 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 8 8 8 6 4 7 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 8 8 6 4 7 | ரூபா. 100,000/- | 08 |
| 3ஆம் பரிசு | 8 6 4 7 | ரூபா. 10,000/- | 87 |
| 4ஆம் பரிசு | 6 4 7 | ரூபா. 1,000/- | 882 |
| 5ஆம் பரிசு | 4 7 | ரூபா. 100/- | 8,796 |
| 6ஆம் பரிசு | 7 | ரூபா. 20/- | 87,332 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 8 8 8 6 4 | ரூபா. 10,000/- | 06 |
| 8ஆம் பரிசு | 8 8 8 6 | ரூபா. 1,000/- | 86 |
| 9ஆம் பரிசு | 8 8 8 | ரூபா. 100/- | 900 |
| 10ஆம் பரிசு | 8 8 | ரூபா. 50/- | 8,742 |
| 11ஆம் பரிசு | W | ரூபா. 20/- | 34,851 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,548,360.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,965,819.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

**தன நிதானய** உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/10/18

சீட்டிழுப்பு இலக்கம் - 330

ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 08 43 57 59

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 54 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 114 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 2,995 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,032 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 50,840 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 9,413 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,302,480.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 65,453

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 119,003,209.84

ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

Mega POWER மெகா பவர் சீட்டிழுப்பு இலக்கம்: 646 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 18/10/2020

ஆங்கில எழுத்து E சுப்பர் இலக்கம் 22 வெற்றி இலக்கங்கள் 04 38 41 50

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 69 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 197 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4,626 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,022 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 76,591 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 14,098 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .53,823,546.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ .13,093,986.40 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ .20,555,108.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,864,760.00

தேசிய லொத்தர் சபை

## கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சு

# கமத்தொழில்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

## ஆக்கக்கூறு: 1 – கமத்தொழில் பெறுமதி சங்கிலி அபிவிருத்தி

# பதவி வெற்றிடம்

## செயற்றிட்ட பதவிநிலை அலுவலர்களின் ஆட்சேர்ப்பு

இரு விடயப்பரப்புக்களான ''பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களுக்கு ஆதரவு வழங்கல்'' மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்வாதார தரங்கள் மற்றும் சமூக உட்சேர்க்கைகள்'' ஆகியவற்றில் நாட்டின் கூட்டு மூலோபாயத்திற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையானது இணங்கியுள்ளது. மேலேயுள்ள மூலோபாய நோக்கங்களை அடைவதற்காக செயற்றிட்டத்தின் 1 ஆம் ஆக்கக்கூறானது வர்த்தகரீதியிலான மற்றும் ஏற்றுமதி நோக்கமுள்ள கமத்தொழிலை ஊக்குவிப்பதற்காக பயிர்செய்கை உற்பத்தியாளர் நிறுவனங்களிலிருந்து தனியார்துறை முதலீடு மற்றும் கமத்தொழில் வியாபாரம் ஆகியவற்றை உயர் பெறுமதி கமத்தொழில் உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்த்தல் இயலுமான சுற்றாடல் வழங்கல், ஊக்குவிப்புக்கள் மற்றும் அவ்வாறான முதலீடுகளுக்கு நிதிக்கான வழியை பொருத்தமான மானியங்கள், தொழில்நுட்ப உதவியாளர்களின் ஆதரவு வர்த்தகரீதியிலான வங்கி துறையுடனான தொடர்புகள் மற்றும் கடன் உத்தரவாத வசதியூடாக அடையாளம் காண்பதற்கும் உறுதுணையாக விளங்குகின்றது. இச்செயற்றிட்டத்தின் அமுல்நடாத்தப்படும் காலப்பகுதியானது 2017 ஆம் ஆண்டிலிருந்து 5 வருடங்கள் என்பதுடன் செயற்றிட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 102.73 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் கீழுள்ள கமத்தொழில்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்திலுள்ள பின்வரும் பதவிகளை நிரப்புவதற்காக இலங்கையின் அனுபவமும் தகைமையுமுள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவைப்படுத்தப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

### பெறுமதி சங்கிலி விஷேடத்துனர் (பிஎஸ்3) – 01 பதவி வெற்றிடம் (கொழும்பு)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்டதொரு தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றதொரு இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை.

   அத்துடன்

   நிருவாக மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

   அல்லது

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டட தகைமையொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்டதொரு தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றதொரு இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை.

   மற்றும்

   உரித்தான துறையில் பட்டப்பின் பட்டமொன்று அல்லது கூட்டிணைந்த/ பட்டயம் பெற்ற அங்கத்துவம் அல்லது உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற நிகரான தொழில்சார் தகைமை.

   அத்துடன்

   நிருவாக மட்டத்தில் ஆகக் குறைந்தது 9 வருட பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவம்.

   அல்லது

3. நாடளாவியரீதியிலான அரசாங்க சேவையொன்றின் I ஆம் வகுப்பு அலுவலர் அல்லது உரித்தான துறையில் பெற்ற நிகரான நிலபரமொன்று.

   அத்துடன்

   நாடளாவியரீதியிலான அரசாங்க சேவைகளில் I ஆம் வகுப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.

**வயதெல்லை:** விண்ணப்பம் மூடும் திகதியன்று 65 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

### மாணிய இணைப்பு முகாமையாளர் (பிஎஸ்-4) – 01 பதவி வெற்றிடம் (வவுனியா)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட உரித்தான துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்டதொரு தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றதொரு இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை.

   அத்துடன்

   உரித்தான துறையில் ஆகக்குறைந்தது 8 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

   அல்லது

2. நாடளாவியரீதியிலான அரசாங்க சேவையின் III/II ஆம் வகுப்பில் அல்லது மேற்பட்ட அல்லது உரித்தான துறையில் நிகரான நிலபரத்திலுள்ள அலுவலகரொருவர்.

   அத்துடன்

   III/II ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 8 வருட அனுபவம்.

வவுனியாவிற்கு நியமிக்கப்படும் முகாமையாளர் தமிழ் மொழியில் எழுத்து மற்றும் வாய்மொழி ஆற்றல் இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** விண்ணப்பம் மூடும் திகதியன்று 65 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

### புள்ளியலாளர் (பிஎஸ்4) 01 பதவி வெற்றிடம் (கொழும்பு)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட உரித்தான துறையில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்கான நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

   அல்லது

   உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்டதொரு தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றதொரு இணைந்த அங்கத்துவம்/ நிகரானதொரு தொழில்சார் தகைமை.

   அத்துடன்

   உரித்தான துறையில் ஆகக்குறைந்தது 8 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

   அல்லது

2. நாடளாவியரீதியிலான அரசாங்க சேவையின் III/II ஆம் வகுப்பில் அல்லது மேற்பட்ட அல்லது உரித்தான துறையில் நிகரான நிலபரத்திலுள்ள அலுவலகரொருவர்.

   அத்துடன்

   III/II ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 8 வருட அனுபவம்.

**வயதெல்லை:** விண்ணப்பம் மூடும் திகதியன்று 65 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

### செயற்றிட்ட செயலாளர் (பிஎஸ்6) – 1 பதவி வெற்றிடம் (கொழும்பு)

1. க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியுடன் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் அடங்கலாக மூன்று (3) திறமைச் சித்திகள்

   அத்துடன்

   அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து செயலாளர் கற்கைநெறியில் சித்தி அல்லது பட்டயம் பெற்ற செயலாளருக்கான பரீட்சைகளுக்காக ஆயத்தம் செய்தல்

   அத்துடன்

   உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம்.

   அல்லது

2. உரித்தான துறையில் 4 வருட அனுபவமுள்ள பட்டயம் பெற்ற செயலாளர்.

**வயதெல்லை:** விண்ணப்பம் மூடும் திகதியன்று 65 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

### நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - 04 பதவி வெற்றிடங்கள் (கொழும்பு, வவுனியா மற்றும் அம்பாறை)

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், நிதி, கமத்தொழில் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

  அல்லது

- உரித்தான துறைக்காக தொழில்நுட்ப, தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

  அத்துடன்

  உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 2 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**வயதெல்லை:** விண்ணப்பத்தை மூடும் திகதியன்று 24 வயதிற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

### முகாமைத்துவ உதவியாளர் - 01 பதவி வெற்றிடம் (கொழும்பு)

1. க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியுடன் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தி.

   அத்துடன்

2. க.பொ.த (உ-த) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது வினாத்தாள் நீங்கலாக) அனைத்து பாடங்களிலும் சித்தியுடன் பழைய பாடவிதானத்தின் கீழ் 3 பாடங்களில் சித்தி.

   அத்துடன்

   நிகரான தகைமையில் ஆகக் குறைந்தது 2 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**வயதெல்லை:** விண்ணப்பத்தை மூடும் திகதியன்று 22 வயதிற்கு குறையாமலும் 35 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

### தெரிவு செய்யும் முறைமை:

தகைமை மற்றும் அனுபவ அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

**சம்பளம்:** 01/2019 என்ற இலக்கமும் 2019.03.15 ஆம் திகதியையுடையதுமான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் சம்பளம் அமைந்திருக்கும்.

### பொதுவான நிபந்தனைகள்:

அ) இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

ஆ) சிறந்த குணவியல்புகள் மற்றும் திடகாத்திரமான ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

இ) ஆங்கில மொழியில் தொடர்பாடல் திறன்கள் (பேச்சு மற்றும் எழுத்து) விரும்பத்தக்கது.

ஈ) உயர்மட்ட கணனி அறிவு விரும்பத்தக்கது.

### வேலைவாய்ப்பில் இணைவதற்கான நிபந்தனைகள்:

அ) நியமனமானது ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அமைந்திருப்பதுடன் சேவை நீடிப்பானது செயற்றிட்டக் காலப்பகுதி மற்றும் ஊழியரின் வெற்றிகரமான செயற்பாட்டின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

### சாரதிகள் - 03 பதவிகள் (கொழும்பு)

**1. கல்விசார் தகைமைகள்:**

க.பொ.த. (சா-த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சிங்களம்/ தமிழ் மொழி அடங்கலாக இரு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

**2. தொழில்சார் தகைமைகள்:**

2.1 24 CWT இற்கு குறையாத நிறையுள்ள தனியார்/ வாடகை கார்கள் மற்றும் ஸ்டேசன் வெகன்கள் ஆகியவற்றை செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சாரதி உரிமமொன்றை வைத்திருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பிற்கு ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களுக்கு முன்னராக புதிய நடைமுறையின் கீழ் C வகுப்பு மற்றும் C1 வகுப்பு வாகனங்களுக்கான சாரதி உரிமம் அல்லது B வகுப்பு வாகனங்களுக்கான சாரதி உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்)

2.2. நெடுஞ்சாலை செய்விதி தொடர்பாக ஓரளவு அறிவிருத்தல் வேண்டும்.

**3. அனுபவம்:**

மோட்டார் வாகனங்களை செலுத்துவதில் சாரதியொருவராக 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (அனுபவமானது சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

**4. உடல் தகுதித்தன்மை:**

ஆகக் குறைந்தது 5 அடி உயரமிருத்தல் வேண்டும்.

பகல் மற்றும் இரவில் கடமைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் ஆரோக்கியம் மற்றும் சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். இவ்விடயமானது அரசாங்க மருத்துவரொருவரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழொன்றினால் சான்று பகரப்படல் வேண்டும்.

**5. ஏனைய தகைமைகள்:**

5.1. இலங்கை பிரஜையொருவராகவிருத்தல் வேண்டும்.

5.2. விண்ணப்பதாரியானவர் மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3. விதிக்கப்பட்ட திகதியின் அறிவித்தல்/வர்த்தமானியின் 2 மற்றும் 3 ஆம் பந்தியின் பிரகாரம் பதவிக்கான ஆட்சேர்ப்பிற்காக தேவைப்படுத்தப்படும் அனைத்து தகைமைகளும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**6. வயது:**

6.1. ஆகக் குறைந்த வயதெல்லை: 18 வயதிற்கு குறைவாகவிருத்தல் ஆகாது.

6.2. ஆகக்கூடிய வயதெல்லை: 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு தகுதியுள்ள பதவியிலிருப்பவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

### விண்ணப்பங்கள்:

அனைத்து விண்ணப்பதாரிகளும் அவர்களின் சுயதரவை உறவினரல்லாத இருவரின் பரிந்துரையாளர்களின் விபரங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2020 நவம்பர் 03ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தற்போது அரசாங்க/ ஓரளவு அரசு சார்ந்த சேவைகளிலிருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான திணைக்களங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சு**
**கமத்தொழில்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**16 ஆம் மட்டம், ''சுஹுருபாய'',**
**பத்தரமுல்ல.**

**20 ஒக்டோபர் 2020**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## 2021 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

மேல் குறிப்பிடப்பட்ட காரணிக்காக **2020.10.09** ஆம் திகதி தினமின பத்திரிக்கையில் பிரசுரமான விளம்பரம் தொடர்பிலேயாகும்.

மேல் குறிப்பிடப்பட்ட காரணிக்கான விண்ணப்பப்படிவங்கள் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்திலிருந்து (www.cfhc.gov.lk) பதிவிறக்கம் செய்யமுடியும். வைப்புத்தொகையை கூட்டுத்தாபனத்தின் பெயரில் உள்ள இலங்கை வங்கி, பெருநிறுவன கிளை (Bank of Ceylon - Corporate Branch) கணக்கு இலக்கம் :- 1446 ற்கு வைப்புச்செய்து, பற்றுச்சீட்டின் நகலை முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவத்துடன் **2020.12.10** ஆம் திகதி அல்லது அதற்கு முன் **2020.10.09** ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்ததன் படி அனுப்புவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**இல - 15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு - 15**

---

# பொது அறிவித்தல்

## மின்சக்தி அமைச்சு

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வக சோதனை சேவைகளை வழங்குவதற்கு எரிசக்தி அமைச்சில் பதிவு செய்து கொள்ளுமாறு குறித்த அமைச்சின் சார்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அழைப்பு விடுக்கிறது.
இறக்குமதி செய்து அல்லது ஒருங்கிணைந்து சந்தைப்படுத்தும், வழங்கும் அல்லது விநியோகிக்கும் மசகு எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை ஆய்வு செய்யும் நடவடிக்கை, மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வக சோதனையில் உள்ளடங்கும்.

1. இலங்கை தர நிர்ணய பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தரநிலைகள் (இயற்பியல்-வேதியியல் சோதனைகள்):
   a) பெட்ரோல் எஞ்சின் எண்ணெய் (கசோலின் எஞ்சின் ஒய்ல்) எஸ்.எல்.எஸ் 1374
   b) டீசல் எஞ்சின் எண்ணெய் எஸ்.எல்.எஸ் 1373
   c) இரண்டு ஸ்ட்ரோக் (2ஸ்ட்ரோக்) எஞ்சின் எண்ணெய் எஸ்.எல்.எஸ் 1446
   d) நான்கு ஸ்ட்ரோக் (4 ஸ்ட்ரோக்) எஞ்சின் எண்ணெய் எஸ்.எல்.எஸ் 1409
   e) வாகனங்களுக்கு கியர் எண்ணெய் (கியர் ஒயில்) எஸ்.எல்.எஸ் 1396
   f) கிரீஸ் எஸ்.எல்.எஸ் 1424
2. மேலே உள்ள எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்பு வகைகளின் இணக்க நிலையை சோதிப்பதற்கு தயாரிப்பு மாதிரியுடன் ஒப்பிடுவதற்கு இன்-ப்ராரெட்பெக்ட் ரோஸ்கோபிக் பரிசோதனை(வரம்பு 50-4000 செ.மீ $^{-1}$)

மேலே குறிப்பிட்டுள்ள ஆய்வக சோதனை சேவைகளை வழங்கும் திறன் கொண்ட ஆர்வமுள்ள தரப்பினர் தமது ஆய்வக நடைமுறைகள், உபகரணங்கள் மற்றும் கருவிகள், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் வழங்கப்பட்டுவரும் அத்தகைய சேவைகளின் விபரங்கள்மற்றும் தொடர்புடைய அங்கீகார சான்றிதழ் விபரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முன்மொழிவை கீழ்காணும் முகவரிக்கு 27 நவம்பர் 2020 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு**
**6-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.**

**தொலைபேசி: (011) 2392608/7 பெக்ஸ்: (011)2392641**
**மின்னஞ்சல்: regulate@pucsl.gov.lk**
**2020.10.20**

---


# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**


---



118 **ஜீப்புகள்,பிக்கப்புகள்** விற்பனைக்கு

WP CBE-4526 Micro ssangyong, 2018, Jeep கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0714542958, 0714515236. 064322



122 **மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

NW BIC-5680 TVS NTORO, 2019, Motor C ycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 064316

SG BGI- 2989 Bajaj Platina , 2018, Motor Cycle கூடிய வி லைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 064315

WP YB- 9712 Bajaj, 2010, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலி ப ல் பி னான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 1 0 810 . 064320






209 **வியாபார ஸ்தலம்** வாடகைக்கு/ குத்தகைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதியில் வகுப்புகளை நடாத்த முடியுமான A/C வசதி களையுடைய, 200 பேர்கள் கல்வி பயில முடியுமான கல்வி நிறுவனம், மணித்தியால, நாள், மாத வாடகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு. 0757 0 69474, 0771 1 88614. 065211

---

# பண்டாரகம பிரதேச சபை

## பண்டாரகம பிரதேச சபையினால் சேர்க்கப்படுகின்ற சிதைவடையும் குப்பைகளை அகற்றுவதற்கான விலைமனுக்கோரல்

பண்டாரகம பிரதேச சபையின் சிதைவடையும் குப்பைகளை அகற்றுவதற்காக 2020.11.06 மு.ப.10.00 வரை என்னால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. அன்றே மு.ப.10.05 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். மீளளிக்கப்படும் ரூ.20,000/- வைப்புத்தொகையை மற்றும் மீளளிக்கப்படாத ரூ.5000/-ஐ பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகளில் மட்டும் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்படிவங்கள் 2020.10.15 முதல் 2020.11.05 பி.ப.3.00வரை அலுவலக நேரங்களில் பண்டாரகம பிரதேச சபை தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். அதிகாரப் பிரதேசத்திற்குள் சேர்க்கப்படுகின்ற குப்பைகள் எம்மால் ஒரு இடத்திற்கு சேர்த்துக்கொண்ட பின்பு அன்றே உங்களால் அகற்றிச் செல்லல் வேண்டும். அகற்றப்படும் குப்பைகளில் மூன்று கியூப் கொள்ளளவுடைய ஒரு லோட் இற்கு அறவிடப்படும் கட்டணமாக குறித்த விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

குப்பைகளை அகற்றப்படும் இடத்திற்கு அல்லது முற்றவெளிக்கு சம்பந்தப்படுகின்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் குறித்த நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்ட சுற்றாடல் பரிந்துரைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். குப்பைகளை போக்குவரத்துச் செய்கின்ற டிப்பர் வண்டிகளின் குறைந்தபட்ச கொள்ளளவு 03 கியூப் இற்கு மேல் இருத்தல் வேண்டும் அத்துடன் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட பெற்றுக்கொண்ட போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளுடன் தயாரித்து ஒவ்வொரு உறையின் வலதுபக்க மேல் மூலையில் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" எனக் குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் "சிதைவடையும் குப்பைகளை அகற்றுவதற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிட்டு, தலைவர், பண்டாரகம பிரதேச சபை, பண்டாரகம என்ற முகவரிக்கு 2020.11.06 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். இது பற்றிய மேலதிக விபரங்களை மற்றும் குறித்த நிபந்தனைகளை பிரதேச சபை தலைமையகத்திற்கு வருகைதந்து அல்லது கீழக்காணும் தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

வழங்கப்படுகின்ற சகல நிபந்தனைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை இவ் அறிவித்தலின் ஒரு பகுதியாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். கேள்வி பற்றி மேற்கொள்ளப்படும் இறுதி தீர்மானங்கள் பண்டாரகம பிரதேச சபைக்கு உரியது.

**எச்.ஏ.எம்.தேவேந்ர பெரேரா,**
**தலைவர்,**
**பண்டாரகம பிரதேச சபை.**
**2020.10.15**

# கிழக்கின் குரல்



# வரலாற்றுப் பழைமை வாய்ந்த சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் தீமிதிப்பு உற்சவம்



சுமார் 2000ஆண்டுகள் வரலாற்றுப் பழைமையும் பிரசித்தியும் வாய்ந்த சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.

இப்புராதன ஆலயமானது இலங்கையின் பூர்வீக குடிகளென வரலாற்று ஆசிரியர்களால் உறுதிப்படுத்தப்படும் இயக்க வம்சத்தினரால் கி.மு 3ஆம் 4ஆம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்டதாக ஆலயம் தொடர்பான வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

கி.மு. 4ஆம் நூற்றாண்டில் பாண்டிய குல சிற்றரசர்களது செல்வாக்கின் கீழ் உறுகுணையில் திராவிட நாகரிகம் நிலவிய வேளையில் தமிழ் சிற்றரசர்களது ஆட்சியின் கீழ் சம்மாந்துறை பிரதேசமும் இருந்துள்ளது.

**முன்னொரு காலத்தில் தமிழ்–முஸ்லிம் இனஉறவுக்கு வலுசேர்த்த பெருமை மிகு அம்மன் திருத்தலம்**







சம்மாந்துறை என்பது மிகவும் பாரம்பரியமான வரலாற்று சிறப்பு மிக்க பழம் பெரும் பகுதியாகும். பண்டைய வரலாற்றுக்குப் பிற்பட்ட காலம் தொடக்கம் அங்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மிகவும் அந்நியோன்யமாக வாழ்ந்து வந்தனர். இலங்கையில் அவ்வப்போது ஏற்பட்ட இனமத வன்முறைகளின் போதெல்லாம் அமைதி குலையாத பிரதேசமாகவே சம்மாந்துறை இருந்து வந்துள்ளது.

எனினும் 1990களில் கிழக்கில் ஏற்பட்ட இனவன்முறையையடுத்து சம்மாந்துறை பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் உயிர் தப்புவதற்காக இடம்பெயர நேரிட்டது.

சம்மாந்துறையில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் உயிரச்சம் காரணமாக கல்முனை, காரைதீவு, திருக்கோவில், மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு குடிபெயர நேரிட்டது. புலம்பெயர் தேசங்களுக்கும் பலர் சென்றிருந்தனர்.

சிறப்பாகவிருந்த சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தை சூழ வாழ்ந்து வந்த தமிழ் மக்களும் இடம்பெயர நேரிட்டது. எனினும் ஆலயம் சேதமடையாமலேயே இருந்து வந்தது. சம்மாந்துறையில் இனஐக்கியத்தை நேசிக்கின்ற முஸ்லிம் மக்கள் பலர் இந்த இந்து ஆலயம் சேதமுறாமல் பாதுகாப்பதில் அக்கறை செலுத்தி வந்தனர்.

இனவன்முறைகள் தணிந்த பின்னர் சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த சடங்குகள் அனைத்தும் வழமை போல நடைபெற்று வந்தாலும் கூட அந்த ஆலயத்தைச் சூழ பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் இன்றுவரை மீளக் குடியேறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அம்மக்கள் வாழ்ந்த காணிகள் இன்றும் அங்கு அப்படியே காணப்படுகின்றன.

புலம்பெயர்ந்த மற்றும் இடம்பெயர்ந்த சம்மாந்துறை மக்கள் வருடாந்தம் இவ்வாலயத்தின் பூஜைகளை, திருவிழாக்களை சிறப்பாக நடத்தி வருகின்றனர். முன்னைய காலத்தில் இங்கு நடைபெறும் தீமிதிப்பு வைபவத்தை பார்வையிடுவதற்கு முஸ்லிம்களும் பெருமளவில் வருவதுண்டு.

இவ்வாலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் கல்முனையில் இருந்து கொண்டு ஆலயத்தை ஏனையோரின் உதவியுடன் சிறப்பாக நடத்தி வருகிறார்.

கடந்த கொரோனா முதலாவது அலை காலகட்டத்தில் ஆலய நிதியில் இருந்து சுமார் 2 இலட்ச ரூபா செலவில் கோரக்கர் கிராம தமிழ், முஸ்லிம் மக்களுக்கு 1000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அதுமட்டுமல்ல பல சமூக சேவைகளையும் இவ்வாலய நிருவாக சபையினர் நடத்தி வருகின்றனர். அதுமட்டுமன்றி ஆலயத்தின் முன்னாலுள்ள தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தில் உள்ள ஆலய வளவில் ஆலய நிதியுடன் இதே பகுதியில் வாழ்ந்து, தற்போது லண்டனில் வாழும் நடேசன் என்பவரின் நிதியுதவியுடன் இரு வீடுகள் கட்டப்பட்டன. இவ்வீடுகள் வீடுகளில்லாதிருந்த வறுமைக் கோட்டிற்குள் கோரக்கர் கிராமத்தில் வாழ்ந்து வந்த இரு குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் ஆலய தர்மகர்த்தா எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

முன்னாள் கப்புகனார் கே.பாஸ்கரன் வழிகாட்டலில் பிரதம பூசகர் கு.லோகேஸ் முன்னிலையில் அதிகாலையில் தீமிதிப்பிற்கான சடங்குகள் ஆரம்பமாகி காலை 6 மணியளவில் தீமிதிப்பு நடைபெற்றது.சுமார் 800 பக்தர்கள் தீமிதிப்பீலீடுபட்டு தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திப்பரவசத்துடன் தீமிதிப்பு வைபவம் இடம்பெற்றது.

முன்னொரு காலத்தில் இனஐக்கியத்திற்கு வலுசேர்த்த இவ்வாலய தீமிதிப்பு வைபவம் இம்முறை கொரோனாவுக்கு மத்தியில் இம்முறையும் சிறப்பாக நடைபெற்றமை சிறப்பு எனலாம்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவர்களே மக்களின் இன்றைய தேவையாகும்

*கல்லடி குறூப் நிருபர்*

எமது மக்களுக்கு தேவை மக்களின் பிரச்சினையை வைத்து அரசியல் செய்பவர்கள் அல்ல மாறாக மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பவர்களே என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

வந்தாறுமூலை கிராமத்தில் சோலை விவசாய நிலையத்தினை திறக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பல வருடங்களாக எங்களது மாவட்டத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்து சட்டவிரோதமாக காடுகளை வெட்டுவது, காணிகளை பிடிப்பது, கால்நடைகளுக்கு அழிவை உண்டு பண்ணுவது போன்ற செயற்பாடுகள் கடந்த காலம் முதல் இடம்பெற்று வருகின்றது. இவை புதிய செயற்பாடுகள் அல்ல குறிப்பாக



இந்த மாவட்டத்திலே மாதவனை, மையிலத்தமடு போன்ற பகுதிகளில் ஆங்காங்கே இடம்பெற்று வந்திருக்கின்றது.

இது தொடர்பாக நாங்கள் கடந்த பாராளுமன்ற அமர்வின் போது அமைச்சர் சமல் ராஜபக்ஷ மகாவலியோடு சம்பந்தப்படுவதனால்

அது சம்பந்தமாக அவருடன் பேசியிருந்தேன், அதன் பிற்பாடு நான் மகாவலி அதிகார சபைக்குச் சென்று இராஜாங்க அமைச்சரோடும் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளரோடும் கிட்டத்தட்ட நாற்பது நிமிடத்திற்கு மேல் இது தொடர்பாக கதைத்திருக்கின்றேன் என்றார்.

அதே வேளை இப்பொழுது எமது மக்களுக்கு தேவை மக்களின் பிரச்சினையை வைத்து அரசியல் செய்பவர்கள் அல்ல, மாறாக மக்களின் பிரச்சினைக்கு தீர்வு எடுத்துக் கொடுப்பவர்களே என தெரிவித்தார்.

# தமிழ் இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர் முகில்வண்ணன்

## நூல்வெளியீட்டு நிகழ்வில் பிரதேச செயலாளர் அதிசயராஜ்

*காரைதீவு குறூப் நிருபர்*



'முகில்வண்ணன் நினைவுநூல்' தினகரன், தினகரன் வாரமஞ்சரி முன்னாள் பிரதம ஆசிரியர் க.குணராசாவுக்கு வழங்கிய போது...

நாடறிந்த எழுத்தாளர் கலாபூசணம் வித்தகர் முகில்வண்ணன் தன்னுடைய எழுத்தால் தமிழ் இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர். இவ்வாறு 'முகில்வண்ணன் நினைவுநூல்' வெளியீட்டு நிகழ்வில் பிரதான உரையாற்றிய கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தெரிவித்தார்.

கல்முனை நெற் ஊடகவலையமைப்பினர் ஏற்பாடு செய்த அமரர் முகில்வண்ணனின் நினைவேந்தல் நிகழ்வும் 'முகில்வண்ணன் நினைவுநூல்' வெளியீட்டு நிகழ்வும் பாண்டிருப்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரதேச செயலாளர் மேலும் உரையாற்றுகையில்: மும்மொழிப் புலமைவாய்ந்த ஓர் இலக்கியவாதி. 1956 இல் கல்முனைபற்றிமா கல்லூரி வெளியிட்ட ஆம்பல் என்ற பத்திரிகையில் இவரது இலக்கியப் பிரவேசம் இடம்பெற்றிருந்தது. கடந்த 60 வருடகாலமாக கதை, கவிதை, சிறுகதை, நாவல் சிறுவர் இலக்கியம், கட்டுரை என பல கோணங்களில் 40 நூல்களை வெளியிட்டுள்ளார். கிழக்கில் இவர் போன்று 40 நூல்களை வெளியிட்டு சகல துறைகளிலும் தடம் பதித்துச் சாதனைப் படைத்தவர் எவருமில்லை என்றார்.



**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;**

# காத்தான்குடி சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள காத்தான்குடி மற்றும் காத்தான்குடியை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 61 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 02.11.2020 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறு இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களின் வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. ரிஸ்வான் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் 02.11.2020 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# நிவாரண கொடுப்பனவில் புறக்கணிக்கப்படும் தமிழ் மக்கள்

*பாண்டிருப்பு தினகரன் நிருபர்*

பாண்டிருப்பில் சுனாமியால் மேட்டு வட்டை வீட்டுத் திட்டத்தில் 2011 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு வெள்ள நஷ்டஈட்டுக்கும், வீடுகளை திருத்திக் கொடுப்பதற்கும் என கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதற்குரிய ஆவணங்கள் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் இங்குள்ள தமிழ் மக்களுக்கு மாத்திரம் இன்றுவரை இந் நிவாரண இழப்பீடு வழங்கப்படவில்லை. ஏனைய இடங்களுக்கு இழப்பீடுகள் கொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாண்டிருப்பில் பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் பாண்டிருப்பு மேற்கே அமைந்துள்ள மேட்டுவட்டை வீட்டுத் திட்டத்தில் வசித்துவருகின்றனர். இங்கு 65 வீடுகளில் 95 குடும்பங்கள் வசிக்கின்றனர். இந் நிலையில் இவர்கள் குடியிருக்கும் வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அறைகளிலும், மண்டபங்களிலும் பள்ளங்களும், குழிகளும் ஏற்பட்டுள்ளன. அத்துடன் நிலைகள், ஜன்னல்கள் என்பன பழுதடைந்துள்ளதுடன் மேற்கூரைக்குப் போடப்பட்டுள்ள மரங்கள் கறையான் அரித்து உடைந்துவிழும் நிலையிலுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்கு வருடாந்தம் ஏற்படும் கடும் மழை வெள்ளம் காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர்.

தற்போது இங்கு மக்கள் குடியிருக்கும் வீடுகள் சேதமடைந்துள்ளன. குறித்த வீடுகளை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாண்டிருப்பு மேட்டு வட்டை வீட்டுத்திட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா பிரதேசத்தில் கொவிட் 19 தாக்கத்தினால் தனிமைப்படுத்தபட்டுள்ள இம் முறை உயர்தர மற்றும் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள வசதி குறைந்த 45 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 2,500/= பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் தயாபரன் கலைவாணியினால் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசனிடம் கடந்த வாரம் கையளிக்க ப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# கிழக்கின் குரல்



## 20ஆவது திருத்தத்துக்கு

# ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆதரவு

### இணைப்பாளர் எஸ். அப்துல் ஜப்பார்

**ஒலுவில் விசேட நிருபர்**

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சி ஆதரவு வழங்குமென ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், நீர் வழங்கல் வசதிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பாளருமான எஸ். அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியினால் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கல்முனையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியை விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் ஒரு பகுதியாக கிழக்கு மாகாணத்தில் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இனவாதம், மதவாதம், மொழிவாதம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே இலங்கையில் அரசியல் கட்சிகள் செயற்பட்டன. இனவாத, மதவாதத்திற்கு அப்பால் செயற்படுகின்ற இடதுசாரி முன்னணிக் கட்சியில் இளைஞர், யுவதிகள் இணைந்து வருகின்றார்கள். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் பிரதேச செயலகங்கள் ரீதியாக பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன வாதம், மதவாதத்தினால் பிரிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களை தேசிய அரசியலுக்குள் கொண்டு செல்வதற்காகவே ஜனநாயக இடதுசாரி முன்னணிக் கட்சியை கிழக்கு மாகாணத்தில் பலப்படுத்தவுள்ளோம் என்றார்.

# கடல் அலைகளினால் காவு கொள்ளப்படும் மீன்வாடிகள்

**காரைதீவு குறூப் நிருபர்**

கடலரிப்பின் உக்கிரத்தில் சீறிப் பாயும் கடல் அலைகளினால் தினமும் கரையிலுள்ள மீன்வாடிகள் இடிந்து தகர்ந்து வருகின்றன.

இந்த அவலநிலை காரைதீவுப் பிரதேசத்திற்குட்பட்ட மாளிகைக் காடு கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்று வருகிறது.

கடலரிப்பாலும் சீற்றமுறும் அலைகளினாலும் இதுவரை சுமார் 10 மீன்வாடிகள் சேதமாகியுள்ளன. கிணறொன்று அடித்துச் செல்லப்படும் நிலையிலுள்ளது. மீன்வாடியொன்று இடிந்து திடீரென வீழ்ந்ததில் அருகிலிருந்த தோணியொன்று உடைந்து சேதமாகியது.

இந்த கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் தோணிகள் படகுகளை கடலில் இறக்கி தொழில் செய்வதும் பின்னர் அவற்றை கரையில் தரிக்கவைப்பதும் பெரும்பாடாகவுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மாளிகைக்காடு மீனவர்கள் கூறுகையில்:

கடலரிப்பு தினம் தினம் மிக மோசமாக அதிகரித்து வருகிறது. அதனால் எமது படகுகளை தோணிகளை நிறுத்தவும் இடமில்லை. மீன்களை கரைசேர்த்து விற்கவும் முடியவில்லை. கழிவு நீரால் சூழல் மாசுபடும் நிலை ஒருபுறம். கரையோர கட்டடங்களை அகற்றக் கோரும் அதிகாரிகள் மறுபுறம்.

இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து நிலத்தை வாங்கி வாடி கட்டிய எமது மீனவர்கள் இன்று பெருநஸஷ்டத்தை எதிர்நோக்கிவருகின்றனர்.

மொத்தத்தில் எமது கடற்றொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலில் எமது ஜீவனோபாயத்திற்கு வகைசொல்ல வேண்டும். இந்த சேதங்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். எமது தொழிலை பிரச்சினையின்றி மேற்கொள்ளவும் கடலரிப்பை தடுக்கவும் முன்வர வேண்டும் என்றார்கள்.









சுகாதார அமைச்சின் வழகாட்டலில் மட்டக்களப்பு நகரில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து தொற்றுநீக்கி திரவம் விசுறும் நடவடிக்கைகள் நேற்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட போது... (படங்கள்: மட்டக்களப்பு குறூப் நிருபர்)

# கிழக்கு மாகாண சபை தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க கோரிக்கை

### கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைரெத்தினம்

**துறைநீலாவணை தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண சபையின் கீழ் தற்காலிகமாக வேலை செய்யும் அனைவரையும் நிரந்தரமாக்குமாறு கோரி உள்ளூராட்சி அமைச்சருக்கு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், பத்மநாபா மன்றம், ஈ.பி.ஆர்.எல்.எப் இரா. துரைரெத்தினம் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 17.09.2019 அன்றைய அமைச்சரவை தீர்மானமான தற்காலிகமாக வேலை செய்கின்றவர்களை நிரந்தரமாக்குமாறு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக வெளியிடப்பட்ட நிருபத்திற்கமைவாக கிழக்கு மாகாணத்திலுள்ள தற்காலிகமாக வேலை செய்யும் அனைவரையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதன் தொடர்ச்சியாக 18.09.2019 அன்று மீண்டும் ஒரு சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் தேர்தலும் அறிவிக்கப்பட்டது.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளிலும், ஏனைய திணைக்களங்களிலும் அண்ணளவாக 750ற்கு மேற்பட்டோர் தற்காலிகமாக சேவை செய்து வருகின்றனர்.இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை தேர்தல் காரணத்தைக் கொண்டும், பொது நிருவாக அமைச்சு கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரமும் 180நாள் நிரந்தர நியமனத்தை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது. தற்சமயம் தேர்தல் காலம் முடிவடைந்துள்ளதனால் இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ரயிலில் மோதி பசு உயிரிழப்பு



கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் வாழைச்சேனை ரயில் நிலைய பகுதியில் பசு ஒன்று மோதி உயிரிழந்துள்ளது.இச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

பசுவின் உரிமையாளர் இனங்காணப்படாத நிலையில் பிரதேச மக்கள் வாழைச்சேனை பிரதேச சபைக்கு தெரியப்படுத்தி பசு ரயில் பாதையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் டிப்பர் - பஸ் விபத்து; பலருக்கு சிறு காயங்கள்



**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு பிரதான வீதியில் தனியார் பஸ் மற்றும் கல் ஏற்றிவந்த ரிப்பரும் மோதியதில் சிலர் காயமுற்றனர்.

இச்சம்பவம் நேற்று காலை 6.30 மணியளவில் காரைதீவு கண்ணகை அம்மனாலயமருகில் பிரதான வீதியில் இடம்பெற்றது. வாகன விபத்தில் கல் ரிப்பரின் முன்பாகம் முற்றாக சேதமடைந்துள்ளது.

ரிப்பர் வாகனத்தில் முன்னாலிருந்த பயணித்தவர்கள் மற்றும் சாரதி காயத்திற்குள்ளாகி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பஸ்ஸில் வந்தவர்கள் வேறு பஸ்ஸில் மாறிச் சென்றனர்.

சம்மாந்துறை போக்குவரத்துப் பொலிசார் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

பாணமையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் காரைதீவு பிரதானவீதி தரிப்பிடத்தில் நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்தவேளை பின்னால் கல்முனை நோக்கி கற்களை எற்றிக் கொண்டுவந்த ரிப்பர் பஸ்ஸை முந்தப்புறப்பட்டபோது எதிராக வாகனமொன்று வந்ததால் மீண்டும் பஸ் பின்னால் திருப்பியபோது இவ்விபத்து இடம்பெற்றிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.பொலிசார் விசாரணையைத் தொடர்கின்றனர்.



# ஒலுவில் பொது நூலகம் இடமாற்றம்

**ஒலுவில் நிருபர்**




ஒலுவில் பொது நூலகக் கட்டடம் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் நூலகத்தை தற்காலிகமாக வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒலுவில் பொது நூலகமானது சுமார் 30 ஆண்டுகளாக இக்கட்டடத்தில் இயங்கி வந்துள்ளது. இருந்தும் இக்கட்டடம் சேதமடைந்த நிலையில் மழை வெயில் என்பனவற்றிக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய நிலையில் இல்லாமல் அசௌரியங்களுக்குள் இந்நூலகம் இயங்கி வந்தது.

இந் நிலையில் தற்போது வாசகர்களும் மாணவர்களும் இந்நூலகத்தை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதனால் தற்காலிகமாக ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றிற்கு இடமாற்றுவதற்கான ஏற்பாடுகளாக புத்தகங்கள், ஆவணங்கள், தளபாடங்கள், பத்திரிகைகள் ஆகியன ஒழுங்கு படுத்தப்படுகின்றன.

இவ்விடத்தில் நவீன வசதிகளுடன் புதிய நூலகமொன்று அமைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் ஒலுவில் பொது நூலக பொறுப்பாளர் எம்.வை.எம் நயீம் தெரிவித்தார்



# அரச வனத்தில் சட்டவிரோத நடவடிக்கை; ஐந்து சந்தேக நபர்கள் கைது, 02 வாகனங்கள் மீட்பு

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை வட்டார வன திணைக்களத்திற்கு சொந்தமான குடும்பிமலை ஒதுக்குக் காடு மற்றும் கதிரவெளி அரச காட்டு பகுதிகளில் சட்டவிரோத செயலில் ஈடுபட்ட ஐந்து சந்தேக நபர்கள், இரண்டு வாகனங்களுடன் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டதாக வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

குடும்பிமலை ஒதுக்குக்காடு பகுதியில் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது வன திணைக்களத்திற்கு சொந்தமான எல்லைக் கல்லினை அகற்றி காடு அழிப்பில் ஈடுபட்ட நிலையில் இரண்டு சந்தேக நபர்களும், ஒரு வீல்லோடர் இயந்திரமும் சுற்றிவலைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் சுங்கான் கேணி மற்றும் சித்தாண்டி பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் என்று வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

அத்தோடு வாகரை கதிரவெளி அரச காட்டு பகுதியில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் கதிரவெளியைச் சேர்ந்த சந்தேக நபர் மூவரும், ஒரு உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவர் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட வாகனம் நீதிமன்ற விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வன உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மீது தாக்குதல்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம்



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் 20ஆவது நினைவு தினமான நேற்று அவருக்கு அஞ்சலி செலுத்தியதுடன் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# இந்திய உதவி நிதியில் வடக்கு, கிழக்கில் விகாரைகளை அரசாங்கம் கட்டக் கூடாது

## உத்தரவாதம் பெற வேண்டும் என மோடிக்கு விக்கி கடிதம்

**நமது நிருபர்**

பௌத்த மதத்தை வலுப்படுத்தவும், பௌத்த மத தலங்களை கட்டுவதற்கும் இந்தியா கொடுக்கும் நிதியின் மூலம் வடக்கு, கிழக்கில் பௌத்த மத தலங்களை கட்டக் கூடாது என்ற உத்தரவாதத்தை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் பாரத பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அண்மையில் எமது நாட்டின் பிரதமரிடம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கேட்டுக் கொண்டமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





உங்கள் செயலானது எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைக் கூட்டியுள்ளது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை நீங்கள் நன்கறிவீர்கள் என்று நம்புகின்றேன். அத்துடன் இலங்கை இந்திய உடன்பாட்டையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தையும் நீங்கள் வெவ்வேறாகப் பகுத்துப் பார்த்திருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.

அண்மையில் வானதி ஸ்ரீனிவாசன் தலைமைத்துவத்தின் கீழ் புதிய இந்திய ஃபோரத்தால் நடத்தப்பட்ட 'சூம்' வழிக் கலந்துரையாடலின் போது 1987ம் ஆண்டின் இலங்கை இந்திய உடன்பாட்டின் முழுமையான நடைமுறைப்படுத்தலானது எம் இரு தரப்பாருக்கும் நன்மை பயக்கும் என்று கூறியிருந்தேன். என்னுடைய தமிழ்ப் பேச்சின் ஆங்கில மொழியாக்கத்தின் பிரதியொன்றை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

ஒரு சில விடயங்கள் உங்களின் பிரத்தியேகமான அவதானத்தைப் பெற வேண்டும். அண்மையில் இந்தியாவின் கொடையாகக் கொடுக்க உடன்பட்ட தொகையான 15 மில்லியன் டொலர் தொகையை இரு நாடுகளுக்கிடையிலான பௌத்த நட்புறவை மேம்படுத்தவும் பௌத்த சமய வணக்கஸ் தலங்களைக் கட்டுவதற்கும் புதுப்பிப்பதற்கும் மற்றும் தொல்பொருளியல் சம்பந்தமான கூட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முனையும் போது இலங்கையின் வடகிழக்கு தமிழரின் தாயகப் பிரதேசத்தில் அத் தொகையின் நலனைப் பாவிக்கக் கூடாதென்ற ஒரு உத்தரவாதத்தை இலங்கைப் பிரதமரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இருதரப்பு ஆயுதமேந்திய படைகளின் கூட்டை வலுப்படுத்த வழங்கப்படும் உதவிகள் மற்றும் பயிற்சிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தையும் மதிப்பிற்குரிய மகிந்த ராஜபக்சவிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

# வவுனியா வைத்தியசாலையில் கொரோனா பரவல் இல்லை

## வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமார்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா வைத்தியசாலையில் கொவிட்19 சமூக பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் உரிய பாதுகாப்பு நடைமுறைகள் பேணப்பட்டே வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டிருந்தனர்.

அதன் மூலம் சமூக பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

தொற்று நீக்கல் செயற்பாட்டிற்காகவே வைத்திசாலை பிரதான வாயில் மூடப்பட்டுள்ளது. ஏனைய சிகிச்சை செயற்பாடுகள் வழமைபோல நடைபெற்று வருகின்றன. ஊழியர்கள் பயணிக்கும் வாயில் வழியாக நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

எனினும் பொதுமக்கள் முன் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது என்றார்.

# வவுனியா தனிமைப்படுத்தல் முகாமில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் கம்பஹாவைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமையால் வைத்தியசாலையும் தொற்று நீக்கப்பட்டது.

பூந்தோட்டம் தேசிய கல்வியற் கல்லூரி கொவிட்19 தனிமைப்படுத்தல் நிலையமாக அண்மையில் மாற்றப்பட்டிருந்தது. இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்கள் என பலர் இங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள 324 பேருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில் அவர்களில் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை ஒன்றிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்ட பின்னர் வெலிக்கந்த கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வவுனியா வைத்தியசாலையின் பிரதான வாயில் காலை மூடப்பட்டு, வெளிநோயாளர் பகுதி உட்பட பல்வேறு பகுதிகள் தொற்று நீக்கம் செய்யப்பட்டதுடன் ஊழியர்கள் செல்லும் வாயிலினூடாக பொதுமக்கள் உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.



யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரான மயில்வாகனம் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு அஞ்சலி நேற்று யாழ்.ஊடக அமையத்தில் அனுஷ்டிக்கப்பட்ட போது... படம்: யாழ்.விசேட நிருபர்

# வருமானம் குறைந்தவருக்காக இராணுவம் கட்டும் வீட்டுக்கு அடிக்கல் நாட்டல்



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் புதிதாக வீடு அமைத்துக்கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் இராணுவத்தினரின் சமூக சேவைகளில் ஒன்றாக, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தினருக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், நேற்று புதிதாக வீடு அமைத்துக்கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

தென்னிலங்கையைச் சேர்ந்த நன்கொடையாளர் ஒருவரின் நிதி பங்களிப்பில், இராணுவத்தினரின் மூலதனத்தில் சுமார் 7 இலட்சத்து, 50 ஆயிரம் ரூபா நிதி பங்களிப்பில் வீடு கட்டுவதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அடிக்கல்லை யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் செனரத் பண்டார நாட்டிவைத்ததுடன், நன்கொடையாளரும், கல்லினை நாட்டி வைத்தார்.

# குடாநாட்டுக்கு கொரோனா அச்சுறுத்தல்

## யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார்.

நேற்று இராணுவத்தினரால் வடமராட்சி பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் கொரோனா தொற்று மிகவும் வலுவடைந்து வருகின்றது. அதேபோல வடக்கினை பொறுத்தவரைக்கும் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாவண்ணம் மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

யாழ்.மாவட்டத்தினை பொறுத்தவரைக்கும் இரண்டு தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று விடத்தல்பளை தனிமைப்படுத்தல் முகாம். மற்றது கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி தனிமைப்படுத்தல் முகாம்.

தேசிய கல்வியற் கல்லூரி தனிமைப்படுத்தல் முகாமிற்கு நேற்று முன்தினம் 108 பேர் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். எனவே யாழ்ப்பாண மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கொரோனா தொற்று ஏற்படாவண்ணம் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாக வடக்கு மக்களுக்கு இன்னொரு அச்ச நிலைமை காணப்படுகின்றது. தென்னிந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியுள்ளது.

# 20 இல் உள்ள குறைபாடுகளை நீக்க தலைவர்களுடன் கலந்துரையாடப்படும்

## காதர் மஸ்தான் கூறுகிறார்

**மன்னார் குறூப் நிருபர்**

20ஆம் அரசியலமைப்பு திருத்தத்துக்கு தமது முழுமையான ஆதரவு உள்ளதாகவும் அதில் உள்ள மக்களுக்கு தீங்கான குறைபாடுகளை நீக்குவது தொடர்பாக தலைவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகள் எதிர்காலத்தில் நிலையாக நடைபெற வேண்டும் என்ற வகையில் ஜனாதிபதி என்னை மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நியமித்துள்ளார். எனக்கு பணிப்புரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் எதிர்காலத்தில் நல்ல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் மன்னார் மாவட்டத்தில் விரைவான சில அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாக அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன்.

யாரும் பாதிக்கப்படாமல் எவ்வித பாகுபாடுகளுமின்றி இன, மத வேறுபாடுகள், கட்சி வேறுபாடுகளின்றி இப்பகுதிகளின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும். மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் உள்ள பிரச்சினைகள் விரைவாக தீர்த்து வைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

20 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை மாற்றுவோம் என்று கூறினார்கள். அவர்கள் கூறியதற்கு அமைவாகவே சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். அரசியல் அமைப்பு திருத்தத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

# வவுனியா வைத்தியசாலையில் கொரோனா சந்தேகத்தில் ஐவர்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா சந்தேகத்தில் ஐந்து பேர் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை தனிமைப்படுத்தி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிப் பகுதியில் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் கம்பனி ஒன்றின் பணியாளர்கள் இருவருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டதையடுத்து வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து வந்து அனுமதித்துள்ளனர்.

இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணி நேரத்தில் அக் கம்பனியை சேர்ந்த மேலும் மூவருக்கு கொரோனா அறிகுறி தென்பட்ட நிலையில் அவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# தமிழன் குண்டு மீட்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாமூலைப் பகுதியில் உள்ள வீட்டுக் காணியிலிருந்து கைக் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காணியினை சுத்தம் செய்யும் போதே நேற்று இக் குண்டு மீட்கப்பட்டது. இதனை தொடர்ந்து காணியின் உரிமையாளர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அதனை மீட்டனர்.

விடுதலைப் புலிகளின் தயாரிப்பான தமிழன் கைக்குண்டே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிசார் தெரிவித்தனர்.



# கோபத்தால் பறிபோன மூன்று உயிர்கள்

## வவுனியாவில் அதிகாலையில் பயங்கரம்

## 17.10.2020 இடம்பெற்ற முக்கொலையின் பின்னணி என்ன?



கி.வசந்தரூபன்
வவுனியா விசேட நிருபர்

கோபத்தில் எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் விபரீதத்தையே தரும் என்பார்கள். அதுபோலவே நவராத்திரி தினத்தின் முதல் நாளான சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் வவுனியாவில் இடம்பெற்ற முக்கொலைச் சம்பவம் பதிவாகியுள்ளது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான ஓமந்தை இலுப்பைக்குளம் என்ற கிராமம் அமைந்துள்ளது. தினமும் நாட் கூலி வேலை, காடுகளுக்குச் சென்று வருமானம் தேடல் என அந்த மக்களின் நாளாந்த சீவியம் போராட்டத்துடனேயே சென்று கொண்டிருக்கின்றது.



அத்தகையதொரு போராட்டத்திற்கு மத்தியில் தமது வாழ்க்கையை கொண்டுநடத்திக் கொண்டிருக்கும் அக் கிராமத்தில் இரட்டைக் கொலை சம்பவம் காயமடைந்த மற்றைய நபரும் நேற்று உயிரிழந்த நிலையில் முக்கொலையாக பதிவாகியுள்ளது.

சந்தேகநபரான அந்த கிராமத்தைச் சேர்ந்த 30 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்ட ஒரு அலசலே இது.

வவுனியா, ஓமந்தை மாணிக்கவளவுப் பகுதியில் உள்ள மாணிக்கர் இலுப்பைக்குளம் என்ற பகுதியில் தம்பா என்றழைக்கப்படும் கோபால் குகதாசன் (வயது 42) தனது நான்கு பிள்ளைகளுடனான குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியின் 9 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள மேலியாவனம் என்ற கிராமத்தில் வசிக்கும் மச்சான் முறை உறவினரான சிவனு மகேந்திரன் (வயது 34) என்வரும், அவரது நண்பரான சு.சிவகரன் (வயது 41 ) என்பவரும் தம்பாவின் வீட்டிற்கு வருகை தந்தனர்.

வருகைதந்த அவர்கள் தம்பாவின் அயலவர்களிடம் உழவு இயந்திரம் ஒன்றை விரைவில் அனுராதபுரத்தில் கொள்வனவு செய்யவுள்ளதாகவும், இன்று தம்பாவைப் பார்த்து விட்டு போவோம் என வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

வந்தோரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டை பின்பற்றிய தம்பாவும் தனது மச்சானுக்கும், அவரது நண்பருக்கும் விருந்து கொடுக்க தீர்மானித்தார். கோழி சமைத்து சாப்பாடு வழங்கியதுடன், மதுப்பாட்டி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்தார்.

மாணிக்கர் இலுப்பைக்குளம் பகுதியில் தம்பா கட்டிய புதிய வீடு எவரும் இன்றி இருந்தது. அந்த வீட்டில் மது விருந்துக்கும் ஏற்பாடாகியிருந்தது. வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகிய மதுப் பாட்டி சனிக்கிழமை அதிகாலை 2 மணி தாண்டியும் நீடித்துள்ளது.

குறித்த பாட்டி நடந்த வீட்டில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டில் 30 வயதுடைய கண்ணன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வசித்து வருகின்றார். 1995 ஆம் ஆண்டு நாட்டு யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு தாய், தந்தையுடன் சென்று அங்கு படித்து வந்த கண்ணன் 2015 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக கடல் மூலம் அவுஸ்ரேலியா சென்ற போது கைது செய்யப்பட்டார்.

கிறிஸ்மஸ் தீவில் 2 வருடம் தடுத்து வைக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தார். அதன் பின் தாய், தந்தையரின் தொடர்பின்றி தாயாரின் காணியில் உள்ள மாணிக்கர் இலுப்பைக்குளம் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

கூலி வேலைக்கு செல்வதும், கூலி வேலை இல்லாதபோது புதூர் காட்டுப் பகுதிக்கு சென்று தேன் எடுப்பதும் என இவரது நாளாந்த வாழ்க்கை பயணம் ஓடிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மது அருந்திவிட்டு கண்ணன் வீட்டில் உறங்கியுள்ளார்.



இதன்போது, தம்பாவின் புதிய வீட்டில் இருந்து சண்டை போடுவது போன்று எழுந்த அதிக சத்தத்தையடுத்து அதிகாலை 2.00 2.30 மணியளவில் கண்ணன் அங்கு சென்றுள்ளார். அப்போது தம்பாவும், மச்சானும், மச்சானின் நண்பரும் மது அருந்திக்கொண்டு இருந்துள்ளனர். கண்ணனைக் கண்டதும் தம்பாவின் மச்சானின் நண்பர் கதைத்தபோது முன்பின் அறியாத இருவருக்கும் வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தம்பாவும் மற்றைய இருவரும் கண்ணனை அறைக்குள் இழுத்து சென்று தாக்கியுள்ளனர். அங்கிருந்து 2.45 மணியளவில் தப்பிச் சென்ற கண்ணன் தனது வீட்டில் படுத்துள்ளார். வெறியில் இருந்த கண்ணனுக்கு அவர்கள் தாக்கியது கோபத்திற்கு மேல் கோபத்தை ஏற்படுத்தியது. தூக்கம் வரவில்லை. கோபத்திற்கு பழி தீர்க்க முற்பட்டான். விபரீத முடிவெடுத்தான்.

நாளாந்தம் அவனது வாழ்க்கையுடன் பழக்கப்பட்ட கோடரியையும்,



சுரேஸ் த சில்வா



எஸ்.சுகந்

பக்கத்து வீட்டில் சில தினங்களுக்கு முன் கைமாறாக வேண்டிய காட்டுக் கத்தியையும் எடுத்துக்கொண்டு அதிகாலை 4 மணியளவில் தம்பாவின் வீட்டிற்கு சென்றான். காட்டுக் கத்தியை வேலியில் சார்த்திவிட்டு உள்ளே சென்றபோது அங்கு மூவரும் நிறைவெறியில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

எந்த சத்தமும் இல்லை; அமைதியாக இருந்தது. மெல்ல நடந்து சென்ற கண்ணன் தம்பாவுக்கும், தம்பாவின் மச்சானுக்கும் நடுவில் நின்று கொண்டு தம்பாவின் உச்சந் தலையில் கோடரியால் கொத்தினான். தம்பா எந்த அசைவும் இன்றி அந்த இடத்திலேயே சடலமானார்.

மறுபுறம் திரும்பி தம்பாவின் மச்சானுக்கும் கோடரியால் கொத்தினான். அவரும் எந்த அசைவும் இன்றி அந்த இடத்திலேயே பலியானார்; இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. நின்ற இடத்தில் இருந்து தம்பாவின் மச்சானின் நண்பருக்கு கொத்திய போது நெற்றியில் பிளவு ஏற்பட்டது.

இதனையடுத்து கண்ணன் அங்கிருந்து வெளியேறி வேலியில் சாத்தி வைத்திருந்த காட்டுக் கத்தியையும் எடுத்து கொண்டு, கத்தியை யாரிடம் வாங்கினானோ அவர்களிடமே கத்தியை கொண்டு சென்று கொடுத்துவிட்டு, நான் மூன்று பேரையும் போட்டுள்ளேன் எனத் தெரிவித்துவிட்டு சென்றுள்ளார்.

கண்ணன் பகிடியாக கூறினான் என அவர்கள் நினைத்தார்கள். இருப்பினும் சந்தேகத்தில் அயலில் உள்ள பிறிதொரு நபரையும் அழைத்துக் கொண்டு சென்று பார்த்த போது மூவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர். உடனடியாக ஓடிச் சென்ற அவர்கள் ஓமந்தைப் பொலிசாருக்கு தெரியப்படுத்தினர்.

ஓமந்தைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா வழிகாட்டலில், ஓமந்தை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியுமான எஸ்.சுகந் தலைமையில் பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணையில் இறங்கினர். சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். அப்போது இருவர் உயிரிழந்திருந்தனர்.



தம்பாவின் மச்சானின் நண்பர் துடித்துக் கொண்டு இருந்துள்ளார். உடனடியாக பொலிசார் 1990 அவசர அம்புலன்ஸ் வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு குறித்த நபரை அனுப்பி வைத்தனர்.

அதன்பின் சம்பவ இடத்தில் காணப்பட்ட இரு சடலங்கள் அங்குள்ள தடயப் பொருட்களை வைத்து ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர். வவுனியா மாவட்ட நீதிபதி றியால் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதுடன் விசாரணைகளுக்கும் உத்தரவிட்டார்.

இந்நிலையில், அக் கிராமத்திலிருந்து செல்வதற்காக பேருந்தில் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவரை குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் சந்தேகத்தில் கைது செய்து விசாரணை செய்தபோது குறித்த இளைஞனே (கண்ணன்) இவ் இரட்டை கொலையை செய்தவன் என்பதனை கண்டறிந்தனர்.

மாத்தளையில் உள்ள தனது உறவினரின் வீட்டுக்கு தப்பிச் செல்ல முற்பட்ட போதே அவன் கைது செய்யப்பட்டிருந்தான். குறித்த நபரிடம் இருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தியதாக கருதப்படும் கோடரியும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அங்குள்ள சான்றுப் பொருட்களும், சாட்சியங்களும் கண்ணனுக்கு இக் கொலையில் தொடர்பிருந்ததை வெளிப்படுத்துகின்றன. இதனையடுத்து கண்ணன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரட்டை கொலை தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை முடிவும் வெளியாகியுள்ளது. தலையில் கூரிய கோடரி போன்ற ஆயுதத்தால் கொத்தியதால் தலை பிளவடைந்து மூளை இரண்டாக பிளந்தமையால் இவ் இறப்பு இடம்பெற்றது என அந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த தம்பாவின் மச்சானின் நண்பரான சு.சிவகரனும் வவுனியா அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, இக் கொலைச் சம்பவத்தில் வேறு யாருக்கும் தொடர்பு இருக்குமா அல்லது வேறு நபர்கள் அங்கு வந்து சென்றார்களா என்ற கோணத்திலும் ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் தீவிர விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியாவையே உலுக்கிய இச் சம்பவம் அதிக குடியாலும், கோபத்தாலும் வந்த வினை. குடி குடியைக் கெடுக்கும் என்பது போல் நான்கு பேரினதும் மது போதை இன்று மூவருக்கு எமனாக மாறியுள்ளதுடன், ஒருவரை கைதியாக்கியுள்ளது. இனி அவர்களது குடும்பங்களின் நிலை...?

# மழையால் சமநிலையில் முடிந்த நீலங்களின் முக்கோண சமர்

**வவுனியா விளையாட்டு நிருபர்**

'நீலங்களின் சமர்' முக்கோண கடினப்பந்து சுற்றுப் போட்டியின் இறுதி சமரில் மழை குறுக்கிட்டதால் ஐயனார் விளையாட்டுக்கழகம் மற்றும் தமிழ் யுனைற்றெட் கழகம் இணை சம்பியனாக அறிவிக்கப்பட்டன.

ஐயனார் விளையாட்டுக்கழகம், தமிழ் யுனைற்றெட் கழகம் மற்றும் ஸ்ரார் பைட் கழகங்கள் இணைந்து நடத்தும் நீலங்களின் சமர் கடினப் பந்து முக்கோண சுற்றுப்போட்டியின் இறுதி போட்டி நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டுக்கழக அணியின் தலைவர் அனுசன் களத்தடுப்பினை தெரிவு செய்திருந்தார்.

தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தமிழ் யுனைற்றெட் கழகம் 16ஆவது ஓவர் வரை துடுபெடுத்தாடிய போது மழை காரணமாக ஆட்டம் சிறிது நேரம் இடைநிறுத்தப்பட்டு மீண்டு 40 ஓவர்களாக குறைக்கப்பட்டு மீண்டும் நடைபெற்றது.

இந்நிலையில் ஆட்டத்தின் 26ஆவது ஓவர் நிறைவில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தமையால் ஆட்டத்தினை தொடர்ச்சியாக நடத்த முடியாமையால் போட்டி நிறைவுக்கு வந்ததாக நடுவர்களினால் அறிவிக்கப்பட்டு இரு அணிகளும் இணை சம்பியன்களாக அறிவிக்கப்பட்டது.













இதன்போது தமிழ் யுனைற்றட் கழக அணி 141 ஓட்டங்களுக்கு ஐந்து இலக்குகளை இழந்திருந்தது. அவ்வணி சார்பாக ஆட்டமிழக்காமல் ஜெயதிலக்க 43 ஓட்டங்களையும் ஐயனார் விளையாட்டுக்கழகம் சார்பாக கு.அபிசன் மூன்று விக்கெட்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர்.

வெற்றி பெற்ற இரு அணிகளுக்குமான இணை சம்பியனை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதாரலிங்கம், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக உடற்கல்வி விரிவுரையாளர் சிவசேகரம் ஆகியோர்களினால் வழங்கப்பட்டது.

இப்போட்டி தொடரின் தொடர் நாயகன் மற்றும் சிறப்பாட்டக்காரராக தமிழ் யுனைற்றெட் கழக அணி வீரர் ஜெயதிலக்க தெரிவு செய்யப்பட்டதுடன், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஐயனார் விளையாட்டுக்கழக அணியின் வீரர் கு.அபிசனும் தெரிவு செய்யப்பட்டனர்.



## அல்வாய் விளையாட்டு விழாவில் அல்வாய் யூத் அணி வெற்றி

**யாழ்.விளையாட்டு நிருபர்**

பிரித்தானியா, சுவிட்சர்லாந்து மற்றும் கனடா ஒன்றியங்களின் ஏற்பாட்டில் 5ஆவது வருடமாக நடைபெற்ற அல்வாய் விளையாட்டு விழாவின் மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் அல்வாய் யூத் அணி 18 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மாலு சந்தி மைக்கல் மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் யூத் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யூத் அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்கினை இழந்து 78 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் பிரகாஷ் 37 ஓட்டங்களையும், திருபரன் 8 ஓட்டங்களையும், பிரசாத் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வதிரி டயமன்ஸ் அணி சார்பில் பிரதீஸ் 3 இலக்கினையும், பிறேம்குமார், சாயித்தியன் தலா 2 இலக்கினையும், ராம்ஜீத் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

79 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்து விளையாடிய வதிரி டயமன்ஸ் அணியினர் இறுதிப் பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் துவாரகன் 16 ஓட்டங்களையும், ராம்ஜீத் 15 ஓட்டங்களையும், பிரதீஸ் 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அல்வாய் யூத் அணி சார்பில் குகன், கிரி, சாதுசன்,பிரசாத் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நிகாஷ், திருபரன் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.





## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் போட்டியில் இரு யாழ். இளைஞர்கள்

**யாழ்.விளையாட்டு நிருபர்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 23 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் கொழும்பு மூர்ஸ் கிரிக்கெட் அணி சார்பாக யாழ்.வீரர்கள் விளையாடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனான ரி.விதுஷன், மற்றும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான ஜெனிபிளமிங் ஆகியோர் அணியின் முதல் பதினொருவர் கொண்ட குழாமில் இடம் பிடித்து விளையாடி வருகின்றனர்.

## ஜொலிபாஷ் லீக் பருவகால தொடருக்கான வீரர் தெரிவு

**யாழ்.விளையாட்டு நிருபர்**



ஜொலிஸ்ரார்ஸ் துடுப்பாட்ட அணியினரால் நடத்தப்படும் ஜொலிபாஷ் லீக் 2020 ஆண்டு முதலாவது பருவகாலம் துடுப்பாட்டத் தொடரின் அணிகளுக்கான வீரர்கள் தெரிவு செய்யும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

றுக்ஸ்மன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொடரில் பங்குபற்றவுள்ள அணிக்கான வீரர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம், 8 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. துடுப்பாட்டத் தொடரின் முதலாவது பருவகாலத்தில் ஜொலி லெஜண்ட்ஸ் அணி, ஜொலிபிளாஸ்டர்ஸ் அணி, ஜொலி மாஸ்டர்ஸ் அணி, ஜொலி பையிட்டஸ் அணி, ஆகிய நான்கு அணிகள் பங்கு பற்றுகின்றன.

## தாச்சி சுற்று இறுதியாட்டத்துக்கு இரு அணிகள் தகுதி பெற்றன

**யாழ்.விளையாட்டு நிருபர்**


யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கம் நடத்திய 2020 ஆம் ஆண்டிற்கான தாச்சி சுற்றுத்தொடரில் தாவடி காளி அம்பாள், சண்டிலிப்பாய் உதயசூரியன் ஆகிய விளையாட்டுக்கழக அணிகள் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன.

கைதடி குமர நகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகரை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற பழங்களைப் பெற்று வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 11 : 6 என்ற பழங்களைப் பெற்று வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.





# "கடவுளுக்கு உரியதை கடவுளுக்கு கொடுங்கள்"





சீசருக்கு உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள் என்கிறார் நம் ஆண்டவர் இயேசு.

கடந்த ஞாயிறு நற்செய்தியில் இயேசு பரிசேயர்களுக்கும் ஏரோதியர்களுக்கும் அளித்த முன் மதியான பதில், அவர்கள் இயேசுவுக்கு எதிராகச் செய்த சூழ்ச்சியை ஒன்றுமில்லாமல் செய்கின்றது. பொதுக்காலத்தின் இருபத்து ஒன்பதாம் ஞாயிறான கடந்த ஞாயிற்றுக்கிழமை நற்செய்தி வாசகம், நாம் முன்மதியோடு செயல்பட்டு, கடவுளுக்குரியவர்களாய் வாழ அழைப்பு விடுக்கின்றது.

இயேசுவை தந்திரமாக வீழ்த்த நினைத்த பரிசேயர்களும் ஏரோதியர்களும் நற்செய்தியில் இயேசுவிடம், 'சீசருக்கு வரிசெலுத்துவது முறையா? இல்லையா?' என்ற கேள்வியோடு வருகின்றனர். பரிசேயரும் ஏரோதியரும் அடிப்படையில் எதிரும் புதிருமானவர்கள்.

பரிசேயர்கள் உரோமையர்களின் ஆட்சியையும், அவர்களுக்கு வரிசெலுத்துவதையும் அறவே வெறுத்தார்கள்; ஆனால், ஏரோதியர்களோ உரோமையர்களுக்குக் கட்டாயம் வரிசெலுத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு வரி செலுத்தாமல் இருப்பது மிகப்பெரிய குற்றம் என்றும் சொல்லிவந்தார்கள்.

இப்படி இருவேறு கருத்துகளைக் கொண்ட பரிசேயர்களும் ஏரோதியர்களும் ஒரு புள்ளியில் இணைந்து இயேசுவிடம் வந்தார்கள் எனில், அவர்களின் ஒரே நோக்கம் இயேசுவை எப்படியாவது சூழ்ச்சி செய்து வீழ்த்தவேண்டும் என்பதுதான்.

இயேசுவை வீழ்த்துவதற்கு அவர்கள் கேட்ட கேள்வி மிகவும் சூழ்ச்சியானது. அவர்கள் கேட்ட கேள்விக்கு இயேசு சீசருக்கு வரிசெலுத்துவது முறைதான் என்றால், யூதர்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டி வரும். 'சீசருக்கு வரி செலுத்துவது முறையில்லை' என்றால், ஏரோதியர்களின், உரோமை அரசாங்கத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ள வரும்.

இப்படி இரண்டு பக்கம் ஆபத்து நிறைந்த கேள்விக்கு இயேசு எப்படிப் பதிலளித்தார் எனில்" சீசருக்கு உரியவற்றைச் சீசருக்குக் கொடுங்கள்"என்பதே.

பரிசேயர்களும் ஏரோதியர்களும் தன்னிடம் கேட்ட கேள்வி மிகவும் சூழ்ச்சியானது என்பதை நன்றாக அறிந்த இயேசு அவர்களிடம், "ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்" என்கின்றார்.

இயேசு அவர்களிடம் இவ்வாறு கூறுவது அவர் சாத்தானிடம் கூறுகின்ற, "உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்கவேண்டாம்" என்ற வார்த்தைகளை ஒத்திருக்கின்றது (மத் 4: 7).

பரிசேயர்கள் மற்றும் ஏரோதியர்களிடம், "ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்" என்று சொல்லும் இயேசு தொடர்ந்து அவர்களிடம், "..வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள்" என்று சொல்ல, அவர்களும் ஒரு தெனாரியத்தை அவரிடம் கொடுத்த, இயேசு அவர்களிடம், "சீசருக்கு உரியவற்றை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்கின்றார்.

'சீசருக்கு உரியவற்றை சீசருக்கு கொடுக்கவேண்டும்' என்று இயேசு சொல்வதன்மூலம், புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுவது போல், 'கடவுள் ஏற்படுத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பணிந்திருங்கள்' என்கின்றார்

அருட்பணி
மரிய அந்தோனிராஜ் ...

(உரோ 13: 17) மேலும் 1திமொ 2: 16; 1 பேது 2: 1317.

யூதர்கள் உரோமையர்களுக்குக் கீழ் இருந்தார்கள். அதனால் அவர்கள் உரோமையர்களுக்குப் பணிந்திருக்குமாறு மறைமுகமாகச் சொல்கின்றார் இயேசு.

## நற்செய்தியில் இயேசு

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் பிறஇனத்தாராகிய சைரசை ஆண்டவர் திருமுழுக்கு செய்வதைக் குறித்து வாசிக்கின்றோம். அவர் பிறஇனத்தவராக இருந்தாலும், இஸ்ரயேல் மக்களை நெறிப்படுத்தி, வழிநடத்த ஆண்டவர் அவரை அருள்பொழிவு செய்கின்றார். அதுபோன்றுதான் உரோமையர்களையும் இஸ்ரயேல் மக்களை ஒரு வழிக்குக் கொண்டுவர, அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்கின்றார் ஆண்டவர். ஆதலால், ஆண்டவர் ஏற்படுத்திய பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஒவ்வொருவரும் பணிந்து நடக்கவேண்டும் என்பதை இயேசு சொல்லாமல் சொல்கின்றார் என்பதை இயேசு கூறும் வார்த்தைகளின் மூலம் புரிந்துகொள்ளலாம். கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்குக் கொடுங்கள்.

'சீசருக்கு உரியவற்றைச் சீசருக்குக் கொடுங்கள்' என்று சொன்ன இயேசு, "கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்குக் கொடுங்கள்" என்கின்றார். சீசருக்கு ஒரு நாடு மட்டுமே உரியதாக இருக்கும்;

மிஞ்சிப் மிஞ்சிப் போனால், அவர் கைப்பற்றிய நாடுங்கள் அவருக்கு உரியதாக இருக்கும்;

ஆனால், கடவுளுக்கு நம்முடைய ஆன்மா உட்பட எல்லாமும் உரியது. அதனால் அதை கடவுளுக்கு கொடுங்கள் என்கின்றார் இயேசு.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் ஆண்டவராகிய கடவுள், சைரசிடம், "நானே ஆண்டவர்; என்னையன்றி வேறு கடவுள் இல்லை" என்பார். அப்படியானல், உண்மைக் கடவுளுக்கு உரியவர்களாகிய நாம், அவரிடம் நம்மை முழுவதும் ஒப்படைத்து, புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுவது போல, நம்பிக்கை செயலில் வெளிப்படக்கூடிய, உழைப்பு அன்பினால் உந்தப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். அதுவே நாம் கடவுளுக்கு உகந்தவர்கள் என்பதற்குச் சான்றாகும்.

இன்றைக்குப் பலர் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழாமல், தங்களுடைய விருப்பத்தின்படி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். நாம் கடவுளுக்கு உரியவர்கள் என்றால், அவருக்கு உகந்த வாழ்க்கை வாழ்வதுதானே முறை! இந்த உண்மையை நாம் உணர்ந்தவர்களாய், இயேசுவைப் போன்று முன்மதியோடு செயல்பட்டு, கடவுள் ஏற்படுத்தியுள்ள பொறுப்புகளில் உள்ளவர்களுக்குப் பணிந்து நடந்து ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை வாழ முயற்சி செய்வோம்.




# மனிதத் தன்மையில் இறைதன்மையை சமமாக வெளிப்படுத்தி வாழ்வோம்

## துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை





மனிதத் தன்மையுடன் இந்த உலகில் வாழ்கின்ற நாம் அதனோடு இறை தன்மையையும் சமமாக்கி வாழ பழகிக் கொள்வோம் என்ன ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அன்பின் பரிணாமச் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றி அதில் மறை யுரையாற்றும்போதே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஆயர் தமது மறையுரையில்;

வாழ்நாள் முழுவதும் ஆண்டவர் எமக்குச் செய்த நன்மைகளுக்காக நாம் நன்றி கூறுவோம்.

விசேட விதமாக விசுவாசம் எனும் கொடையை அவர் எமக்குத் தந்து அதனை மென்மேலும் வளர்த்துக் கொள்வதற்கான வல்லமையை எமக்குத் தந்ததற்காக நாம் விசேட விதமாக அவருக்கு நன்றி கூறுவோம்.

நற்செய்தி யில் நம் ஆண்டவராகிய இயேசு செய்த செயற்பாடுகளுக்காக அவரை வியப்பாக பார்ப்பது எடுத்துக் கூறப்படுகிறது.

பேய் பிடித்த சிறுவனின் பிணி தீர்த்த நிகழ்வு அதில் குறிப்பிடப்படுகின்றது.

நீண்ட காலம் குணமாக்க முடியாத, பேய் பிடித்த அந்த மனிதனை அவர் குணமாக்கி யதைக் கண்டு மக்கள் வியப்படைந்தனர்.

தற்போது நாம் வாழும் இந்த காலகட்டத்திலும் சில விடயங்களைக் கண்டு நாம் வியப்படையலாம். வாழ்க்கையில் மனிதத்தன்மை இறை தன்மை என இரண்டுவிதமான தன்மைகளை நாம் பார்க்க முடிகின்றது.மனிதன் தனது சிந்தனையை வைத்து அறிவின் ஊடாக மேற்கொள்வது மனிதத் தன்மையாக இருக்கின்றது.

அத்தகைய மனிதத்தன்மை ஒரு இலக்கை நோக்கிய பயணத்தை மேற்கொள்கின்றது. இந்த மனிதத் தன்மையோடு இறை தன்மையில் வாழ்ந்து இறைவனுக்கு பணி செய்தவர்களும் உள்ளனர் என்பதை நற்செய்திகள் நமக்குக் காட்டுகின்றன.





நாம் வாழுகின்ற இந்த உலகில் மனிதத்தன்மை இல்லாது இறை தன்மையில் மட்டுமே வாழ்வது என்பது கஷ்டமானதாகும்.மனிதத் தன்மையும் இறை தன்மையும் சமமாமாகும் போது அந்த வாழ்வு சிறக்கின்றது. அது ஏனையோருக்கும் பணி செய்வதற்காக உதவியாகிறது. அன்பு எனும் கொடை எம்மையும் மற்றவர்களையும் பரிணாமம் செய்வதற்கு உறுதுணையாகிறது. அதற்கு விசுவாசமும் அவசியம். அந்த அன்பு என்பது எவ்வாறு மற்றவர்களிடத்தில் பரிணாமம் ஆகிறது என்பது முக்கியம்.

இந்த உலகில் பலர் அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். சில வேளைகளில் அவ்வாறானவர்களை நாம் சந்தித்து அவர்களிடம் ஒரு வார்த்தை பேசினாலே அவர்கள் அதற்கு பதிலாக பெரும் கலந்துரையாடலையே ஏற்படுத்தி விடுவார்கள்.

அத்தகையோருடன் நாம் மேற்கொள்ளும் உரையாடல் அன்பை பகிர்ந்து கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. நாம் காணும் சிலர் புன்னகையுடன் காணப்பட்டாலும் அவர்கள் மனதில் பெரும் ஏக்கமும் போராட்டமும் காணப்படலாம்.

அன்பு இப்போது சந்தைப் பொருளாகி அது கடவுளின் கொடை என எண்ணி வாழும் வாழ்க்கை மிக அரிதாகிவிட்டது. அன்பை கடவுளின் கொடையாக மதித்து அதை மற்றவர்களுடன் பகிரப்படும் போது அதைப் பார்ப்பவர்கள் நிச்சயம் வியப்படைவார்கள்.

அன்பு இறை தன்மையுடன் பரிணாமம் அடையும் போது அது மற்றவரையும் அதனைச் செய்யத் தூண்டுகிறது. அன்பைப் பகிர்ந்து கொள்ளும் கொடை எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை.அது ஒரு சிலருக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அதனை பகிர்ந்து மனிதத் தன்மையில் இறைதன்மையை வெளிக்காட்டி வாழ்வோம். அப்போது இறைவனின் அருட்கொடை உங்களுக்கு அதிகம் அதிகமாகக் கிட்டும்.

எல். செல்வா...

# இதயத்தை மாற்றும் மனமாற்றத்தின் பயணம்

## திருத்தந்தை பிரான்சிஸ்

இறைவன் ஏற்பாடு செய்த திருமண விருந்துக்கு விடப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்வதுமட்டும் போதாது, மாறாக, இதயத்தை மாற்றும் மனமாற்றத்தின் பயணத்தில் திறந்த மனம் கொண்டவர்களாய் செயல்படவேண்டியது அவசியம் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.



அரசர் ஒருவர் தம் மகனுக்குத் திருமணம் செய்தபோது ஏற்பாடு செய்த திருமணவிருந்தை மையப்படுத்திய உவமையை (மத். 22:114) மூவேளை செப உரையின் போது குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் ,

மனிதகுலத்தின் மீது இறைவன் கொண்டுள்ள தாராள மனப்பான்மையையும், அளவற்ற அன்பையும் எடுத்துரைக்கும் இந்த உவமை, நாம் இறைவனின் அழைப்பிற்கு முதலிடம் கொடுக்காமல், நம் சுயநலன்களுக்கும் நுகர்வுக் கலாச்சாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் காட்டுகிறது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அனைவருடனும் தன் இறையரசின் கொடைகளை பகிர்ந்து கொள்ள விரும்பும் இறைவன், சாலையோரங்களில் காணப்படும் அனைவரையும் அழைத்துவர தன் பணியாளர்களை அனுப்பியதைப்பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவரின் அழைப்பு மறுக்கப்படும்போது, தன் முயற்சியைக் கைவிட்டுவிடாமல், அனைவரும் தன் கொடைகளைப் பகிரவருமாறு அழைப்பதே, சாலையோரங்களில் கண்ட அனைவரையும் அழைத்துவர இறைவன் தன் பணியாளர்களை நோக்கி பணித்தது, நகருக்கு வெளியே ஒதுக்கப்பட்டவர்களாக வாழும் மக்களை நோக்கிச் சென்று, நற்செய்தி அறிவிக்க வேண்டிய கடமையை நமக்கு வலியுறுத்துவதாக உள்ளது என்றார் திருத்தந்தை.

ஏழைகள், கைவிடப்பட்டோர் என, வாழ்வில் கடைநிலையில் உள்ளோர் நோக்கி இறைவனின் பணியாளர்கள் சென்று சேவையாற்றவேண்டியதை, இவ்வுவமை சுட்டிக் காட்டுவதாகவும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருமணத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் அதற்குரிய உடையை அணிந்து செல்ல வேண்டும் என இவ்வுவமையில் எதிர்பார்க்கப்படுவது, நாம் ஒவ்வொருவரும் நமக்கு வழங்கப்பட்டுள்ள அருள் எனும் இரக்கத்தின் உடையை அணிந்து செல்லவேண்டியதை குறிக்கிறது எனவும் கூறினார் திருத்தந்தை.

இறை மீட்பின் அருளை நமக்கு வழங்க விரும்பும் இறைவன், நாம் நம் குறுகிய கண்ணோட்டங்களை விட்டு விலகி, திருமண விருந்துக்குரிய இறைவனின் அழைப்பை அனைவருக்கும் எடுத்துச் செல்பவர்களாக இருக்கவேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

# நகர்வலம்



மாத்தளை மாவட்டத்தில்;

## பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவச உர விநியோகம்

### ரூ.320 மில். ஒதுக்கப்பட்டுள்ளதாக உரக்கூட்டுத்தாபன பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு இலவசமாக உர விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கென அரசினால் ஒதுக்கப்பட்ட 320 மில்லியன் ரூபாநிதி உதவியின் மூலம் 5311 மெட்ரிக் தொன் உரம் இம் மாவட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மாத்தளை மாவட்ட உரக்கூட்டுத்தாபனத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.எம்.எல். சேனாரத்ன தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் கமநலசேவை பிரிவுகளில் இம்முறை பெரும் போகத்தில் 20,978 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவச உர விநியோகம் விவசாய அமைப்புகள் ஊடாக வழங்கப்படவுள்ளன. இதன் பிரகாரம் நெற்செய்கைக்கு பொட்டாசியம் 117 மெட்ரிக் தொன், நைதரசன் (யூரியா) மெட்ரிக் தொன் 3715,பொஸ்பரஸ் மெட்ரிக் தொன் 478 என்பன வகையான உர வகைகள் இவ்வாறு விநியோகம் செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் மேற்படி விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 88 சாரதிகளுக்கு நீதிமன்றம் அபராதம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவில் கடந்த மூன்று மாதத்தினுள் மதுபோதையில் வாகனம் செலுத்திய 88 சாரதிகளுக்கு கெப்பித்திகொல்லாவ நீதிமன்ற நீதவான் மாலிந்த ஹர்ஷன த அல்விஸ் 29 இலட்சத்து 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக ஜூலை மாதம் கைது செய்து நீதி மன்றில் ஆஜர்படுத்திய 32 சாரதிகளுக்கு 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா அபராதமும் ஆகஸ்ட் மாதம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 28 சாரதிகளுக்கு 8 இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செப்டம்பர் மாதம் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நீதி மன்றில் ஆஜர்படுத்திய சந்தேக நபர்களான 28 சாரதிகளுக்கு 9 இலட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளன.

ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் லக்மால் விஜேரத்னவின் ஆலோசனையின் கீழ் போக்கு வரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க;

## சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு பொலிஸாரின் முக்கிய வேண்டுகோள்

**மினுவாங்கொடை நிருபர்**

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரியும் அனைத்து ஊழியர்களும் (19) திங்கட்கிழமை முதல் தமது தொழிற்சாலை போக்குவரத்துச் சேவையின் மூலமாக மாத்திரம் தொழிற்சாலைக்கு வந்து செல்ல வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். இதன்படி, 19 ஆம் திகதி முதல் ஊழியர்கள் தமது தனிப்பட்ட வாகனங்கள் மூலமாக தொழிற்சாலைக்கு வந்து செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது. இதேவேளை, அனைத்து ஊழியர்களுக்கும் இதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும், தொழிற்சாலை அதிகாரிகளுக்கு பொலிஸார் உத்தரவு பிறப்பித்தனர். அத்துடன், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் பல ஊழியர்கள் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தமது அலுவலக அடையாள அட்டைகளை, பொலிஸ் ஊரடங்கிற்கான அனுமதி அட்டைகளாகப் பயன்படுத்தி, ஏனைய பகுதிகளுக்குச் செல்ல முயற்சித்த குற்றச்சாட்டுக்கு அமையவே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை இராணுவத்தின் 71 வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அநுராதபுரம் ஜெயஸ்ரீ மகா போதியில் இராணுவத்தின் அனைத்து கொடிகளுக்கும் ஆசிர்வாதம் வழங்கும் நிகழ்வு பாதுகாப்பு தலைமை அதிகாரியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரால் ஷவேந்திர சில்வா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம். படங்கள்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

## காக்கை தீவு பகுதியில் மீனவரின் சடலம்

**புத்தளம் தினகரன் விசேட நிருபர்**

கல்பிட்டி காக்கை தீவுக்கு அருகில் கடல் பிரதேசத்திலிருந்து மீனவரின் சடலமொன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக கல்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்பிட்டி வாடியில் வேலை செய்து கொண்டிருந்த வடுமுன்னேகம உடுகம பகுதியைச் சேர்ந்த கே.பீ. ருவன் என்ற மீனவரின் சடலமே இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளது. இவரின் சடலத்தினை கண்ட மற்றொரு மீனவர் இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். கல்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.




பல உயிர்களை காவு கொண்ட காலி தலாப்பிட்டிய பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு பதிலாக காலி மாவட்ட பொதுஜன பெரமுன முஸ்லிம் அமைப்பாளரும் ராஸிக் அன்வர் மன்ற தலைவருமான ராஸிக் அன்வர் தனது சொந்த நிதியில் ரயில் கடவையை நிர்மாணித்துக்கொடுத்துள்ளார். இதனை ராஸிக் அன்வர் , பொதுஜன பெரமுன முஸ்லிம் பிரிவு முக்கியஸ்தரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான உவைஸ் ஹாஜியார் மற்றும் காலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

## தப்பிச்சென்ற சிறைக்கைதியை தேடி வலைவிரிப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் சிறைச்சாலையின் திறந்தவெளி சிறைப்பகுதியில் இருந்து தப்பிச்சென்ற சிறைக்கைதியை கைதுசெய்வதற்காகவேண்டி அநுராதபுரம் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பில் தமுத்தேகம நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறையில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே தப்பிச்சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சம்பவ தினத்தன்று திறந்த வெளி சிறைப்பகுதியிலுள்ள வளாகத்தினை துப்புரவு செய்து கொண்டிருக்கும் வேளையிலே குறித்த கைதி தப்பிச் சென்றுள்ளார். தப்பிச்சென்ற கைதியை மீண்டும் கைது செய்வதற்காக வேண்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளபோதிலும் அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளும் தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சிறைச்சாலையின் உயர் அதிகாரியொருவர் மேலும் தெரிவித்தார்.

## காதலியின் கழுத்தை அறுத்துவிட்டு கள்ளக்காதலனும் தற்கொலை

### மிஹிந்தலையில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மிஹிந்தலை பொலிஸ் பிரிவில் அம்பதலாகம வீடொன்றில் கள்ளக் காதலனால் கழுத்து அறுத்து பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் கொலையை செய்த நபரும் வீட்டு அறை ஒன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக மிஹிந்தலை பொலிசார் தெரிவித்தனர்.

திருகோணமலை வீதியில் வசித்து வந்த மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவரே கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹிங்குறுவெவ எல்லவெவ கலென் பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 58 வயது நபரே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளவராவார்.

கொலை செய்யப்பட்டுள்ள பெண்ணுக்கும் தற்கொலை செய்து கொண்டுள்ள நபருக்குமிடையில் மிக நீண்ட காலமாக காதல் தொடர்பு ஏற்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர். இதன் காரணமாக குறித்த பெண்ணின் கணவன் இவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. தற்கொலை செய்து கொண்டுள்ள நபர் குறித்த பெண்ணின்வீட்டிற்குஅடிக்கடி சென்று வந்துள்ளதுடன் பெண்ணின் பிள்ளைகள் இதனை விரும்பாத காரணத்தினால் நபரை வீட்டுக்கு வரவேண்டாமென கூறியுள்ளனர். இதனால் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளதுடன் குறித்த நபரினால் பெண்ணின் பிள்ளை ஒருவருக்கு பெற்றுக் கொடுத்ததாக கூறப்படும் லப்டொப் கணனியை மீள பெற்றுத்தருமாறு நபர் கூறியும் அது கிடைக்காமையினால். இப்பிரச்சினை மிஹிந்தலை பொலிஸ் நிலையம் வரைக்கும் சென்றிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்து கொண்டுள்ள நபர் கலென்பிந்துனுவெவ பகுதியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் என தெரிய வந்துள்ளன. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில்;

## 09 பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 45 பேருக்கு கொரோனா

**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 45 பேருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் ஓவிட்டிகலை, பதுகமை, பதுகமை புது குடியேற்ற கிராமம் உள்ளிட்ட மூன்று கிராமங்களைச் சேர்ந்த 417 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் வேகமாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இங்கிரிய(40), பண்டாரகமை(50), பிம்புர(60), மத்துகமை(40) மற்றும் இத்தபான 40 படுக்கை வசதிகளுடன் கூடிய ஐந்து அரச வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட தொற்றுநோய் நிபுணர் வைத்தியர் பிரசாத் லியனகே தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டச் செயலாளர் பிரசன்ன கினிகே ஏற்பாட்டில்



அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தலைமையில் களுத்துறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (19) நடைபெற்ற விசேட ஒன்று கூடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட 715 பேர்களின் பீ.சீ.ஆர் மாதிரிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற 308 பேர்களின் பெறுபேறுகளுக்கு அமைய ஹொறணை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 8 கொரோனா தொற்றாளர்களும் பண்டாரகமை 1, வலலாவிட்டை 1, பாணந்துறை 3, அகலவத்தை 3, மதுராவலை 1 , மில்லனிய 1, இங்கிரிய 1, மற்றும் மத்துகமை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 26 பேருக்குமாக மொத்தம் 45 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிச் செய்யப்பட்டுள்ளது. இதில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் தாதி ஒருவரும் இரண்டு கிராம அலுவலகர்களும் க.பொ.த. உயர் தர பரீட்சாத்தி ஒருவரும் ஐந்து பௌத்த பிக்குகளும் அடங்குவர்.

மேலும் இவ் வைபவத்தில் களுத்துறை மாவட்டத்தின் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், சுகாதார அதிகாரிகள், அரச, பொலிஸ் மற்றும் முப்படைகளின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் மாதாந்தக் கூட்டம் பேருவளையில் மாவட்டத் தலைவர் இக்பால் ஸம்ஸுத்தீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது முன்னணியின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: பேருவளை விசேட நிருபர்)

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

**புத்தளம் தினகரன் விசேட நிருபர் )**

நாத்தாண்டி துன்கண்ணாவ பகுதியில் இரகசியமான முறையில் இடம்பெற்று வந்த கசிப்பு தயாரிக்கும் நிலையத்தினை சிலாபம் தொகுதி ஊழல் எதிர்ப்பு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலினைத் தொடர்ந்து குறித்த இடம் சுற்றி வளைக்கப்பட்டது. சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 180 கசிப்பு போத்தல்கள் அடங்கிய 04 பிளாஸ்டிக் கேன்கள், கசிப்பு தயாரிப்பிற்காக பயன்படுத்தும் கோடா ட்ரெம்ஸ் 12,960 அடங்கிய 06 பெரல்கள் என்பவற்றினை அதிகாரிகள் அவ்விடத்திலிருந்து எடுத்துள்ளனர். கசிப்பு உற்பத்தி செய்ததாகக் கூறப்படும் ஒருவரை சுற்றுவளைப்பில் ஈடுபட்ட அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

## சிறைச்சாலைக்குள் தொலைபேசி, சிம் கார்ட்டுகளை கொண்டு செல்ல முற்பட்ட அதிகாரி கைது

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலையின் அதிகாரியொருவர் தனது மூக்கு க் கண்ணாடியுரையினுள் இரண்டு கையடக்க தொலைபேசி, சிம் கார்ட்களை எடுத்துச் செல்ல முற்பட்டபோது சிறைச்சாலையின் விசேடபொலிஸ் அதிரடிப் படையினரால் கடந்த சனிக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளதாக அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலையின் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த அதிகாரி குறித்த தினம் அங்குனுகொலபலஸ்ஸ சிறைச்சாலையினுள் நுழையமுற்பட்டபோது சிறைச்சாலையின் விசேடபொலிஸ் அதிரடிப் படை அதிகாரிகளினால் பரீட்சிக்கப்பட்டார். இதன்போதே இரண்டு கையடக்க தொலைபேசி, சிம்கார்ட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.




# தனிமைப்படுத்தப்பட்டிருந்த எவருக்கும் கொவிட் – 19 வைரஸ் தொற்றவில்லை

## கொட்டகலை பிரதேச சபை தவிசாளர்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கொட்டகலை பிரதேச சபைக் குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இல்லை என்றபோதிலும் மக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேச சபைக் குட்பட்ட பகுதியில் சில குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும், அங்கு கொரோனா பரவும் அபாயம் இருப்பதாகவும் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இது தொடர்பில் தவிசாளரிடம் வினவியபோது அவர் கூறியதாவது,

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 10 வட்டாரங்கள் உள்ளன, 5 குடும்பங்கள் மாத்திரமே தனிமைப்படுத்தப்பட்டன. அக்குடும்ப உறுப்பினர்களிடம் பி.சீ. ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை நடத்தப்பட்டது. பி.சீ.ஆர் பரிசோதனை முடிவு எமக்கு கிடைத்துள்ளது. தனிமைப்படுத்தப்பட்டிருந்த எவருக்கும் கொவிட் 19 வைரஸ் தொற்றவில்லை என்பது உறுதியானது.

எனவே, இப்பகுதியில் வைரஸ் பரவும் என வீண் அச்சம் கொள்ள வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன், அச்சம் கொள்ள வேண்டாம் என்பது, வழமைபோல் சுதந்திரமாக செயற்படுங்கள் என்பது பொருள் அல்ல, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகளை கழுவுதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி செயற்படுமாறு கோருகின்றேன்.

கொட்டகலை பிரதேசத்தில் விளையாட்டு நிகழ்வுகளை இடைநிறுத்தியுள்ளோம். எவராவது திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளை நடத்தினால் அது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கையுடனேயே (25 50) நடைபெற வேண்டும்.

அதேவேளை, வெளி மாவட்டங்களில் இருந்து எவராவது வந்தால் அது தொடர்பில் பிரதேச சபைக்கு தகவல் வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன், ஏனெனில் வைரஸ் என்பது கண்ணுக்கு தெரியாது, ஆனால் ஏதோவொரு விதத்தில் பரவக்கூடும். எனவேதான் பொது மக்கள்



உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# தோட்ட தொழிலாளர்களுக்கு கிராமிய வீடமைப்பே பொருத்தமானது

## டேவிட் சுரேன் கருத்து

**அக்குறணை குறூப் நிருபர்**

மலையக மக்களின் தற்போதைய பாதுகாப்பற்ற குடியிருப்பு கட்டமைப்பு மாற்றப்பட்டு, தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்காக கிராமிய வீடமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச, லெனினிசக் கட்சியின் மலையக பிராந்திய செயலாளரும், உக்குவளை பிரதேச சபையின் உறுப்பினருமான டேவிட் சுரேன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.


கட்சியின் பிரதான காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நீண்டகாலமாக மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆனால் சரியான பலன் இன்னும் கிட்டவில்லை.

கடந்த நல்லாட்சி அரசாங்கக் காலத்தில், பெருந்தோட்டங்களில் தொழில் செய்பவர்களுக்கு மாத்திரம் வீட்டுத்திட்டம் என்ற அடிப்படையில், குறிப்பிட்ட அளவிலான வீடுகள் அமைக்கப்பட்டன.

ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தும் மலையக மக்களின் வீட்டுத்திட்டம் பற்றி போதிய எந்தவொரு முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளாமை கவலை அளிக்கிறது. மலையக மக்களின் காணி உரிமை, வீட்டுரிமை தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட அமைப்புக்கள் அறிக்கைகளை மட்டும் விடுத்து வருவதும் கவலை தருகிறது என்றார்.



# மஸ்கெலியா சாமிமலையில் பால் சேகரிக்கும் வாகனம் விபத்து

**மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஸ்கெலியா சாமிமலை பிரதான வீதியில் பிரவுன்சிக் தோட்ட பகுதியில் நேற்று பால் சேகரிக்கும் வாகனம் பாதையை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது.

இவ்விபத்தில் எவரும் பாதிக்கப்படவில்லை தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காட்மோர் பகுதியில் இருந்து வந்த பஸ்ஸுக்கு வலைவில் வழி கொடுக்க முயன்ற போது வாகனம் விபத்துக்குள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பன்றிக்கு வெடிவைத்து கொலை செய்த மூவர் கைது

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹட்டன் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட டிக்கோயா தரவளை தோட்ட பகுதியில் பன்றிக்கு வெடிவைத்து கொலை செய்த மூவரை ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று காலை இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். டிக்கோயா தரவளை பகுதியில் பன்றியினை வெடி வைத்து கொன்று விற்பனை செய்வதற்காக முச்சக்கர வண்டியில் ஏற்றி சென்று கொண்டிருந்த போதே பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது டிக்கோயா மாணிக்க வத்த பகுதியில் வைத்து மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யபட்டதோடு முச்சக்கர வண்டியிலிருந்த பன்றியினையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மூன்று சந்தேக நபர்களும் மது போதையில் இருந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# ஊரடங்கு இல்லாவிட்டாலும் சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும்

## இரத்தினபுரி மாவட்ட செயலாளர்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இல்லாத போதிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை கருத்திற் கொண்டு கோவிட் 19 சுகாதார ஒழுங்கு விதிகளை இரத்தினபுரி மாவட்ட மக்கள் முறையாகப் பேண வேண்டும் என இரத்திபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொகுபோதாகம எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் தற்போதைய நிலைமைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரித்துக்கும் போது அவர்

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர் ந்தும் தகவல் தருகையில்,..

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரையில் 3 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். 9 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு பெறுபேற்றினை எதிர்பார்த்து நிற்கிறோம்.

பிரெண்டிக்ஸ் கொத்தணி தொற்றைச் சேர்ந்த 182 பேர் உட்பட 304 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இது வரை மொத்தம் 616 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலைமை எவ்வாறு மாற்றமடையும் என எதிர்வு கூற முடியாது. எனவே தற்போதைய நிலைமையில் ஊரடங்குச் சட்டம் இல்லை என யாரும் இலகுவாக நினைக்காது சுகாதார வைத்திய அறிவுறுத்தல்களை செல்வனே கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குவது அவசியம் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பசறையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**மடுல்சீமை நிருபர்**

பசறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இங்குருகடுவ மொரட்டுவ கிராமப்பகுதியில் துப்பாக்கியும் ஒரு தொகை கோடாவும் மீட்கப்பட்டுள்ளது.

பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையில் இங்குருகடுவ மொரட்டுவ கமயில் சந்தேக நபர் ஒருவரின் வீடொன்றை பொலிசார் சுற்றி வளைத்து தேடியுள்ளனர்.

இதன் போது வீட்டினுள் இருந்து துப்பாக்கி ஒன்றை (shotgun) கைப்பற்றியதோடு வீட்டுக்கு பின்புறமாக சோதனையிட்ட போது ஒரு தொகை கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

# கண்டி பெரஹராவை உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்தக் கோரிக்கை



## கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே





**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

கண்டி வரலாற்று புகழ்மிக்க எசலபெரஹராவை உலக மரபுரிமை நிகழ்வாக பிரகடனப்படுத்தக் கோரி ஐக்கிய நாடுகள் சபைக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே நிலங்க தெல பண்டார கூறினார். லேக் ஹவுஸ் நிறுவன கண்டி கிளையின் மாகாண செய்தி ஆசிரியர் அசேல குறுலுவன்ச எழுதி நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,...

இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என நம்புகிறோம். இந்த மரபுரிமை நிகழ்வின் வாரிசுகளாக மலைநாட்டு கலைஞர்கள் மதிக்கப் படுவர்.

மலைநாட்டு கலைஞர்களாலேயே உடரட்ட கண்டியன் நடனம், பறை இசை, நாத இசை ஆகியன மலைநாட்டின் தலைநகரான கண்டி மாநாகரின் வருடாந்த பெரஹராவில் தொடர்ந்தும் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

லேக் ஹவுஸ் நிறுவன மாகாண செய்தி ஆசிரியர் அசேல குறுலுவன்சவின் கலைஞர்களின் வாரிசுகள் தொடர்பாக 24 கலைஞர்களின் சுயசரிதையும் கலைக்கு ஆற்றிய சேவைகள் தொடர்பான நூல் வெளியீட்டு விழா தியவதன நிலமே தலைமையில் நடைபெற்றது.



கண்டி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது. (படம்: எம்.ஏ.அமீனுல்லா)

# அரச கணக்காய்வுகளை தனியாருக்கு வழங்குவதால் அரசுக்கு பாரிய நஷ்டம்

## கணக்காய்வு சேவை பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



அரசியல் அமைப்பின் 20 ஆவது திருத்தம் மூலம் அரச நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை தனியார் துறைக்கு வழங்குவதன் ஊடாக அரசுக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட இடமிருப்பதாக கணக்காய்வு சேவை பரிசோதகர்கள் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கண்டி டெவோன் ரெஸ்ட் விடுதியில் நடத்திய ஊடக சந்திபிலே இவ்வாறு அச்சங்கம் இதனைத் தெரிவித்தது. கணக்காய்வு சேவை பரிசோதகர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம்.எம்.கே. ஹேரத் இது பற்றி மேலும் தெரிவித்தாவது,

20 ஆவது அரசியல் திருத்தத்தில் பொதுமக்களது இறையாண்மைக்கு பலத் அடியாக இருப்பது கணக்காய்வு விடயமாகும். நாட்டின் மொத்த தேசிய வருமானத்தின் 60 சதவீதமானவை மறைமுக வரியிலே தங்கியுள்ளது. மிகுதி 40 வீதம் மட்டுமே நேரடியான வரிகளில் தங்கி உள்ளது.

மேற்படி 60 சதவீதமான வரியை அரசுக்கு செலுத்துபவர்கள் உங்களையும் எம்மையும் போன்ற சாதாரண பொதுமக்களாகும். சகல விதமான வரிகளையும் பற்றிய கணக்காய்வை மேற்கொண்டு அது பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் அதிகாரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உள்ளது. இன்று அது பாராளுமன்றிலிருந்து தூரமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அரச சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, அமைச்சர்களது சேவைப்பிரிவு, ஜனாதிபதி செயலணி, பிரதமர் செயலணி போன்ற பல அமைப்புக்கள் கணக்காய்வில் இருந்து விடுவிக்கப்படுகிறது. பொதுவாகக் கூறினால் 70 சதவீதமான செலவினங்கள் பற்றி கணக்காய்வு நீக்கப்படுகிறது என்றார்.

சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா) பேராதனை

## 2021ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் கராஜ் மற்றும் சேவை நிலையங்களைப் பதிவு செய்தல்

2021ஆம் வருடத்திற்காக பேராதனை பொது வைத்தியசாலைக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக இலங்கை பிரஜைகள், உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரச நிறுவனங்கள், பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்**

01. அனைத்து வகையான காகிதாதிகள்
02. வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (பலகை/உருக்கு/ பிளாஸ்திக்)
03. தும்பு மெத்தை மற்றும் இறப்பர் கலந்த தும்பு மெத்தை மற்றும் தலையணை
04. பாய்/தும்புத்தடி/விளக்குமார் மற்றும் அனைத்து வகையான தூரிகைகள், அகப்பைகள்/ தும்பு உற்பத்திகள்
05. அனைத்து வகையான காபோலிக் சவர்க்காரம், சலவைத் தூள்/ பார் சவர்க்காரம்/ சுத்தப்படுத்தும் திரவம் மற்றும் தூள்
06. அனைத்து வகையான துணிகள், நுளம்பு வலை மற்றும் தைத்து முடிக்கப்பட்ட ஆடைகள் (கட்டில் விரிப்பு, தலையணை உறை, கட்டமிட்ட துணி மற்றும் சத்திர சிகிச்சை உடை/ பிஜாமா உடை/ தாதி உடை/ ஆண், பெண் தொழிலாளர் உடை)
07. அலுமினியப் பொருட்கள்/ பீங்கான் பொருட்கள்/ கண்ணாடிப் பொருட்கள்/ பிளாஸ்திக்குப் பொருட்கள்
08. அனைத்து வகையான பொலித்தீன் மற்றும் பொலித்தீன் பைகள் (சூழலுக்கு இசைவானவை)
09. டயர், டியுப் மற்றும் வாகன பற்றரி மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
10. அரியப்பட்ட பலகைகள் மற்றும் ஏனைய மர வகைகள்
11. பாதணிகள் (வைத்தியர்/தாதி/தொழிலாளர்)
12. அனைத்து வகையான கனரகப் பொருட்கள் (உலோகப் பொருட்கள்/ ட்ரொலிச் சக்கரம்/ ஆணி/ பிணைச்சல்/ இறப்பர் கையுறை, தோற்பொருட்கள் மற்றும் இறப்பர் கால்துடைப்பம்)
13. பெயர்ப் பலகைகள், இறப்பர் முத்திரை/ திகதி முத்திரை
14. அச்சு வேலைகள் (மருந்துகள் இடும் உறை/ கதிரியக்கப் படங்கள் இடும் உறை/ சான்றிதழ்கள் போன்றன)
15. அனைத்து மின்சார உபகரணங்கள் (தொலைக்காட்சிப் பெட்டி/ குளிர்சாதனப் பெட்டி/ காற்றுச்சீராக்கி இயந்திரம் / சலவை இயந்திரம் போன்றன)
16. அனைத்து வகையான மின்சார துணைப்பாகங்கள் (டோர்ச் பெற்றரி வகைகள்/ மின் குமிழ்கள்/ வயர்கள் போன்றவை)
17. நோயாளர் காவி, ட்ரொலி, சக்கர நாற்காலிகள்
18. அலுவலக உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் (தொலைநகல்/ ரோணியோ/ புகைப்படப் பிரதி/ தொலைபேசி/ நகல் பிரதி இயந்திரங்கள் போன்றன)
19. கணனிகள், அச்சுப்பொறிகள் மற்றும் துணைப்பாகங்கள்
20. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள்
21. ஆய்வுகூட உபகரணங்கள்
22. எலும்பியல் சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள்
23. எலும்பியல் அல்லாத ஏனைய சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
24. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
25. கதிரியல் பாவனைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
26. பற்சிகிச்சை உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
27. மருந்து வகைகள்
28. கிருமிகள் கட்டுப்பாட்டுக்குத் தேவையான கிருமி நாசினிகள்
29. உபசார நடவடிக்கைகளுக்கான உணவு பானங்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
30. ஏனைய பல்வேறு வகையான பாவனைப் பொருட்கள் (தீப்பெட்டி/ சவர அலகு/ ஊசி/ நூல் வகைகள் என்பன)

**02. ஒப்பந்தக்காரர்கள்**

நீர்க்குழாய் திருத்தவேலைகள்/ மின்னியலாளர்கள்/ சாக்கடை வேலைகள்/ நிறப்பூச்சு வேலைகள்/ கொங்கிறீட்/ செங்கல்/ அலுமினிய நிர்மாணங்கள் / நீர்க் கசிவுகளை சீர்படுத்தல் போன்றன

**03. சேவைகள்**

01. ஆய்வு கூட பரிசோதனைகள்
02. தையல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
03. ஆடை தைத்தல் (திரைச்சீலை/கட்டில் விரிப்பு/ பிஜாமா உடை போன்றன)
04. உரிமை கோரப்படாத சடலங்கள் மற்றும் உடற் பாகங்களைப் புதைத்தல்
05. அனைத்து வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
06. அனைத்து மின்சார உபகரணங்கள், குளிரூட்டி, வளிச்சீராக்கி என்பவற்றின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
07. வாகன திருத்தவேலைகள் (இதற்காக இந்நிறுவனத்தினால் தரப்படும் விஷேட விண்ணப்பத்திற்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும்.)
08. வாகன மின்னியல்/வளிச்சீராக்க திருத்தவேலைகள்
09. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள்/ ஆய்வுகூட உபகரணங்கள்/ பல் வைத்திய உபகரணங்கள் மற்றும் பல் சத்திரசிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்.
10. மருத்துவ வாயுக்கள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
11. தீயணைப்பு உபகரணங்களை மீள் நிரப்புதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
12. வீட்டுப் பாவனைப் பொருட்களை புதுப்பித்தல் (பிரம்பு நாற்காலி பின்னல் / அலுவலக நாற்காலிகளின் திருத்தவேலைகள் போன்றன.)
13. குஷன் வேலைகள்/திருத்த வேலைகள்
14. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (கணனி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/புகைப்படப் பிரதி இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ நகல் பிரதி இயந்திரம்)
15. ஊழியர்களின் அடையாள அட்டைகளைத் தயாரித்தல்

**04. கொள்வனவு செய்தல்**

01. அப்புறப்படுத்தப்படும் பொருட்களை கொள்வனவு செய்தல் (கண்ணாடி/ பிளாஸ்டிக் போத்தல்கள்/ சேலைன் போத்தல்கள்/ எக்ஸ் கதிர் படங்களைக் கழுவிய கழிவு திரவம்/ சிரட்டை/ காகித அட்டைகள்/ காகிதங்கள்)

**05. அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள்**

i. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு வழங்குநர்களாக பதிவாகலாம்.
ii. 02ஆம் இலக்க உருப்படிக்காக இந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் விசேட விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். ICTAD C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பதிவு அவசியம் என்பதுடன் மத்திய மாகாணத்தினுள் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
iii. பின்வரும் மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை வியாபாரப் பதிவு சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி மற்றும் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு சகிதம் 2020.11.30ஆம் திகதிக்கு மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் **"தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பொது வைத்தியசாலை, பேராதனை"** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது இந்நிறுவனத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
iv. ஒவ்வொரு பொருளுக்காகவும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை இவ்வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவுக்கு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் செலுத்த முடியும் என்பதுடன் அவ்வாறு செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். காசுக் கட்டளைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரச நிறுவனங்களுக்கு பதிவுக் கட்டணம் விலக்களிக்கப்படும்.
v. ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்கு பதிவு செய்து கொள்வதாயின் ஒவ்வொரு அம்சத்திற்காகவும் வெவ்வேறான விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களையும் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பலாம். ஒரு விண்ணப்பப் படிவத்தில் பல உருப்படிகளுக்கு விண்ணப்பித்திருந்தால் அதில் முதலாவதாக உள்ள உருப்படிக்கு மாத்திரமே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
vi. இதற்காக தேவைப்படுகின்ற விண்ணப்பத்தை பேராதனை பொது வைத்தியசாலையின் www.peradeniya-hospital.health.gov.lk இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.
vii. விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021"** என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
viii. பொருட்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு குறைந்தபட்சம் 08 வார காலம் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
ix. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனு கோரப்பட்டிருப்பினும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடம் விலை மனு கோரும் உரிமை இவ்வைத்தியசாலை பணிப்பாளருக்குரியது.
x. இந்த நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிரூபிக்க முடியாத சந்தர்ப்பங்களில் எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் பதிவு செய்வதற்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலை பணிப்பாளரைச் சாரும்.
xi. தருவித்தற் கட்டளையில் வழங்கப்படும் அனைத்துப் பொருட்களையும் முறையாக களஞ்சியசாலைக்கு வழங்கியதன் பின் மற்றும் சேவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
xii. கட்டணம் அறவிடாமல் போக்குவரத்து வசதிகள் வழங்குதல் வேண்டும்.
xiii. விலைமனு கோரி அனுப்பும் போது விலைமனுக்கள் சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கின்ற விலை மனுவுக்கு பொருட்கள் வழங்காத நிறுவனங்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு (Black List) உட்படுத்த நேரிடும்.
xiv. உங்களது E-mail முகவரி மற்றும் Fax இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவும்.
xv. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கும்போது அண்மையில் வழங்கப்பட்ட தேசிய பெறுகை முகவரகத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலுக்கு கவனத்தைச் செலுத்துமாறு மேலும் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பொது வைத்தியசாலை, பேராதனை.**

**விசாரணைகள்: 081-2388001**
**நீடிப்பு: 208/209**

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021ஆம் வருடம்
### பொது வைத்தியசாலை (போதனா) பேராதனை

01. உற்பத்தி நிறுவனம்/வியாபாரம்/வழங்குநரின் பெயர்:
02. முகவரி:
03. (i) தொலைபேசி இலக்கம்:
(ii) தொலைநகல் இலக்கம்:
(iii) மின்னஞ்சல் முகவரி:
04. வியாபாரத்தின் தன்மை: (தனியுரிமை/ வரையறுக்கப்பட்ட நிறுவனமா என்பது பற்றி)..........
05. வியாபாரப் பதிவிலக்கம்:
06. VAT பதிவிலக்கம்:
07. பிரதான வியாபாரம்: (எவ்வகையான வழங்கல்/ உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுங்கள்) ..........
08. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் பொருள் மற்றும் சேவை.......... இலக்கம்:..........
09. பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்

வழங்கல் இல. .......... சேவை இல.......... கொள்வனவு இலக்கம்.......... பொருட்டு பதிவு செய்து கொள்ளும்படி வேண்டுகிறேன். .......... ரூபா பெறுமதியான பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஏதாவது பிழையான தகவல்கள் வழங்கியிருப்பின் பதிவு நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன். இவற்றுடன் வியாபாரப் பதிவின் உண்மைப்பிரதியொன்றும் மற்றும் VAT பதிவுச்சான்றிதழின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

..........
**திகதி**

..........
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**
**உத்தியோகபூர்வ முத்திரை**

## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.03.2019 / 30.04.2019 / 31.05.2019 / 30.06.2019 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 27.10.2020 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி மற்றும் வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**27.10.2020**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
நம்பிக்கையினால் கட்டியெழுப்பப்பட்ட புத்தாக்கச் சக்தி

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

### விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்பஹா மாவட்டத்தின் ராகம, எலபிட்டிவல, தர்மதாச மாவத்த, இல.04 எனுமிடத்தில் வசிக்கும் கன்கார முதியன்சேலாகெ பாலித்த சந்ரலால் கருணாரத்ன ஆகிய நான் இலங்கை அரசுக்கும் சகல மக்களுக்கும் தெரிவிப்பதாவது, இத்தாலி நாபோலி சட்ட அதிகாரி சென்பனத் கல்ஸ் வெபரா கனானாவில் உறுதிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணி தத்துவத்தின் கீழ் ராகம, எலபிட்டிவல, தர்மதாச மாவத்தை, இல.04 எனுமிடத்தில் வசிக்கும் ஹேவா தன்திரீகே தீபா நிஷாந்தி பீரிஸ் இடம் வழங்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச் செய்வதாக அறிவித்து கொள்கிறேன்.

**கே.எம்.பீ.சீ.கருனாரத்ன**

### அறிவித்தல்

பின்வரும் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டதென 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1)ஆம் பிரிவின் கீழ், இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**முசாத்த (பிவீடி) எல்டீடி**
பதிவிலக்கம்:
**பிவீ 00228660**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**2020 ஒக்டோபர் 8**
கம்பனியின் பதிவு முகவரி:
**பரகத் பாதை,**
**ஓட்டமாவடி - 03**
**கம்பனி செயலாளர்**

**Repeat Your Ad For Better Offers**

### பத்திரிகை அறிவித்தல்

எனது குறியீட்டு எண் : 6/3/7/15/8/2
காணி அமைச்சின் குறியீட்டு எண் : LD/05/2007/MV/155

**1964 இல.28 காணி சுவீகரிக்கும் (திருத்தச்) சட்டத்தின் கீழ் திருத்தம் செய்யப்பட்ட காணி சுவீகரிக்கப்படும் சட்டத்தில் 460வது அத்தியாயம் 7வது அத்தியாயத்தின் கீழ் அறிவிக்கப்படுகின்றது**

இங்கு கீழே விபரிக்கப்பட்டுள்ள காணி மொரகஹகந்த/களுகங்கை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட திட்டமிடப் பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தொடர்பாக இல.2194/61, 2020.09.24 திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட கசாட் பத்திரிகையை பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : நாஉல |
| கிராமசேவை அலுவலர் பிரிவு | : ரஜரவெல. |
| ஊர் பெயர் | : ரஜரவெல. |
| காணியின் பெயர் | : அதிவிசேட கசாட் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது பிரகாரம் |
| அளவு | : அதிவிசேட கசாட் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது பிரகாரம் |
| துண்டு இலக்கம் | : 311 |
| திட்ட இலக்கம் | : இஅநிசு கிராம வரைபட இல 532 பிற்சேர்க்கை இல.09, பத்திர இல.09 |
| முகவரி | : பிரதேச செயலகம், நாஉல |

**சிந்தக இலங்கசிங்க காணி**
**சுவீகரிப்பு அதிகாரி**
**நாஉல பிரதேச செயலாளர்**
**திகதி : 2020.10.14**

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2021

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை 2021ஆம் வருடத்தில் வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவுசெய்துகொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ **பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கல்**

01. சகல வகையான அலுவலக காகிதாதிகள், அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள், படிவங்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல்
02. சகல வகையான அச்சுவேலைகள்
03. அலுவலக உபகரணங்கள் மரத் தளபாடங்கள், உருக்கு வீட்டுபயோகப் பொருட்கள்
04. கணனிகள்/ கணனிமென்பொருள் மற்றும் டோனர் வகைகளை வழங்குதல்
05. டிஜிட்டல் அறிவித்தல்களை அச்சடிப்பவர்கள்
06. சகல சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
07. மின் உபகரணங்கள் மற்றும் வீதிவிளக்கு உபகரணங்கள்
08. களை நாசினிகள், பீடைநாசினிகள் மற்றும் உர வகைகள்
09. சகல வகையான ஹியூம் குழாய்கள், கம்பி தூண்கள் வழங்குதல்
10. சகல வகையான நிறப்பூச்சுகள்
11. சீருடைக்கான துணிகளை வழங்குதல்
12. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
13. முன்பள்ளிஉபகரணங்கள்
14. தார் (வீதிஅபிவிருத்திக்காக)
15. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வழங்குதல்
16. சகல வகையான டயர் மற்றும் டியூப் மற்றும் பெட்டறி/ டயர் மீள் நிரப்புதல்
17. வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல்
18. சகல வகையான கட்டிடப் பொருட்களை வழங்குதல்

❖ **ஏனைய சேவைகள்**

22. வாகன திருத்தவேலைகளைச் செய்தல்
23. வாகனங்களைச் சேர்விஸ் செய்தல்
24. கணனி/ தட்டச்சுப் பொறி/ தொலைநகல் இயந்திரம்/ நகல் பிரதி இயந்திர திருத்தவேலைகள்
25. உருக்கியொட்டுனர்கள்
26. நிலஅளவை வேலைகள்
27. பெயர்ப் பலகைகள்/ பனர்களை வரைதல்/ ஞாபகச் சின்னங்களைத் தயாரித்தல்
28. பாவித்த புதினப் பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்தல்
29. அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்தும் வேலைகள்
30. அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகளைச் செய்தல்
31. வாடகை அடிப்படையில் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
32. சட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட ஆலோசனைகள்/மொழிபெயர்ப்புகள்
33. அரிவாள், மண்வெட்டி போன்ற ஆயுதங்களின் திருத்தவேலைகள் மற்றும் கொள்வனவு செய்தல்

**அட்டவணை 01**

❖ **நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்**

| | ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1. | 100,000.00 ரூபாவுக்குக் குறைந்தவேலைகள் | 1000.00 |
| 2. | 100,000.00 முதல் 250,000.00 ரூபாவரை | 2000.00 |
| 3. | 250,000.00 முதல் 500,000.00 ரூபாவரை | 2500.00 |
| 4. | 500,000.00 முதல் 1,000,000.00 ரூபாவரை | 3000.00 |
| 5. | 1,000,000.00 ரூபாவுக்குமேல் | 3500.00 |

வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு வெவ்வேறான விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை www.facebook.com/ Arachchikattuwa Pradeshiya Sabha எனும் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் **facebook** கணக்கிலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். இல. 1 முதல் 33 வரையான விடயங்களின் பொருட்டு ஒரு விடயத்திற்கான பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபாசெலுத்துதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் விண்ணப்பப் படிவங்களை, தம்மிடமுள்ள தகைமை மற்றும் அனுபவங்களை நிரூபிப்பதற்காக ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்தை செயலாளர், ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் பெயருக்கான காசோலை அல்லது காசுக் கட்டளையை 2020.12.31ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைக் கோரி தகைமை வாய்ந்தவர்களைத் தெரிவுசெய்து வழங்கல் சேவை மற்றும் வேலைகளை நிறைவேற்றுவதற்கு செயல்படும் அதேவேளை தேவையானபோது அதற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையை ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கம் ஊடாக வழங்கல் அதிகாரியிடமிருந்து விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**கே. தட்சணாமூர்த்தி,**
**தலைவர்,**
**பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ.**

**தொ.இல. 032-2259783**
**வழங்கல் அதிகாரி - 077-3564110**
**071-7464110**
**2020.10.20**

## கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பணிமனை**
**59ஆம் இலக்க தாங்கிக் கூரைக்கு பெயிண்ட் பூசுதல்**
**(Tender No.: C-36-2020)**

இலங்கை, சப்புகஸ்கந்தவிலுள்ள 59 ஆம் இலக்க தாங்கிக்கூரைக்கு பெயிண்ட் பூசுவதற்கு கடந்த கால அனுபவமுள்ள உள்ளூர் நிறுவனங்களிலிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ் மட்டம்) இத்தால் விலைமனுக்களைக் கோருகின்றது.

வரிகள் நீங்கலாக 5 மில்லியன் ரூபாவிற்கு குறையாத பெறுமதியில் மணல் உடைத்தல் மற்றும் பெற்றோலிய உருக்கு தாங்கிகளுக்கு பெயிண்ட பூசுதல் ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதில் அனுபவமுடைய பெற்றோலிய சுத்திகரிப்பு பணிமனையினால் வழங்கப்பட்ட உள்ளூர் விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு தகுதியுடையவராவர்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் சுத்திகரிப்பு நிதித் திணைக்களத்திற்கு அனைத்து வரிகள் அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத்தொகையொன்றாக 1,500 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். மதிப்பீட்டில் பரிசீலனை செய்யப்படுவதற்காக இந்த பணப்பற்றுச்சீட்டின் பிரதியானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், விலைமனுதாரர் மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தை www.ceypetco.gov.lk மற்றும் www.news.lk. ஆகிய இணையதளங்களிலும் பரீட்சிக்கலாம்.

களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனையின் பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்களுக்கான சுத்திகரிப்பு பணிமனை பிரதி முகாமையாளரின் அலுவலகத்தில் 2020 நவம்பர் 05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள "விலைமனு முன்கூட்டம் மற்றும் தளவிஜயத்தில்" அனைத்து விலைமனுதாரர் அல்லது அவர்களின் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவண வழங்கல் இறுதித் திகதி மற்றும் நேரம் ஆகியன 2020 நவம்பர் 05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியாகுமென்பதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்ளும் மற்றும் விலைமனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரமானது 2020 நவம்பர் 19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியாகும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, திட்டமிடல் திணைக்களம், பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்களுக்கான சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைநகல்: 94 11 2400436.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், சப்புகஸ்கந்த,**
**இலங்கை.**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

# பெறுகை கோரல்

## கொலொன்ன பிரதேச சபை

கொலொன்ன பிரதேச சபையின் கொலொன்ன வார சந்தை இடவசதிகளை விரிவுபடுத்துமாறு புதுப்பிக்கும் திட்டத்திற்காக கீழ்க்காணும் வசதிகளுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி கோரலின் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | செயற்றிட்ட பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு வெட் வரியுடன் (ரூ.மி) | குறைந்தபட்ட தகைமை தரம் CIDA | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி ரூ. |
|---|---|---|---|---|---|
| KPS/C/02 | கொலொன்ன வாரச்சந்தை புதுப்பித்தல் | 13.2 மில்லியன் | C - 05<br>C - 06 | 7500.00 | 133,000.00 |

02. இதற்காக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு 2020.10.21 முதல் 2020.11.03 வரை சாதாரண அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை கொலொன்ன பிரதேச சபை தலைமையகத்தில் பரீட்சித்துப் பார்த்து மேற்படி கட்டணங்களை செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு 2020.11.04 முற்பகல் 10.00இற்கு அல்லது அதற்கு முன் தலைவர், கொலொன்ன பிரதேச சபை, கொலொன்ன என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப்த்திரங்கள் உள்ளிடும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது CIDA பதிவை உறுதி செய்வதற்காக அதன் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை காசாக கேள்விப்பிணை வைப்பு செய்பவர்களின் பெயர்களை அதன் பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட பிணைமுறியை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2020.11.04 முற்பகல் 10.15இற்கு தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்வி பற்றிய இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை பிரதேச சபைக்கு உரியது.

**தொடர்புகள் : தொ.பே - 0452260275**

**டீ.ரூபசேன,**
**தலைவர் - பெறுகைக்குழு,**
**கொலொன்ன பிரதேச சபை.**

# பெறுகை அறிவித்தல்

## வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## வைத்தியசாலைகளுக்கான சமைத்த உணவு வழங்குதல் – 2021

2019ஆம் வருடத்தில் இயைபுடைய வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவை வழங்குவதற்காக 2020-11-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைச் சபைத் தலைவராகிய என்னால் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**02 சமைத்த உணவு வழங்கல்**

அனுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை பொது வைத்தியசாலைகள் தவிர்ந்த வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்துக்குட்பட்ட ஏனைய சகல வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்காக.

| சேவை | வைத்தியசாலை வகுதி | கட்டணம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | | |
|---|---|---|---|---|
| | | ஒரு கேள்விப் பத்திரத்திற்கான மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூபா) | 2021-02-11ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறி (ரூபா) | சொத்துச் சான்றிதழ் பொது (ரூபா) |
| சமைத்த உணவு வழங்கல் | A | 2,000.00 | 85,000.00 | 150,000.00 |
| | B | 2,000.00 | 75,000.00 | 125,000.00 |
| | C | 2,000.00 | 60,000.00 | 85,000.00 |
| | D | 2,000.00 | 40,000.00 | 65,000.00 |
| | E | 2,000.00 | 15,000.00 | 40,000.00 |

03. பொது 170 படிவம் மூலம் சொத்துச் சான்றிதழை சமர்ப்பிக்காவிடின் அதற்குச் சமமான பெறுமதியுடைய பணத்தை மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

04. மேற்படி சேவையை வழங்குவதற்கு

   i. சகல வழங்குநர்களும் வடமத்திய மாகாணத்தில் வதிவிடத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வடமத்திய மாகாண சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

   ii. சகல வழங்குநர்களும் வடமத்திய மாகாணத்தில் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடனான வதிவுச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   iii. வழங்கல்களுக்கான உரிய பிணை மற்றும் சொத்துச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. தகுதியான விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் காசாகச் செலுத்தி குறித்த கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் வழங்கல் 2020-10-20ஆம் திகதி முதல் 2020-10-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இடம்பெறும்.

06. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் வெவ்வேறாக தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக பொறியிட்டு 2020-11-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் / தலைவர், திணைக்கள கேள்விச் சபை, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிட்டோ சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சேவை மற்றும் சேவைக்கு உரித்தான நிறுவனம், மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கேள்வி ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் உடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவர் கலந்துகொள்ளலாம்.

08. கேள்விப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியின் பதிவு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2020-11-10ஆம் திகதி முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் (2020-11-10ஆம் திகதி முதல் 2021-02-11ஆம் திகதி வரை) வங்கிப் பிணை முறியொன்றின் மூலம் அல்லது மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்கு இயைபுடைய கட்டணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. இக்கேள்வி தொடர்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**வைத்தியர் டபிள்யு.எம். பாலித்த பண்டார,**
**மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் / தலைவர்,**
**மாகாண சுகாதாரத் திணைக்கள பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 025-2050718/025-2223790**

The Housewives' companion
Classifieds on
Daily News

அனுராதபுரம்
பதுளை
பம்பலப்பிட்டி
பொரளை
சிலாபம்
சுன்னாகம்
தம்புள்ளை
தெமட்டகொட
எம்பிலிப்பிட்டிய
காலி
கம்பஹா
கிராண்ட்பாஸ்
ஹற்றன்
யாழ்ப்பாணம்
கொட்டாவ
கடவத்தை
களுத்தறை
கொச்சிக்கடை
கொட்டஹேன
குருநாகல்
மாத்தளை
மாத்தறை
மாவனல்லை
மினுவாங்கொடை
நீர்கொழும்பு
நுவரெலியா
பொலன்னறுவை
புறக்கோட்டை
இரத்தினபுரி
செங்கடகல/கண்டி
திஸ்ஸமஹாராம
வத்தளை
வெலிகம

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# கேள்விக்கான அழைப்பு

## பொலன்னறுவை பிரதேச சபை

1. பொலன்னறுவை பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி கேள்வி முறைமையின் மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும். என்னும் மாகாண சபை சுற்றுநிருப்பம் 2016/13(ii) மூலம் மாகாண எல்லைக்குள் பதிவு செய்துள்ள கேள்விதாரர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் துறையில் மற்றும் தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை பொலன்னறுவ பிரதேச சபை செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே.இல. 027255575).
5. செயற்றிட்டத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தைக் காசாக செலுத்திய பின்னர் 2020.10.21 முதல் 2020.11.02 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பொலன்னறுவை பிரதேச சபை தலைமையகத்தில் கௌரவ தலைவரிடம் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து, இதற்காக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்விப் பத்திரங்கள் 2020.11.03 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படுவதால்அந்த நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு 'தலைவர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர், பொலன்னறுவ பிரதேச சபை' என்ற முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது அலுவலகத்திற்குள் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் பெற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
7. கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் தினம் வரை கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. மதிப்பீட்டின் மற்றும் தேர்ந்தெடுக்கும் முறை கேள்வி வழங்கலுக்கு போதுமானதாக பதிலளிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச கேள்வியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்ற. கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

| இலக்கம் | விபரம் | மதிப்பீட்டு செலவு | ஒப்பந்த காலம் | தேவைப்படும் தரம் | தேவைப்படும் கேள்விப் பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | கடவல வெவ, மாஓய பிரதான வீதியில் மதகினை நீர்மாணித்தல் | 2.25 மில்லியன் | 84 நாட்கள் | C8 மற்றும் C7 | 30,000.00 |

**தலைவர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர்**
**பொலன்னறுவ பிரதேச சபை**
**பொலன்னறுவை.**

# பதுளை மாநகர சபை

## 2021ஆம் வருடத்திற்கு சபை சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களை அழைத்தல்

**பதுளை மாநகர சபைக்குரிய கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சபை சொத்துக்கள் தொடர்பாக கீழேயுள்ளவாறு தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அழைக்கப்படுகின்றது.**

**குத்தகைக்காலம்** : **2021.01.01 முதல் 2021.12.31 வரையானது**

**விலைமனு ஆவணங்கள் வழங்கப்படுவது** : **2020.10.20 முதல் 2020.11.10 வரையான அலுவலக தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00வரை பதுளை மாநகர சபை அலுவலகத்தில்**

**விலைமனுப்பத்திரங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதி** : **2020.11.11 அனறு மு.ப.10.15 மணிக்கு**

**விலைமனு திறக்கப்படுவது** : **2020.11.11 அன்று மு.ப.10.30 மணிக்கு பதுளை மாநகரசபை அலுவலகத்தில்**

மேலதிக விபரங்களை அலுவலக தினங்களில், மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மாநகர கணக்காளர்/வருமானப் பிரிவைத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 055-2224277/055-2229262)

பெறுகை விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் பெறுகை விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

**கவனிக்கப்படவேண்டியவை.**

01. விண்ணப்பதாரர்கள், 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

02. பதுளை மாநகர சபையுடன், எந்தவொரு நீதிமன்றத்திலும் சட்ட சிக்கல்களை கொண்டிருந்த அல்லது தற்போது கொண்டிருக்கும் மற்றும் மாநகர சபைக்கு வாடகை செலுத்தப்படவுள்ள மற்றும் இதற்கு முன்னர் பெறுகை சட்டத்திட்டங்களை மீறியுள்ள எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் இது தொடர்பாக விண்ணப்பிக்க முடியாது அவ்வாறு பெறுகை விலைமனுவை சமர்ப்பித்துள்ளதாக பதுளை மாநகர சபைக்கு தெரியவரும் பட்சத்தில், விலைமனு இரத்துச் செய்யப்பட்டு, வைப்புச் செய்யப்பட்டு, வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகை சபையுரிமையாகவும் விலைமனுவை இரத்துச் செய்து குறித்த சபை சொத்துக்களை சபைக்கு சுவீகரிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான பெறுகை விலைமனுதாரர்களை அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

03. சமர்ப்பிக்கப்படும் பெறுகை விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழு அதிகாரமும் பெறுகை சபைக்குரியதாகும்.

04. இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக பெறுகை விலைமனுவிற்குக் குறையாத சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுப்படிவக்கட்டணம் மற்றும் விலைமனு வைப்புத்தொகை சபையுரிமையாக்கப்படும்.

05. பெறுகை செயற்பாடுகள் பிரகாரம், விலைமனுதாரரினால் 02 விலைமனுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அந்த விலைமனுப் பத்திரங்கள் வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, குறித்த தபாலுறைகள் 1ஆவது பிரதி மற்றும் 2ஆவது பிரதியென குறிக்கப்பட்டு, பின்னர் அவை தனி தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, குறித்த நேரத்திற்கு முன்னதாக, தலைவர், பெறுகைக்குழு, மாநகர சபை, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது நகர சபையின் மாநகர கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும்.

**அட்டவணை**

| | சொத்தின் பெயர் | வரி நீங்கலான ஆகக்குறைந்த பெறுகை விலைமனு ரூ.சதம் | விலைமனு வைப்புத் தொகை | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப்படும் வைப்பு ரூ. | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் |
| 01 | மத்திய புதிய சந்தை தொகுதியில் - F 01 மாட்டிறைச்சிக்கடை | 3,600.000.00 | 72,000.00 | 1500.00 |
| 02 | மத்திய புதிய சந்தை தொகுதியில் - F 02 கோழியிறைச்சிக்கடை | 240,000.00 | 5,000.00 | 1500.00 |
| 03 | மத்திய புதிய சந்தை தொகுதியில் - F 03 ஆட்டிறைச்சிக்கடை | 800,000.00 | 16,000.00 | 1500.00 |
| 04 | வெலேகடே சந்தை தொகுதியில் C 01 மாட்டிறைச்சிக்கடை | 2,400,000.00 | 48,000.00 | 1500.00 |
| 06 | மயிலகஸ்தென்ன D 01 மாட்டிறைச்சிக்கடை | 1,800,000.00 | 36,000.00 | 1500.00 |
| 07 | மயிலகஸ்தென்ன வாரச்சந்தை வளவில் பொது கழிவறை | 3,387,500.00 | 68,000.00 | 1500.00 |
| 08 | பஸ் நிலைய வளவில் பொது கழிவறை | 6,000,000.00 | 120,000.00 | 1500.00 |
| 09 | தெற்கு ஒழுங்கை கழிவறை | 1,740,000.00 | 35,000.00 | 1500.00 |
| 10 | சேனாநாயக்க பிட்டிய பொது கழிவறை | 325,000.00 | 6,500.00 | 1500.00 |
| 11 | சேனாநாயக்கபிட்டிய நிலக்கீழ் வாகனத்தரிப்பிடம் | 432,000.00 | 8,650.00 | 1500.00 |

**2020.10.17**

**மாநகர ஆணையாளர்**
**மாநகரசபை**
**பதுளை**

# மனித குடியிருப்புகளை நோக்கி சிட்டுக்குருவிகளின் வருகையில் வீழ்ச்சி

## தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு தொடர்பில்லையா?



'சிட்டுக்குருவிகள் நடமாடும் சுற்றுச்சூழலில்தான் காகம், மைனா, புறா போன்ற பல பறவைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத தொலைபேசிக் கோபுரங்களின் கதிர்வீச்சு, சிட்டுக்குருவிகளுக்கு மாத்திரம் பாதிப்பாக அமைகின்றதா?'

**தமிழ்நாடு காக்கைக்கூடு சுற்றுச்சூழல் அமைப்பின் ஸ்தாபகர் செழியன் ஜா**



இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியின் பயனாக மனிதனுக்கு அபரிமித நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளது போன்று அவனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீமைகளும் ஏற்படவே செய்திருக்கின்றன. அந்த வகையில் பறவைகளில் காணப்படும் சிட்டு குருவி இனம் அழிந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் அதற்கு தொலைத்தொடர்பு கோபுரங்கள் காரணம் என்றும் கூறப்படுகின்றது. அதேநேரம் சிட்டுக்குருவிகள் மனித குடியிருப்பு பிரதேசங்களுக்கு வருகை தருவதில் ஏற்பட்டிருக்கும் குறைவுக்கும் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் இதன் உண்மை நிலை தொடர்பில் அறிந்துகொள்வது பயன் மிக்கதாக இருக்கும்.

சிட்டுக்குருவியானது பஸ்ஸெரின் குடும்பத்தை சேர்ந்த ஒரு பறவை இனம். இதன் விஞ்ஞானப் பெயர் *Passer domesticus* ஆகும். சுமார் 13 ஆண்டுகளை ஆயுட்காலமாகக் கொண்டிருக்கும் இப்பறவை, உருவத்தில் சிறியவையாகவும் இளம் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்தை கொண்டவையாகவும் இருக்கும். இப்பறவை 8 முதல் 24 சென்றிமீற்றர்கள் நீளத்தைக் கொண்டிருப்பதோடு 24 கிராம் முதல் 39.5 கிராம் வரையான எடையைக் கொண்டதாக விளங்கும். சிறிய மற்றும் கூம்பு வடிவ அலகுகளை கொண்ட இப்பறவை சிறிய கால்களுடனானவை. சிட்டுக்குருவிகளின் ஆண், பெண் இனங்களை வேறுபடுத்தி அறிவது இலகுவான காரியமாகும். குறிப்பாக பெண் பறவையின் உடலின் மேற்பாகம் தவிட்டு நிறத்தில் மஞ்சலும் கறுப்பும் கலந்த கோடுகளைக் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெண்மையாகக் காணப்படும்.

அதேநேரம் இப்பறவைகளின் கூடுகள் கிண்ண வடிவில் இருக்கும். இவை மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். அவற்றின் முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் காணப்படும். ஆண், பெண் இரண்டுமே முட்டைகளை மாத்திரமல்லாமல் குஞ்சுகளையும் பாதுகாத்து வளர்க்கும் பண்பைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றின் குஞ்சுகள் பெரிதாகும் வரை கூட்டிலேயே வளரும். அவை பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து சென்றுவிடும். என்றாலும் சிட்டுக்குருவிகள் குளிர் காலத்தில் கூட்டமாக புதர்களில் ஒன்று சேர்ந்து இரவு வேளையைக் கழிக்கும்.

இவ்வாறான அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கும் இப்பறவைகள் மனிதர்கள் வாழக்கூடிய குடியிருப்புக்களை நாடி வரக்கூடியனவாகவும் குடியிருப்புக்களில் கூடு கட்டி வாழக்கூடியனவாகவும் விளங்கிய போதிலும் அவை மனிதர்களோடு பழகுவதில்லை. அதனால் அவற்றை செல்லப்பறவையாக வளர்க்க முடியாது.



என்றாலும் இப்பறவை இனம் அண்மைக்காலமாக வீடுகளுக்கும் மனித நடமாட்ட இடங்களுக்கும் வருகை தருவது குறைவடைந்துள்ளது. இது சிட்டுக்குருவிகள் அழிவடைவதன் வெளிப்பாடு என்றும் அதற்கு தொலைபேசி கோபுரங்களிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு காரணம் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பாக இக்கதிர்வீச்சு சிட்டுக்குருவிகளின் இனப்பெருக்கத்தைப் பாதிப்பதே இதன் அடிப்படை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் 'சிட்டுக்குருவிகள் நடமாடும் சுற்றுச்சூழலில் தான் காகம், மைனா, புறா போன்ற பல பறவைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத தொலைபேசிக் கோபுரங்களின் கதிர்வீச்சு, சிட்டுக்குருவிகளுக்கு மாத்திரம் பாதிப்பாக அமைகின்றதா?' என்று தமிழ்நாடு காக்கைக்கூடு சுற்றுச்சூழல் அமைப்பின் ஸ்தாபகர் செழியன் ஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்படியென்றால் இப்பறவை இனம் முன்பு போன்று மனித குடியிருப்புகளுக்கும் மனித நடமாட்ட பிரதேசங்களுக்கும் வருவதில் வீழ்ச்சி ஏற்படக் காரணம் என்ன என்ற கேள்வியும் எழவே செய்கின்றது. அதனால் இப்பறவைகள் மனித குடியிருப்பு பிரதேசங்களுக்கு வருகை தரக்கூடிய சூழல் தற்போது காணப்படுகின்றதா என்பது குறித்து முதலில் நோக்க வேண்டும். பொதுவாக சிட்டுக்குருவி போன்ற பறவைகள் மூன்று காரணங்களின் அடிப்படையில் தான் மனித குடியிருப்பு பிரதேசங்களுக்கு வருகை தரும். அதாவது,

1. பறவைகளுக்கு ஏற்ற சீதோஷண நிலை காணப்படல்
2. உணவு வசதி
3. கூடு கட்டி வாழ்வதற்குரிய வசதியும் அதற்கு தேவையான மூலப் பொருட்களும் கிடைக்கப்பெறல்

'தொலைத்தொடர்பு கோபுரங்களின் கதிர்வீச்சுகளால் சிட்டுக்குருவிகள் அழிவடைகின்றன என்ற விடயம் அறிவியல் ரீதியில் உறுதிப்படுத்தப்படவில்லை'

**பறவையியல் நிபுணர் சந்துரு வெங்கட் ராமன்**



இவை காணப்படும் பிரதேசங்களுக்கு சிட்டுக்குருவிகள் தானாகவே வருகை தரும். அது தான் அவற்றின் இயல்பு. இவை கிடைக்கப்பெறாத போது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக மனிதனுடன் அவை போராட்டம் நடாத்திக் கொண்டிருப்பதில்லை. மாறாக அவ்வசதிகள் கிடைக்கப்பெறும் பிரதேசங்களை நாடி அவை புலம்பெயர்ந்து சென்றுவிடும். அவ்வளவு தான். அதுவே தற்போது நிகழ்ந்திருக்கின்றது என்றும் செழியன் ஜா போன்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

என்றாலும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு சிட்டுகுருவிகளின் வருகையில் தற்போது ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி மற்றும் தொலைபேசிக் கோபுரங்களால் சிட்டுக்குருவிகள் அழிவடைகிறது என்று தெரிவிக்கப்படும் கருத்து என்பன தொடர்பில் தமிழ்நாட்டில் 40 வருடங்களாக செயற்படும் 'சென்னை இயற்கையாளர் சங்கத்தினர்' அண்மையில் நான்கு மாத கால ஆய்வொன்றை நடாத்தி அது தொடர்பில் முடிவுகளையும் முன்வைத்துள்ளனர்.

அதன்படி சிட்டுக்குருவிகள் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்கு வர இரண்டு காரணங்கள் அடிப்படையாக உள்ளன. அவற்றில் ஒன்று அவற்றுக்கு உணவு கிடைக்கப்பெற்றமை. அதாவது சிட்டுக்குருவிகளின் பிரதான உணவு நெல், அரிசி போன்ற தானியங்களாகும். அவற்றை வீட்டு முற்றங்களில் உலர வைக்கும் பழக்கம் இலங்கை, தமிழ்நாடு போன்ற இடங்களில் நீண்ட காலமாகக் காணப்பட்டு வந்துள்ளன. இது சிட்டுக்குருவிகள் தம் உணவுத் தேவையை நிறைவேற்றிக்கொள்ள வசதியாக இருந்துள்ளன.

மற்றையது சிட்டுக்குருவிகள் கூடு கட்டிவாழக்கூடிய வசதிகளை மனித குடியிருப்புகள் கொண்டிருந்தமையாகும். அத்தோடு அவை கூடு கட்டி வாழத்தேவையான வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களை மனிதன் வாழும் பிரதேசங்களில் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தமையும் அதன் வருகைக்கு பெரிதும் உதவின.

எனினும் நவீன அறிவியலில் கடந்த 20, 30 வருடங்களாக ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் விளைவாக மனிதனின் வாழ்க்கை முறைமையிலும் பழக்கவழக்கங்களிலும் பெரிதும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக முன்பைப் போன்று முற்றங்கள் வைத்து வீடுகளை அமைக்கும் வழக்கிலும் நெல், அரிசி போன்ற தானியங்களை உலர வைக்கும் முறைகளும் பெரிதும் மாற்றமடைந்துள்ளன. அத்தோடு வீடுகளும் முன்பைப் போன்றல்லாமல் கொங்கிறீட் கட்டடங்களாகவும் மாடிகளாகவும் அமைக்கப்படுகின்றன.

இவற்றின் விளைவாக சிட்டுக்குருவிகளுக்கு உணவும், கூடுகட்டி வாழக்கூடிய வசதிகளும் கிடைக்கப் பெறுவது பெரிதும் குறைவடைந்துள்ளதோடு அவை கூடு கட்டுவதற்கு தேவையான வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இவற்றின் விளைவாக அவை உணவு மற்றும் கூடுகட்டி வாழத் தேவையான வசதிகள் காணப்படும் இடங்களை நோக்கி இடம்பெயர்ந்திருக்கின்றன. அவ்வளவு தான். மற்றபடி தொலைபேசி கோபுரங்களின் கதிர்வீச்சுக்களால் சிட்டுக்குருவிகளின் இனப்பெருக்கம் பாதிக்கப்படவுமில்லை. அவை அழிவடையவுமில்லை என்று அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் போது தொலைபேசிக் கோபுரங்களின் கீழ் கூட சிட்டுக்குருவிகள் கூடுகட்டி வாழ்வதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை பறவையியல் நிபுணர் சந்துரு வெங்கட் ராமன், 'தொலைத்தொடர்பு கோபுரங்களின் கதிர்வீச்சுகளால் சிட்டுக்குருவிகள் அழிவடைகின்றது என்ற விடயம் அறிவியல் ரீதியில் உறுதிப்படுத்தப்படவில்லை' என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதேயொத்த கருத்தை வேறு சில சுற்றுசூழல் ஆர்வலர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம், சிட்டுக்குருவிகள் குறைவடைய நகராக்கல், வயற்காணிகள் மணல் கொண்டு நிரப்பப்படுதல் மற்றும் கட்டட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படல் என்பவற்றினால் வயல் வெளிகள் குறைவடைதல், அவை உண்ணும் தானியங்களில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருத்தல் என்பன காரணங்களாக விளங்குகின்றன என்று வேறு சில சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

ஆனபோதிலும் உலகில் ஆபத்திலுள்ள உயிரினங்கள் குறித்து முறைப்படி அறிவிக்கும் ஐ.யு.சி.என் என்ற சர்வதேச அமைப்பு சிட்டுக்குருவியை LC (Least Concern) கவலைப்படத் தேவையில்லை என்ற நிலையிலேயே வைத்திருக்கின்றது.

ஆகவே சிட்டுக்குருவிகளுக்கு உணவு மற்றும் இருப்பிடத்திற்கான வசதி கிடைக்கப்பெறும் சுற்றுச்சூழல் அருகிவருவதால் அவை கிடைக்கப்பெறும் பிரதேசங்களை நோக்கி அவை இடம்பெயர்ந்து செல்கின்றன என்பது தான் உண்மையாக இருக்க முடியும். அத்தோடு சுற்றுச் சூழல் மாற்றங்களால் புவி வெப்பமாதலும் மரங்கள் அழிக்கப்படுவதும் அதற்கு அதிகம் பங்களித்துள்ளன. அதனால் சிட்டுக்குருவிகள் முன்பு போன்று மனித குடியிருப்பு பிரதேசங்களுக்கு தானாகவே வருகை தரக்கூடிய வகையில் குடியிருப்புக்களையும் சுற்றுசூழலையும் ஒழுங்கமைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்துவது பயன்மிக்கதாக இருக்கும்.



**மர்லின் மரிக்கார்**

# இலங்கை கால்பந்து குழாத்தின் பயிற்சியை புதிய வடிவங்களில் நடத்துவதற்குத் திட்டம்



தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும் தேசிய கால்பந்து குழாத்தின் பயிற்சிகள் வேறு அமைப்பில் ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்ப குழு தலைவர் ரோஹித்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். அவசர நிலை தணிந்த பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் தேசிய கால்பந்து பயிற்சிக் குழாத்திற்காக புதிய வீரர்களையும் அழைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்தில் முடிவடைந்த தலைவர் கிண்ண கால்பந்து போட்டியில் பரிந்துரைக்கப்பட்ட ஒன்பது பேர் அதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். ரோஹித்த பெர்னாண்டோவின் தலைமையில் கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்ப குழுவுக்கு தேசிய கால்பந்து பயிற்சியாளர் அமீர் எலஜிக் மற்றும் முன்னாள் கால்பந்து பயிற்சியாளர்களான டட்லி ஸ்டென்ட்வோல்ட், சம்பத் பெரேரா, இளையோர் அணி பயிற்சியாளர் சமிந்தஸ்டென்வோல் மற்றும் காமினி மதுராவல ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

கொவிட்–19 தொற்றுக்கு மத்தியில் தேசிய கால்பந்து சம்மேள பயிற்சிக்கு பல தடவைகள் தடங்கல் ஏற்பட்டது. கோட்டே 'பெத்தேகம' தேசிய கால்பந்து அபிவிருத்தி நிலையத்தில் வதிவிட பயிற்சியை நடத்தி சென்றபோதும் இந்த மாதத்தில் கொரோனா வைரஸ் பரவியபோது வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

மேலும் சர்வதேச கால்பந்து தரப்படுத்தலுக்கு அமைய இலங்கை தொடர்ந்து 206 ஆவது இடத்தில் உள்ளது. இதற்கு ஓர் ஆண்டுக்கு முன் இலங்கை 205 ஆவது இடத்தில் இருந்தபோது இலங்கையின் கால்பந்து பயிற்சியாளராக ரூமி பக்கீர் அலி செயற்பட்டார். இலங்கை கடைசியாக பங்கேற்ற சர்வதேச கால்பந்து போட்டியில் பங்களாதேஷிடம் 3–0 என தோல்வியை சந்தித்தது.

தேசிய கால்பந்து குழாத்தின் வதிவிட பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட பின் 23 வயதுக்கு உட்பட்ட குழாம் ஒன்றை நடத்திச் செல்வதற்கு இலங்கை கால்பந்து சம்மேளனம் எதிர்பார்த்துள்ளது. தேசிய குழாத்தின் எதிர்கால வதிவிட பயிற்சிக்காக இலங்கையில் அழைப்புக் கிடைத்த ஐரோப்பாவில் தற்போது விளையாடுகின்ற இலங்கையர்கள் சிலரும் பங்கேற்பதற்கு தயாராகி இருப்பதாக கால்பந்து சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே தொழில்நுட்ப குழுவினால் தயாரிக்கப்பட்ட புதிய திட்டத்திற்கு அமைய இலங்கையில் வதிவிட வெளிநாட்டு பயிற்சியாளருக்காக எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும்.

அதன்போது 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கால்பந்து சம்பியன்சிப் தொடரில் இலங்கை அணி குறைந்தபட்சம் அரையிறுதிப் போட்டிக்கு அழைத்துச் செல்வதே தொழில்நுட்பக் குழுவினால் அவருக்கு வழக்கப்படும் இலக்காகும். அமீர் எலஜிக்கின் சேவை இலங்கைக்கு எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..............................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..............................
வாக்களித்தவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **2020-10-24** இல. **33**




# 2 ஆவது சுப்பர் ஓவரில் பஞ்சாப் த்ரில் வெற்றி



மும்பை இந்தியன்ஸ் அணியுடனான ஐ.பி.எல் டி20 லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 2ஆவது சுப்பர் ஓவரில் த்ரில் வெற்றி பெற்றது.

துபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த இப்போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோகித் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அந்த அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. பஞ்சாப் அணியும் மாற்றம் ஏதுமின்றி களமிறங்கியது.

மும்பை இன்னிங்ஸை ரோகித், டி கொக் இணைந்து ஆரம்பித்தனர். ரோகித் 9 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அர்ஷ்தீப் சிங் பந்துவீச்சில் கிளீன் போல்டானார். அடுத்து வந்த சூர்யகுமார் டக் அவுட்டாகி வெளியேறினார்.

இஷான் கிஷண் 7 ஓட்டத்துடன் வெளியேறி ஏமாற்றமளிக்க, மும்பை அணி 5.1 ஓவரில் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் இழந்து திணறியது. இந்த நிலையில், டி கொக் மற்றும் குருணல் பாண்டியா ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு பொறுப்புடன் விளையாடி 58 ஓட்டங்களை சேர்த்தது. குருணல் 34 ஓட்டங்கள் விளாசி ரவி பிஷ்னோய் பந்துவீச்சில் ஹூடா வசம் பிடிபட்டார்.

39 பந்தில் அரை சதம் அடித்த டி கொக் 53 ஓட்டங்கள் விளாசி ஜோர்டன் பந்துவீச்சில் அகர்வாலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் போலார்ட்–கோல்டர் நைல் ஜோடி பவுண்டரியும் சிக்சருமாக விளாசித் தள்ள, மும்பை அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்கள் குவித்தது.

போலார்ட் 34 ஓட்டம், கோல்டர் நைல் 24 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பஞ்சாப் பந்துவீச்சில் ஷமி, அர்ஷ்தீப் தலா 2, ஜோர்டன், பிஷ்னோய் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

மும்பை அணிக்கு கடைசி 3 ஓவரில் 54 ஓட்டங்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து 20 ஓவரில் 177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சற்றே கடினமான இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது. அணித்தலைவர் கே.எல் ராகுல் 77 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் 6 விக்கெட் இழப்பு பஞ்சாப் அணி 176 ஓட்டங்கள் எடுத்ததால் போட்டி டையானது.

இதையடுத்து நடந்த சுப்பர் ஓவரில் 2 அணிகளும் தலா 5 ஓட்டங்கள் எடுத்ததால் 2ஆவது சுப்பர் ஓவர் கொண்டுவரப்பட்டது.

இதில் மும்பை அணி 1 விக்கெட் இழந்து 11 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து ஆடிய பஞ்சாப் அணி 15 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதில் கேயில் 7 ஓட்டங்கள், அகர்வால் 8 ஓட்டங்கள் அடித்தார்.

# பார்சிலோனா, ரியல் மெட்ரிட் அணிகள் அதிர்ச்சித் தோல்வி



ஸ்பெயினின் பிரபலமான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா, ரியல் மெட்ரிட் அணிகள் அதிர்ச்சித் தோல்வி அடைந்தன.

ஸ்பெயினில் பிரபலமான லா லிகா கால்பந்து போட்டி கடந்த மாதம் ஆரம்பமாகி நடந்து வருகிறது. 20 அணிகள் பங்கேற்றுள்ள இந்த போட்டியில் முன்னாள் சம்பியனான பார்சிலோனா கடந்த சனிக்கிழமை நடந்த கெடாபி கழகத்திற்கு எதிரான ஆட்டத்தில் 0–1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

56ஆவது நிமிடத்தில் கெடாபி வீரர் ஜெமி மாட்டா பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்தார். பார்சிலோனா முன்னணி வீரர்கள் லியோனல் மெஸ்சி, கிரிஸ்மான் நெருங்கி வந்து சில வாய்ப்புகளை கோட்டை விட்டனர்.

இந்தப் பருவத்தில் பார்சிலோனா அணியின் முதல் தோல்வி இதுவாகும். இதுவரை 4 ஆட்டத்தில் விளையாடி 2 வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வி என்று 7 புள்ளியுடன் 9ஆவது இடத்தில் உள்ளது. இதேபோன்று நடப்புச் சம்பியன் ரியல் மெட்ரிட் அணி 0–1 என்ற கோல் கணக்கில் சிறிய அணியான கேடிஸ் அணியிடம் தோல்வியை தழுவியது. கேடிஸ் வீரர் அந்தோணி லோஜனோ 16ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். கேடிஸ் அணி 29 ஆண்டுகளுக்கு பின்னர் முதல்முறையாக ரியல் மெட்ரிட்டை வீழ்த்தியுள்ளது.

ரியல் மெட்ரிட், கெடாபி, கேடிஸ் அணிகள் தலா 10 புள்ளிகளுடன் முதல் 3 இடங்களில் உள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.